இந்து தேச

சரித்திரக்

கதைகள்

STORIES FROM
INDIAN HISTORY

இந்து தேசச்
சரித்திரக் கதைகள்

C. R. NAMASIVAYA MUDALIAR,
Lecturer in Tamil, Queen Mary's College, Madras

APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

MADRAS:
C. COOMARASAWMY NAIDU & SONS
1920

 [Price 6 Annas

இந்து தேசச்
சரித்திரக் கதைகள்

மேரி மகாராணியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய

கா. நமச்சிவாய முதலியார்

எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரெஜிஸ்தர் செய்தது]   1920   [விலை 6 அணா

Printed at
The 'Caxton Press,'
Madras, E.

முகவுரை

இந்தச் சரித்திரப் புஸ்தகம் முற்றும் கதைகளாகவே இயன்றுள்ளது. இது பாட்டனார் பேரனுக்குச் சொல்லும் முறையில் எழுதியிருப்பதனால், சிறுவர்கள் மிகவும் மகிழ்வுடன் வாசித்து விஷயங்களை உணர்வார்கள் என்று நம்புகின்றேன்.

2. கதைகள் ஒன்றை யொன்று தொடர்ந்தே செல்கின்றன. கதைகள் தொடர்ந்துவரப் பேரன் கேட்கும் கேள்விகள் மிகப் பொருத்த முடையனவாகக் காணும். சரித்திர உணர்ச்சிக்கு ஆதாரமான முக்கிய அம்சங்கள் அனைத்தும் இதனுள் அமைந்திருக்கின்றன.

3. இப் புஸ்தகத்திலுள்ள கதைகள் முப்பத்திரண்டு. அவை ஓர் ஆண்டில் சாவகாசமாக நடத்தக்கூடியவைக ளாகும். வாரத்திற்கு ஒரு கதை போதித்தாலும், முழுதும் ஓராண்டில் முற்றுப்பெறும். பொதுவில் இப் புஸ்தகத்தின் மொத்தப் பக்கங்களைக் கணக்கிட்டால் ஒருவாறு அதிகம் என்று தோன்றும். திருஷ்டாந்தப் படங்கள் மிகுதியாக சேர்த்திருப்பதனாலும், ஒவ்வொரு கதையும் முதலில் சம்பாஷணைக் கிரமத்தில் ஆரம்பிப்பதனாலும் அளவில் சிறிது பெருத்துக் காண்கிறது.

4. 'இந்தியாவின் பழைய குடிகள்' என்னும் பாடமும் ஈற்றிலுள்ள இரண்டு பாடங்களும் பாடல்களாக இயன்றுள்ளன. அவை மாணாக்கர்களுக்குப் பெரிதும் மகிழ்ச்சியை உண்டாக்குமென்று நம்புகின்றேன். ஈற்றிலுள்ள பாடல்கள் சென்னை டெல்லி தர்பார் கமிட்டியார் விருப்பத்தின்படி இந்நூலாசிரியர் செய்தவை.

5. உபாத்தியாயர்கள், முன்பு கதையை விளக்கமாகப் பிள்ளைகளுக்குச் சொல்லி, பின்பு அக்கதையைப் பிள்ளைகளைக் கொண்டு நடிக்கச் செய்வது உத்தமம். கடைசியாகப் புஸ்தகத்தை வாசிக்கச் செய்யவேண்டும். சரித்திரம் போதிக்கும் உபாத்தியாயர், போதிக்கும்போதே அந்தந்தச் சந்தர்ப்பங்களுக்கு ஏற்க அபிநயித்துக் காட்டவேண்டும். பிள்ளைகள் கதை கேட்பதாக நினைக்கவேண்டுமேயன்றி, ஒருவாற்றாலும் பாடம் படிப்பதாக நினைத்து வருத்தமடையச் செய்யலாகாது. நீதி போதனைக்கு மற்றப் பாடங்களினும் சரித்திரப் பாடம் சால ஒற்றுமையுடையதென்பது தேர்ந்த ஆசிரியர்களுடைய அபிப்பிராயம்.

கா. நமச்சிவாயன்

பொருள் அடக்கம்



பாட்டனர் பேரனுக்குக் கதை சொல்லுகிறார்.

இந்து தேசச் சரித்திரக் கதைகள்

முன்னுரை — ஆரம்பம்

'தாதா ! "கதை சொல்லுகிறேன், கதை சொல்லு-கிறேன்" என்று எத்தனை நாளாகக் காலங் கடத்து-கிறீர்கள்; ஒரு நாளும் சொல்லவில்லையே. நாளை முதல் எங்களுக்கு ஒன்றரை மாதம் பாடசாலை விடுமுறை; இன்றைக்கு ஏதாவது நல்ல கதை சொல்லுங்கள்; கேட்க ஆவலாக இருக்கிறது' என்றான், முத்து.

'ஆமாம், நான் மறந்துவிட்டேன் ; உனக்கு நல்ல கதைகள் சொல்ல யோசித்திருக்கிறேன். நீ தினந்-தோறும் கேள் ; தினம் ஒவ்வொன்றாகச் சொல்லிக்-கொண்டு வருகிறேன். தினம் ஒரு மணி நேரம் என்னண்டை வந்து உட்காரு ; சொல்லுவதைக் கவனமாகக் கேட்டுக்கொள்' என்றார், பாட்டனார்.

'என்ன கதை ? தாதா ! எத்தனை நாள் சொல்-வீர்கள் ? ஒரே கதையா ? பல கதைகளா ? தாதா ! ஒரு நாளும் விடாமல் சொல்லவேண்டும்' என்று விருப்பத்தோடு கேட்டான், முத்து.

'குழந்தாய்! நான் சொல்லப்போவது கட்டுக் கதைகள் அல்ல; உண்மையாக நடந்த கதைகளே. எந்த நாட்டுக் கதையோ என்று நினையாதே; நமது சொந்த நாட்டுக் கதையே. ஊக்கமாகக் கேள்; உள்ளதை உள்ளபடியே சொல்கிறேன்' என்று சொன்னார், பாட்டனார்.

'நல்லது, தாதா! அப்படியே கேட்கிறேன்' என்று நிமிர்ந்து உட்கார்ந்தான் முத்து. அதன்மேல் தாதா கதை சொல்லத் தலைப்பட்டார்:

'கண்மணீ, முத்து! கருத்துடன் கேள். நான் சொல்லும் கதையை, "ஒரே ஒரு தேசத்தில்—ஒரே ஒரு காலத்தில்—ஒரே ஒரு ராஜாவாம்"—என்று ஆரம்பிக்கமாட்டேன். எந்தக் கதையைச் சொன்னாலும் இன்ன இடத்தில், இன்ன காலத்தில், இன்ன அரசன் செய்தது என்று சொல்லுவேன். அந்த இடமெல்லாம் நமது சொந்த தேசமாகிய இந்து தேசத்திலேயே இருப்பவை. அதனால், முன்பு நீ நமது தேச படத்தைப் பார்த்துக் கவனித்துக்கொள்ளவேண்டும். அதன் இயற்கை அமைப்பையும் ஒருவாறு தெரிந்துகொள்வது நலம்.

'நாம் வசிக்கும் இந்தத் தேசத்திற்கு இந்தியா என்று பெயர். இதன் படத்தைக் கவனித்துப் பார். பல மலைகளும் பல நதிகளும் காணப்படுகின்றன. உற்றுப் பார்த்தால் சற்றேறக்குறைய நமது தேசத்தைச் சுற்றிச் சுவர் வைத்ததுபோல் மலைகள் அமைந்திருக்கின்றன. படத்தின் வடக்குப் புறத்தைப் பார். மலை ஒரே தொடராக நீண்டு இருக்கிறது. அதற்கு ஹிமாலயம் என்று பெயர்.


இந்தியா தேசம்

ஹிமம் என்றால் பனி, ஆலயம் என்றால் வீடு. இந்த மலையின் சிகரம் எந்தக் காலத்திலும் பனியால் மூடுண்டு கிடப்பதால், இதற்கு ஹிமாலயம் என்று பெயர் வந்தது. இது ஏறக்குறைய இரண்டாயிரம் மைல் நீளமுள்ளது. இதன் உயரத்தை உற்றுப் பார்த்தால், மலைச் சிகரம் ஆகாயத்தில் ஊடுருவிச் செல்வதுபோல் தோன்றும்; இந்த மலை சில இடங்களில் இரண்டு மைல் உயரமும், சில இடங்களில் ஆறு மைல் உயரமும் உயர்ந்து இருக்கும்.

'உற்று நோக்கினால், இந்தியாவின் இடையில் ஒரு மலை தோன்றும்; அதற்கு விந்திய மலை என்று பெயர். இமய மலைக்கும் விந்திய மலைக்கும் இடையில் உள்ள பிரதேசத்திற்கு வட இந்தியா என்று பெயர். விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பாகத்திற்குத் தென் இந்தியா என்று பெயர். நான் இனிச் சொல்லப்போகும் கதைகளில் சில வடஇந்தியாவில் நடந்தவை; சில தென் இந்தியாவில் நடந்தவை. நான் சொல்லும்போது அந்தந்த இடங்களை நன்றாய்க் கவனிக்கவேண்டும். ஆகையால், நீ கதை கேட்க வரும்போதெல்லாம் உன்னுடன் இந்தியாப் படம் ஒன்று கொண்டுவா, கதையில் வரும் இடங்களையெல்லாம் அவ்வப்போது அந்தப் படத்தில் காட்டுகிறேன்' என்றார் பாட்டனார்.

'அப்படியே கொண்டுவருகிறேன் தாதா' என்று சொல்லி, விடை பெற்றுக்கொண்டு, முத்து விளையாடப் போனான்.

1. இந்திய சக்ரவர்த்தி

"முத்து! நேற்று நமது தேசத்தைப்பற்றிச் சொன்னேன் அல்லவா? நமது தேசம் பெரிய தேசம். முன் காலத்தில் அநேக அரசர்கள் இந்தத் தேசத்தில் அரசு புரிந்தார்கள். இப்போது நமக்கு அரசராக இருப்பவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் என்று பெயர். ஜார்ஜ் என்னும் பெயர்கொண்டு இவருக்கு முன்பு நான்கு பேர் அரசு புரிந்தமையால் இவருக்கு ஐந்தாம் ஜார்ஜ் என்பது பெயர் ஆயிற்று.

'முத்து! இவர் யார்? எங்கே இருப்பவர்? என்று உனக்குத் தெரியுமா?' என்று கேட்டார், பாட்டனார்.

'தாதா! தெரியும், எங்கள் பாடசாலையில் ஒரு நாள் "டெல்லி தர்பார் கொண்டாட்டம்" நடத்தினார்கள்; நாங்கள் எல்லோரும் சந்தோஷத்துடன் கூடினோம், பாடினோம், ஆடினோம். பல கனவான்கள் கூடி எங்களுக்குத் தின்பண்டங்களும் கொடுத்தார்கள். அன்று, இங்கிலீஷ் ராஜாங்கத்தின் சிறப்புகளையும், அந்த அரசாட்சியில் நாம் அடைந்த நன்மைகளையும், எங்கள் உபாத்தியாயர் எங்களுக்குச் சொன்னார். நமது சக்ரவர்த்தியின் பெயர் ஐந்தாம் ஜார்ஜ் என்றும் சொன்னார். தாதா! அவர் யார்? அவர் நமது தேசத்தில்தானே இருக்கிறார்?' என்று கேட்டான் முத்து.

'முத்து! அவர் நமது தேசத்தில் இல்லை. அவர் இங்கிலந்து தேசத்தில் லண்டன் பட்டணத்தில் இருக்கிறார்; அவர் நமக்குச் சுமார் ஆறாயிரம் மைல் தூரத்தில் இருக்கிறார். அவர் இன்னார் என்பதைச் சொல்லுகிறேன், கவனமாகக் கேள்:

'சுமார் முந்நூறு வருஷ காலமாக இங்கிலீஷ்காரர் நமது தேசத்தில் வந்து நாடுகளை ஜயித்து அரசுபுரிந்து வருகிறார்கள். இங்கிலந்து தேசத்தின் அரசி-



விக்டோரியா மகாராணியார்

யாராகிய விக்டோரியா மகாராணியார் 1858 ஆம் வருஷம் இந்தியாவுக்குச் சக்ரவர்த்தினி ஆனார்கள். அதுமுதல் அந்த மகாராணியாரே நமக்குச் சக்ர-

வர்த்தினியாக விளங்கினர். விக்டோரியா மகாராணியார் சகல சற்குணங்களும் வாய்ந்தவர். குடிகளுக்கு அன்னைபோ லிருந்து லோகமாதாவாக விளங்கினர். அந்த அம்மாளுடைய அரசாட்சியில் இந்தியாவுக்கு அநேக நன்மைகள் உண்டாயின. அந்தத் தேவியார் 64 வருஷம் அரசு புரிந்தனர். இவ்வளவு நீண்ட காலம் ஒருவரும் அரசு புரிந்ததே யில்லை. அந்த மகாராணியார் 1901 ஆம் வருஷம் பரகதி அடைந்தனர்.



ஏழாம் எட்வர்ட் சக்ரவர்த்தி

'விக்டோரியா மகாராணியாருக்குப் பின்பு அவரது மூத்த குமாரராகிய எட்வர்ட் மன்னர் பட்டத்துக்கு வந்தார். இவருக்கு முன்பு எட்வர்ட் என்னும் பெயருடைய மன்னர் அறுவர் அரசு புரிந்தமையால் இவருக்கு ஏழாம் எட்வர்ட் என்பது பெயராயிற்று.



ஜார்ஜ் சக்ரவர்த்தி



மேரி சக்ரவர்த்தினி

அவர் நாடெங்கும் நன்மையே பெருக வேண்டும், சமாதானமே தலையெடுக்கவேண்டும் என்னும் கருத்துடையவர், தமது தாயாருடைய நற்குணங்களைப் பின்பற்றி நடந்தவர். இவர் 1910௵ மேமீ திடீரென்று காலமானார்.

'எட்வர்ட் மன்னருக்குப் பின்பு அவரது மூத்த குமாரராகிய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் அரசாட்சிக்கு வந்தார். அவரே இப்போது இந்தியாவுக்குச் சக்ரவர்த்தியாக விளங்குகிறார். அவரது மனைவியாராகிய மேரி அரசியாரே இந்திய சக்ரவர்த்தினியார்.

'1911௵ டிஸெம்பர்மீ 12௳ டெல்லியில் தர்பாரில் வீற்றிருந்தது உனக்குத் தெரியுமே. அன்று அவர் நமக்கு அநேக நன்மைகள் செய்தார். முதன்மையாகப் பாடசாலைகளைக் கவனித்து, ஐம்பது லக்ஷம் ரூபாய் நன்கொடை அளித்தார். இன்னும் வருஷந்தோறும் இவ்வாறே அளிக்கவும் ஏற்பாடுகள் செய்தார். இவர் இளம் பிராயத்தில் இவ்வுலக முழுவதும் சுற்றி வந்தவர். கப்பல் தொழில் இவருக்குக் கைகண்ட வித்தை. அதனால் இவருக்கு மாலுமி மன்னர் என்னும் பெயரும் வழங்குகிறது. இவர் இந்தியாவுக்கு இரண்டுமுறை விஜயஞ் செய்திருக்கிறார். இவருக்கு இந்திய ஜனங்களின்மேல் அதிக அன்பு உண்டு. அவ்வளவு அன்பு இல்லாவிட்டால், இந்திய சக்ரவர்த்தியாகப் பட்டஞ் சூட்டிக்கொள்ள இவ்வளவு தூரம் வருவாரா? இங்கிலந்து அரசர்களில் இவர்தான் முதல் முதல் இந்தியாவின் தர்பாரில் வீற்றிருந்தவர். இவர் நெடுங்காலம் அரசுபுரியும்படி நாம் கடவுளை வணங்கி வேண்டுவோமாக' என்று சொன்னார் பாட்டனார்.


2. இந்திய ராஜாங்க முறை

'தாதா! நமது சக்ரவர்த்தியோ இங்கிலந்து தேசத்தில் இருக்கிறார்; இங்கிலந்து தேசம் சுமார் ஆறாயிரம் மைல் தூரத்தில் இருக்கிறது என்கிறீர்களே, அவ்வளவு தூரத்தில் இருந்து அவர் நமது நாட்டை எப்படி அரசாட்சி செய்கிறார்? இதைக் கேட்க எனக்கு ஆவல் உண்டாகிறது' என்றான் முத்து.

'குழந்தாய்! நீ கேட்டது நல்ல கேள்வி. நீ புத்தி சாலி. நமது சக்ரவர்த்தி அரசாட்சி செய்யும் முறையைச் சொல்லுகின்றேன் கேள். முன்பு உங்கள் பாடசாலையை நினைத்துக்கொள். அது எப்படி நடத்தப்படுகிறது என்பதைக் கவனி. உங்கள் பாடசாலையில் பல வகுப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் உபாத்தியாயர் இருக்கிறார். எல்லா உபாத்தியாயருக்கும் ஒரு தலைமை உபாத்தியாயர் இருக்கிறார். உங்கள் பாடசாலையை நடத்தும் மானேஜர் வெகு தூரத்திலுள்ள ஓர் ஊரில் இருக்கிறார் என்று வைத்துக்கொள். அவர் எப்படிப் பாடசாலையை நடத்துவார்? சொல், பார்க்கலாம்' என்று கேட்டார் பாட்டனார்.

'ஆம், தாதா! ஒவ்வொரு உபாத்தியாயரும் தம் வேலையைச் செய்துவருகிறார். ஹெட்மாஸ்ட்டர் மற்ற உபாத்தியாயர்கள் செய்யும் வேலையை மேற்பார்வை பார்க்கிறார். மற்றப்படி பாடசாலை விஷயமான சங்கதிகளை ஹெட்மாஸ்ட்டர் மானேஜருக்கு எழுதி அனுப்புகிறார். மானேஜர் சொல்லவேண்டிய விஷயங்களையும் அவர் இருக்கும் ஊரிலிருந்தே எழுதி அனுப்புவார்' என்றான் முத்து.

'முத்து! நீ கெட்டிக்காரன், விஷயங்களை நன்றாய் உணர்ந்திருக்கிறாய். உங்கள் பாடசாலை நடைபெறுவது போலவே இந்த ராஜாங்க முறையும் நடைபெறுகின்றது. வேலைகள் சுலபமாகவும் முறை-



லார்ட் வில்லிங்டன் சென்னைக் கவர்னர்

யாகவும் நடைபெறுவதற்குப் பாடசாலையில் வகுப்புகள் ஏற்பட்டிருப்பதுபோல், துரைத்தனத்தார் தம் காரியங்களைச் சரிவர நடத்துவதற்காக இந்தத்

தேசத்தை அநேக ராஜதானிகளாகவும் மாகாணங்களாகவும் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்புக்கும் ஓர் உபாத்தியாயர் இருப்பதுபோல, ஒவ்வொரு பிரிவுக்கும் ஓர் அதிகாரி உண்டு. அந்த அதிகாரிக்குக் கவர்னர் என்று பெயர். நமது சென்னை ராஜதானிக்கும் ஒரு கவர்னர் இருப்பது உனக்குத் தெரியுமே. இப்படியே மற்ற ராஜதானிகளுக்கும் மாகாணங்களுக்கும் வெவ்வேறு கவர்னர்கள் உண்டு. பல உபாத்தியாயர்களுக்கு ஒரு தலைமை உபாத்தியாயர் இருப்பதுபோலப் பல கவர்னர்களுக்கும் தலைவராக கவர்னர் ஜெனரல் என்னும் ஓர் உத்தியோகஸ்தர் இருக்கிறார். அவருக்கு வைஸ்ராய் என்று பெயர். வைஸ்ராய் என்பதற்கு ராஜப்பிரதிநிதி என்று அர்த்தம். இந்தியாவில் நடக்கும் சகல காரியங்களுக்கும் வைஸ்ராய் என்பவரே அதிகாரி. இவர் இங்கிலந்தில் உள்ள சக்ரவர்த்தியவர்கள் கட்டளைப்படி நடப்பவர்.

'இங்கிலீஷ் துரைத்தனத்தில் எந்த உத்தியோகஸ்தரும் தம் இஷ்டம்போல் காரியங்களைச் செய்ய முடியாது. "இட்டது சட்டம்"! என்பது இக்காலத்தில் செல்லாது. ஒவ்வொரு காரியத்திற்கும் சட்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. ஒவ்வொருவரும் அவற்றின்படி நடக்கவேண்டும். ஒவ்வொரு கவர்னருக்கும் மந்திராலோசனைச் சபை ஒன்று உண்டு. கவர்னர் அச்சபையாருடன் யோசித்தே எந்தக் காரியத்தையும் செய்யவேண்டும். வைஸ்ராய்க்கும் மந்திராலோசனைச் சபை உண்டு. வைஸ்ராய் தமக்குக் கீழுள்ள பல கவர்னர்களுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு, தமது மந்திராலோசனைச் சபையாருடன் கலந்து யோசித்து, ராஜ்யகார்யங்களை நடத்தவேண்டும்.



செம்ஸ்போர்ட் பிரபு - இந்தியாவின் வைஸ்ராய்


'இந்தியாவுக்கு இன்னொரு முக்கியமான உத்தியோகஸ்தர் இருக்கிறார். அவருக்குப் பிரதம சேனாபதி என்று பெயர். அவர் இந்தியாவில் உள்ள சேனைகளுக் கெல்லாம் தலைவர். வைஸ்ராயின் ஆலோசனைச் சபையாரில் பிரதம சேனாபதி மிகவும் முக்கியமானவர். சேனைகள் இல்லாவிட்டால் தேசம் சீர்குலைந்துவிடும். வேறு தேசத்து அரசர்கள் படையெடுத்து வந்து, நம்முடைய தேசத்தில் புகுந்து கொள்ளை யடிக்காமல் காப்பதற்குச் சேனைகள் மிகவும் உபயோகமானவை. விரோதிகள் கடல் மார்க்கமாக வந்து நாட்டில் புகாமல் காப்பதற்குக் கப்பற் சேனையும் உண்டு.

'சக்ரவர்த்தியும் தம் இஷ்டம்போல் எதையும் செய்ய முடியாது. சக்ரவர்த்தி பார்லிமெண்ட்டு என்னும் சபையாரோடு ஆலோசித்தே எதையும் செய்யவேண்டும். இந்தியாவின் சம்பந்தமான விஷயங்களை எடுத்துச் சொல்ல இந்திய காரியதரிசி என்று ஓர் உத்தியோகஸ்தர் லண்டன் நகரத்தில் இருக்கிறார். அதனால்தான் குடிகளுக்கு எந்த வகையிலும் இடையூறில்லாமல் காரியங்கள் நடந்துவருகின்றன. இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஆங்கில அரசாட்சி எக்காலத்திலும் ஓங்கி நிலைபெறும்படி நாம் வாழ்த்துவோமாக' என்றார் பாட்டனார்.

3. இந்தியாவின் பழைய குடிகள்

'தாதா! சுமார் முந்நூறு வருஷங்களாக அங்கிலேயர் நமது தேசத்தை ஜயித்து ஆண்டு வருவதாகச் சொன்னீர்களே, அதற்கு முன் இந்தத் தேசத்தை ஆண்டுகொண்டு இருந்தவர்கள் யார்? அதைச் சொல்லுங்கள்' என்றான் முத்து.

'முத்து! நீ கேட்பது சரிதான். அதைச் சொன்னால், அதற்கு முன் ஆண்டவர்கள் யார்? என்னும் சந்தேகம் உண்டாகும். பின்னும், அதற்கு முன்பு ஆண்டவர்கள் யார்? என்றும் கேட்க நேரிடும். அப்படி வேண்டாம், மிகப் பழைய காலத்தில் நம்முடைய தேசம் இருந்த நிலையையும் அதன் பிறகு இங்கே வந்தவர்களையும், அரசு புரிந்தவர்களையும் முறையாகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். அப்போதுதான் அது உனக்குச் சரியாக ஞாபகத்தில் நிற்கும்' என்று சொன்னார் பாட்டனார்.




கற்களால் செய்த ஆயுதங்கள்.

'ஆம், தாதா! அதுவும் சரிதான், அப்படியே சொல்லுங்கள், கேட்கிறேன்' என்றான் முத்து.

'முத்து! மிகப் பழைய காலத்தில் நமது தேசம் காடு அடர்ந்திருந்தது; அக்காலத்தில் நாகரிகம் இல்லாத சில மனிதர் இங்கே வசித்திருந்தார்களாம். அவர்கள்,

வீடு வாசல்கள் இன்றி, மரங்களையும் செடிகளையும் புதல்களையும் தமக்கு வாசஸ்தானமாகக் கொண்டு இருந்தார்களாம். அவர்கள் முதலில் கற்களையே ஆயு-



நீலகிரியிலுள்ள குறும்பர்

தங்களாகக் கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறது. அவர்களைப்பற்றி இன்னும் விபரமாக ஒன்றும் நமக்-குத் தெரியவில்லை. நீலகிரி முதலிய சில இடங்களில் இப்போது இருக்கும் குறும்பர்கள் அந்த மனிதர்-

களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகின்றது. பிறகு இந்தத் தேசத்தில் வந்தவர்களைப்பற்றி எனக்கு ஒரு பாடல் தெரியும். அதைச் சொல்லுகிறேன், கற்றுக்கொள்.

(கும்மிப் பாடல்)

1. 'உலகி லுள்ள மனிதர் தமக்கெல்லாம்
உரிய முன்னோர் முன்காலத்திலே
நிலவும் ஆசியா கண்டத்தின் மத்தியில்
நிலைத்து வசித் திருந்தார்கள்.



வடமேற்குக் கணவாய்

2. ஆறுகள் ஏரிகள் இல்லாமலும் பனி
அதிகமாயும் இருந்தமையால்
சேறுசெய்து பயிரிட்டுப் பிழைக்கவும்
சேருங் கால்நடைகள் ஜீவிக்கவும்.


இந்தியா தேசம்

3. மார்க்க மில்லாம லொருவகுப்பார் ஆடு
மாடுகளோடந்த நாட்டை விட்டு
ஊக்கமுடன் வடமேற்குக் கணவாயின்
உட்புகுந்தே இந்தியாவில் வந்தார்.

4. சிந்து நதியினைக் கண்டார்கள் பின்னும்
சிறந்த கங்கையைக் கண்டார்கள்
அந்த நதிகளுக் கிடையிற் செழுமை
யான நிலத்தில் வசித்தார்கள்.

5. கன்று காலிகளைக் காத்தார்கள் பலன்
காணப் பயிரிட்டு வாழ்ந்தார்கள்
என்று மிதுவே நமக்குச் சுகந்தரும்
இடமென் றுள்ளம் மகிழ்ந்தார்கள்.

6. மத்திய ஆசியா கண்டத்தி லிருந்த
மற்றோர் வகுப்பினர் பின்னாளில்
இத்திசை நாடிமுன் வந்தோர் வழிபற்றி
இந்தியா நாட்டை அடைந்தார்கள்.

7. தமக்கு முன்பு குடியேறிச் செல்வம்
தழைத் திருப்போரைத் தாம்பார்த்து
நமக்கே இந்நிலம் வேண்டுமென்று மனம்
நாடிப் போர்செய்து துரத்திடவே.

8. சண்டைசெய்ய வலியில்லாமல் முன்பு
தங்கினோர் தெற்குத் திசையோடக்
கண்ட எதிரிகள் அவர்களை யேசிக்
காட்டித் திராவிடர் என்றார்கள்.

9. அந்தவிடத்தில் ஜயங்கொண்டு நிலைத்தோர்
ஆரியர் என்னும் பெயர் பூண்டு
சந்ததமும் சுக சம்பன்னராய் வேத
சாஸ்திரமும் பல கண்டார்கள்.

10. ஆரியராகும் ஒரே வகுப்பார் தமக்
கான தொழில்களுக் கேற்றபடி
சீரிய நான்கு வகுப்பா யவரவர்
செய்யும் தொழிலும் வகுத்துக் கொண்டார்.

11. கல்விகற்று வேதமோதி யாகஞ் செய்து
கடவுளைத் தொழுவோர் பிராமணராம்
வில்லும் அம்புங்கொண்டு போர்புரிந்து வெல்லும்
வீரரே பாராளும் க்ஷத்ரியராம்.

12. பூமிதிருத்திப் பயிரிடு வோரும் பின்
பொருள் பலகொண்டு விற்போரும்
க்ஷேமம் தம்மவர் பலர்க்கும் நிலவிடச்
செய்யு மவர்களே வைசியராம்.

13. இவ்வகை மூன்று வகுப்பாரும் தமக்
கேவும் தொழில்களைச் செய்துகொண்டு
ஒவ்வி யவர்கள் உரைத்த முறைபோல்
உழைத்து வருவோரே சூத்திரராம்.

14. இந்த வகையாய் பிரிந்ததுவே ஜாதி
யென்று பெயர்வைத்த ததுமுதலாய்
பந்தமுடனே அவரவர் தொழிலைப்
பாங்குடன் செய்து வசித்திருந்தார்.

15. தென்திசை யோடிய திராவிடர் தமிழ்
தெலுங்கு கன்னடம் மலையாளம்
ஒன்றும் துளுவம் எனும் ஐந்து பாஷைகட்
குரிய ராகிப் பிரிந்திருந்தார்'

என்று பாடினார் பாட்டனார்.

'தாதா! திராவிடர் முதலில் கங்கை நதியின் சம வெளியில்தானே தங்கி யிருந்தார்கள்? ஆரியர் வாரா-

விட்டால் அவர்கள் அங்கேயே இருந்திருப்பார்கள் அல்லவா?' என்று கேட்டான் முத்து.

'இல்லை, திராவிடரில் ஒரு வகுப்பார் கங்கை நதியின் சம வெளியில் தங்கியிருந்தார்கள். சிலர் நெடுங்காலத்திற்கு முன்பே தென் இந்தியாவுக்கு வந்து நிலைத்து, ராஜ்யங்கள் ஏற்படுத்திக்கொண்டு மிகவும் நாகரிகத்தோடு வாழ்ந்திருந்தார்கள்' என்றார் பாட்டனார்.

'சரிதான், சந்தேகம் தீர்ந்தது, தாதா' என்று சொன்னான் முத்து.

4. ராமாயணம் - I


'தாதா! ஆரியரில் நான்கு வகையான ஜாதியார் இருந்தார்கள்; அவர்களில் க்ஷத்திரியர்கள் போர் செய்து, பூமியை ஆண்டுவந்தார்கள் என்று சொன்னீர்களே, அவர்களில் எத்தனை அரசர்கள் நமது தேசத்தை ஆண்டார்கள்?' என்று கேட்டான் முத்து.

'குழந்தாய்! அநேக அரசர் ஆண்டார்கள். அந்த அரசர்கள், சூரிய குலத்து அரசர், சந்திர குலத்து அரசர் என இரண்டு பிரிவாகப் பிரிந்து இருந்தார்கள். சூரிய குலத்து அரசர்களுக்குள் தசரதர் என்பவர் சிறந்த வீரர், சத்தியசீலர், நெடுங்காலம் அரசாண்டவர். அவருக்கு நான்கு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவர் பெயர் ஸ்ரீராமர். அவரைப்பற்றிய சரித்திரம் ஒன்று சொல்லுகிறேன், கேள்:

'தசரத சக்கரவர்த்திக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்று மூன்று மனைவியர் இருந்தனர். நெடுநாள்வரையில் ஒருவருக்கும் குழந்தை பிறக்க-

வில்லை. முடிவில் கடவுள் அருளால் கோசலை வயற்றில் ஒரு பிள்ளையும் கைகேயி வயிற்றில் ஒருபிள்ளையும், சுமித்திரை வயிற்றில் இரண்டு பிள்ளைகளும் பிறந்தனர். கோசலையின் பிள்ளைக்கு ஸ்ரீராமன் என்றும், கைகேயியின் பிள்ளைக்கு பரதன் என்றும், சுமித்திரையின் பிள்ளைகளில் மூத்தவனுக்கு லக்ஷ்மணன் என்றும், இளையவனுக்கு சத்ருக்னன் என்றும் நாமகரணஞ் செய்தார்கள். சுமித்திரையின் பிள்ளைகளில் லக்ஷ்மணன் ராமனேடும், சத்ருக்னன் பரதனேடும் சேர்ந்து இருப்பார்கள். அதனுல் ராமலக்ஷ்மணர், பரத-சத்ருக்னர் என்று இணைத்துச் சொல்வது வழக்கம்.

'ராமருக்குப் பதினறு வயது ஆயிற்று. அப்போது விசுவாமித்திர முனிவர் தசரதரிடம் வந்து, தாம் செய்யும் யாகத்திற்கு உதவியாக ராமனை அனுப்பும்படி கேட்டார். தசரதர் தம் உயிருக்கு உயிரான ராமனைப் பிரிந்திருக்க மனம் இல்லாமல் வருந்தினர். பிறகு, தசரதர் தம் குலகுருவாகிய வசிஷ்டர் இட்ட கட்டளையின்படி ராமரையும் லக்ஷ்மணரையும் விசுவாமித்திர முனிவருடன் அனுப்பினர். மூவரும் அயோத்தியைவிட்டுக் காட்டைக் கடந்து செல்லும் வழியில் ஒரு பெரிய பாலைவனம் இருந்தது; அங்கே வசித்துக்கொண்டிருந்த தாடகை என்னும் கொடிய ராக்ஷஸி ஒருத்தி இவர்களை எதிர்த்துக் கொல்ல வந்தாள். அவளை, முனிவர் ஏவலின்படி, ஸ்ரீராமர் அம்பு எய்து கொன்ருர். அதைக் கண்ட முனிவர் மிகவும் சந்தோஷமடைந்து, ஸ்ரீராமருக்கு அநேக அஸ்திரங்களை உபதேசித்துக் கொடுத்தார்.



விசுவாமித்திரரும் ராமலக்ஷ்மணரும்.

'பிறகு விசுவாமித்திரர், ராம லக்ஷமணரோடு தமது ஆசிரமத்தை அடைந்து, யாகம் செய்ய ஆரம்பித்தார். அதைக் கெடுக்க மிகவும் கொடியவர்களான சுவாகு, மாரீசன் என்னும் இரண்டு ராக்ஷஸர்கள் வந்தார்கள். ஸ்ரீராமர் அவர்களில் சுவாகு என்பவனைக் கொன்றார்; மாரீசனைத் துரத்திவிட்டார். முனிவர் தம் யாகம் முடிந்ததும் ராம லக்ஷமணரை மிதிலை என்னும் நகரத்திற்கு அழைத்துக்கொண்டு போனார். அங்கே ஜனக மகாராஜர் அரசாட்சி செய்துகொண்டிருந்தார். அவருக்குச் சீதை என்னும் ஒரு பெண் உண்டு. ஜனகர் தம்மிடம் இருந்த ஒரு வில்லை வளைத்து, நாண் ஏற்றுகிறவனுக்கு அப் பெண்ணைக் கொடுப்பதாக நிச்சயித்திருந்தார். அந்த வில்லை வளைக்க அநேகர் முயன்றார்கள், ஒருவராலும் முடியவில்லை. விசுவாமித்திரர் அந்த வில்லை ராமருக்குக் காட்டினார். ராமர் விரைந்து சென்று வில்லைக் கையில் எடுத்தார், வளைத்தார், நாணேற்றினார், வில் மளுக்கென்று இருதுண்டாக முறிந்துவிட்டது. கண்டான் ஜனகன், தன் எண்ணம் கைகூடிற்று என்று களித்தான். பிறகு, ஸ்ரீராமருக்கும் சீதைக்கும் சம்பிரமமாக விவாகம் நடந்தேறியது.

'ராமர் தம் மனைவியுடன் மிதிலையை விட்டு, அயோத்திக்கு வந்து, சிறிதுகாலம் வசித்திருந்தார். தசரதருக்கு வயோதிகம் வந்துவிட்டது; அதனால் ராமருக்குப் பட்டங் கட்டவேண்டுமென்று தீர்மானித்தார். அதைத் தம் மந்திரி முதலானவர்களுக்கு வெளியிட்டார்; அவர்கள் அனைவரும் சந்தோஷத்துடன் உடன்பட்டார்கள்.

"ராமருக்குப் பட்டாபிஷேகம் என்பதைக் கைகேயியின் வேலைக்காரியாகிய மந்தரை கேள்விப்பட்டாள். மந்தரைக்கு மனம் சகிக்கவில்லை. ஸ்ரீராமர் சிறுவராக இருந்தபோது, மந்தரையை விளையாட்டாக உண்டை வில்லால் அடிப்பது வழக்கம். மந்தரை அதைப் பெருங்குற்றமாகப் பாராட்டி, ஸ்ரீராமருக்கு ஏதேனும் இடையூறு செய்யச் சமயம் பார்த்திருந்தாள்; அதற்கு இதுவே சமயம் என்று தீர்மானித்தாள். மந்தரை உடனே ஓடிக் கைகேயிக்குத் தெரிவித்தாள். கைகேயி ஸ்ரீராமரிடம் அதிக பக்ஷமுள்ளவளாகையால், பட்டாபிஷேகம் என்று கேள்விப்பட்டதும் சந்தோஷித்தாள். பிறகு மந்தரை கைகேயிக்கு அநேக துர்ப்போதனைகள் செய்து, கைகேயியின் மனத்தைக் கரைத்து விட்டாள். பட்டம் பரதனுக்குக் கட்டும்படி செய்யவேண்டும் என்பது மந்தரைக்கு எண்ணம். அந்த எண்ணத்தைத் தன் அரசிக்குச் சொல்லி, அவளைத் தன் வசப்படுத்திக்கொண்டாள். தசரதர், கொஞ்ச காலத்திற்கு முன்பு, வேண்டும்போது இரண்டு வரங்கள் கொடுப்பதாகக் கைகேயிக்கு வாக்குக் கொடுத்திருந்தார். அந்த இரண்டு வரங்களையும் இப்போது பெற்றுக்கொள்ளும்படி மந்தரை கைகேயியைத் தூண்டிவிட்டாள்.

'தசரதர் கைகேயி அரண்மனையில் புகுந்தார். கைகேயி அதிக துக்கத்துடன் ஓர் அறையில் படுத்திருந்தாள். தசரதர் அவளைத் தேற்றி விசாரித்தார். கைகேயி தனக்குச் சேரவேண்டிய இரண்டு வரங்களையும் வழங்கும்படி தசரதரைக் கேட்டாள். கொடுத்த வரங்களை மறுக்க முடியாமல், தசரதர்

அவற்றைக் கொடுக்க உடன்பட்டார். அதன்மேல் கைகேயி, பரதனுக்குப் பட்டங் கட்டுவது முதல் வரம் என்றும், ராமரைப் பதினன்கு வருஷங் காட்டிற்கு அனுப்புவது இரண்டாவது வரம் என்றும் சொன்னுள். அதைக் கேட்டதும் தசரதர் உணர்வற்று மண்ணில் சாய்ந்தார். பிறகு, கைகேயி ராமரை அழைப்பித்துப் பதினன்கு வருஷம் காட்டிற்குப் போகும்படி உன் தந்தை கட்டளையிட்டார் என்று கூறினுள். அதைக் கேட்டதும் ராமர் சந்தோஷத்துடன் காட்டிற்குப் போகப் புறப்பட்டார். தன் கணவனை விட்டுப் பிரிந்து இருக்க மனமில்லாத சீதை தானும் காட்டுக்குப் போகத் துணைப்பட்டாள். தன் தமையனரை விட்டுச் சற்றும் பிரிந்து அறியாத லக்ஷ்மணனும் அவரைப் பின்தொடர்ந்தான். மூவரும் ராஜகோலத்தை நீக்கி, கைகேயி கொடுத்த மரவுரியை உடுத்துக்கொண்டு காட்டுக்குப் போனர்கள். ஸ்ரீராமர் காடு சென்றார் என்று கேள்விப்பட்டதும் தசரதர் உயிர் துறந்தார் ; நகர மாந்தரும் மனம் கலங்கி வருந்தினர்கள்.

'இவ்வளவுக்கும் பரதன் ஊரில் இல்லை. பின்பு ராமருக்குப் பட்டாபிஷேகம் என்று கேள்விப்பட்டு, பரதன் தன் பாட்டனரது நாட்டிலிருந்து அயோத்திக்கு வந்தான் ; வந்ததும் இந்த அனர்த்தங்களைக் கேள்விப்பட்டான். தன்னையும் தன் தாயாரையும் மிகவும் நொந்துகொண்டான் ; அதிகமும் விசனப்பட்டான். உடனே புறப்பட்டுப் போய் காட்டில் தன் தமையனரைக் கண்டான், அழுதான், தொழுதான், நாட்டுக்கு வரும்படி வேண்டினன். ஸ்ரீராமர் அவனைத் தேற்றி, "தந்தை வாக்கைத் தட்டி

நடப்பது தருமம் அன்று ; பதினன்கு வருஷங்களைப் பதினன்கு நாட்களாகக் கழித்துவிட்டு வருகிறேன்" என்று சொன்னர். பிறகு பரதன் ஸ்ரீராமரது பாதுகையைப் பெற்றுக்கொண்டுபோய் அதற்குப் பட்டங் கட்டிவிட்டு, தான் பிரதிநிதியாக இருந்து அயோத்தியை ஆண்டுவந்தான்.

5. ராமாயணம் - II

'ஸ்ரீராமரும் சீதையும் லக்ஷ்மணரும் காட்டில் வசித்திருந்தார்கள். அந்த காட்டுக்குத் தண்டகாரண்யம் என்று பெயர். அங்கே சூர்ப்பணகை என்னும் ஒரு ராக்ஷஸி இருந்தாள். அவள் ஸ்ரீராமரைக் கண்டாள் ; கண்டு, அவரை விவாகம் செய்துகொள்ள எண்ணம் கொண்டாள். அவள் தன்னல் ஆனமட்டும் முயற்சி செய்தாள் ; ராமர் இசையவில்லை. ஸ்ரீராமர் சீதையைத் தவிர வேறு பெண்களைக் கண்ணெடுத்தும் பாராதவர். அவர் ராக்ஷஸியை மணந்துகொள்ள இசைவாரா ? அருகில் சீதை இருப்பதனல் ஸ்ரீராமர் தன்னை விரும்பவில்லை என்று சூர்ப்பணகை எண்ணி, சீதையைத் தூக்கிக்கொண்டுபோய் கொன்றுவிட முயற்சி செய்தாள். அதை யுணர்ந்த லக்ஷ்மணன் சூர்ப்பணகையின் மூக்கை அறுத்துத் துரத்திவிட்டான். அவள் அழுதுகொண்டேபோய், தனக்குக் காவலாளிகளாக இருந்த கரன், தூஷணன் ஆகிய இருவரிடத்திலும் முறையிட்டாள். அவர்கள் இருவரும் ஸ்ரீராமரோடு சண்டைக்கு வந்தார்கள். ஸ்ரீராமர் அந்த இரண்டு ராக்ஷஸர்களையும் அம்பு எய்து கொன்றுர்.

'சூர்ப்பணகைக்குத் தமையன் ஒருவன் உண்டு. அவன் பெயர் ராவணன் அவன் லங்கைத் தீவில் அரசு செய்துகொண்டு இருந்தான். அவன் அதிக பராக்கிரமசாலி. சூர்ப்பணகை அவனிடத்தில் போய், "அண்ணு! ஓர் அழகான ஸ்திரீ தண்டகாரண்யத்தில் இருக்கிறுள்; உனக்கு அவளே ஏற்ற மனைவி" என்றுள். அதுகேட்டு ராவணன் சீதைமேல் ஆசை கொண்டான். பிறகு ராவணன் அருகில் இருந்த மாரீசன் என்னும் தன் மாமனை யழைத்து, "சீதையை விட்டு ராமன் பிரிந்து போகும்படி ஏதாவது உபாயம் செய்" என்று சொன்னுன். ராமன் பலத்தை யறிந்த மாரீசன் முதலில் அதற்கு உடன்படவில்லை. அவனை ராவணன் நிர்ப்பந்தப்படுத்தினுன். அதன்மேல் மாரீசன் இசைந்து ஒரு பொன்மானுக வடிவெடுத்து, சீதை யிருக்கு மிடத்தில் வந்து உலவிக்கொண்டிருந்தான். சீதை அந்த அழகான மானைக் கண்டு அதைப் பிடித்துக் கொடுக்கும்படி ஸ்ரீராமரை வேண்டினுள். ஸ்ரீராமரும் அதற்கு உடன்பட்டு, அந்த மானைத் துரத்திக்கொண்டு போனுர்; மானும் கொஞ்சங் கொஞ்சமாக நெடுந்தூரம் போய்விட்டது. மான் கைக்கு அகப்படாமையால், ஸ்ரீராமர் அதை அம்பு எய்து கொன்றுர். மான் அம்பு பட்டு விழும்போது, 'சீதா லக்ஷ்மணு' என்று கூப்பிட்டது. அந்தச் சத்தம் சீதைக்குக் கேட்டது. கேட்டதும், சீதை மனங் கலங்கி லக்ஷ்மணனைத் தமையனுரிடம் போகும்படி ஏவினுள். லக்ஷ்மணன் அவருக்குத் துன்பம் ஒன்றும் வாராதென்று சொல்லியும் சீதை கேட்கவில்லை. அதனுல், லக்ஷ்மணன் தன் தமையனுரைத் தேடிக்கொண்டு போய்விட்டான்.

'சீதை தனியே யிருந்தாள். அப்போது ராவணன் ஒரு சந்நியாசிபோல் வேஷங்கொண்டு சீதை யிருந்த பர்ணசாலையில் வந்து பிக்ஷை கேட்டான். சீதை பிக்ஷையிட வெளியே வந்தாள். உடனே



ராவண சந்நியாசி

ராவணன் சீதையை தூக்கித் தன் ரதத்தில் வைத்துக்கொண்டு லங்கைக்குக் கொண்டுபோய் அசோகவனம் என்னும் ஓர் இடத்தில் சிறை வைத்திருந்தான்.

'ராம லக்ஷ்மணர் திரும்பி வந்தார்கள்; பர்ணசாலையில் நுழைந்தார்கள்; சீதையைக் காணவில்லை. சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள்; உரத்து உரத்துக்

கூப்பிட்டார்கள். ஏன் என்பார் ஒருவரும் இல்லை. ஏதோ மோசம் நடந்ததாக எண்ணினார்கள். பிறகு, ராமர் துக்கிக்க ஆரம்பித்தார்; அவரைக் கண்டு லக்ஷ்மணரும் அழ ஆரம்பித்தார். துன்பம் வந்தால் தொடர்ந்து வரும் என்பதற்கு இதைவிட வேறு திருஷ்டாந்தம் வேண்டுமா!

'ராமரும் லக்ஷ்மணரும் சீதையைத் தேடிக் காடெல்லாம் திரிந்தார்கள். அங்கே ஓர் இடத்தில் ஒரு வகையான ஜாதியார் இருந்தார்கள். அவர்கள் மலைகளிலும் மரங்களிலும் வசித்திருந்தார்கள். ராம லக்ஷ்மணர் அவர்கள் இருந்த கோலத்தைக் கண்டு, அவர்களைக் குரங்குகள் என்று மதித்தனர்; பிறகு அங்கிருந்த ஒரு மலையை அடைந்தனர். சுக்ரீவன் என்பவன் தன் சகோதரனை வாலிக்குப் பயந்து அந்த மலையில் ஒளித்திருந்தான். அவன் ராம லக்ஷ்மணரைக் கண்டு, தன் தமையன் ஏவலினால் தன்னைக் கொல்ல வருகிறவர்கள் என்று எண்ணினான். பிறகு, அவன் அனுமான் என்பவனை அவர்களிடம் தூது அனுப்பினான். அனுமான் ராம லக்ஷ்மணரை இன்னார் என்று உணர்ந்து, அவர்களோடு சிநேகம் செய்துகொண்டான். பிறகு, சுக்ரீவன் ராமலக்ஷ்மணருக்கு இஷ்டனானான்; சுக்ரீவனுக்காக ஸ்ரீராமர் வாலியை வதை செய்தார்.

'பின்பு சுக்ரீவன் சீதையைத் தேடும்படி பல திசைகளிலும் ஆட்களை அனுப்பினான். பலரும் பல திசையில் புகுந்து சீதையைத் தேடினார்கள்; ஒருவரும் காணவில்லை. முடிவில் அனுமான் வந்து, சீதை லங்கையில் அசோக வனத்தில் சிறை யிருப்பதாக ராமருக்குத் தெரிவித்தான். ஸ்ரீராமர், சீதையை

விட்டுவிடும்படி ராவணனுக்குத் தூதுகள் அனுப்பினர்: அவன் கேட்கவில்லை. அப்போது, ராவணன் தம்பியாகிய விபீஷணனும் தன் தமையனுக்குப் பல நீதிகள் கூறினன். அவன் ஒன்றையும் லக்ஷ்யம் செய்யவில்லை. கெடுமதி கண்ணுக்குத் தோற்றுமா! பிறகு, ஸ்ரீராமர் அநுமான் முதலானவர்களுடைய உதவியினல், கடலுக்கு அணைகட்டி, லங்கையில் சென்று, ராவணனேடு யுத்தம் செய்தார். ராவணன் தன்னல் ஆனமட்டும் முயன்று போர் செய்தான். முடிவில் ராவணன் தோல்வியடைந்து, ஸ்ரீராமரது அம்பினல் மரணமடைந்தான். பிறகு ஸ்ரீராமர் சீதையைச் சிறை மீட்டுக்கொண்டு அயோத்திக்கு வந்து, நெடுங்காலம் அரசுபுரிந்துகொண் டிருந்தார்.

'இந்த விஷயங்களை ராமாயணம் என்னும் நூலில் விவரமாகக் காணலாம். இதை ஸம்ஸ்கிருதத்தில் செய்தவர் வால்மீகி; தமிழில் செய்தவர் கம்பர்' என்றார் பாட்டனர்.

6. மகாபாரதம்

'தாதா! நேற்று சொன்ன கதை வெகு நேர்த்தியாக இருந்தது. கேட்கக் கேட்க விருப்பம் உண்டாயிற்று. அதை மற்றொரு நாள் விவரமாகச் சொல்லுங்கள். சூரிய வம்சம், சந்திர வம்சம் என்னும் இரண்டு வம்சங்களில் இப்போது சூரிய வம்சத்து அரசர்களில் ஒருவரைப்பற்றிச் சொன்னீர்கள். சந்திர வம்சத்தில் இப்படி ஒருவரும் இல்லையோ?' என்று கேட்டான் முத்து.

'முத்து! உனக்கு நல்ல ஞாபக சக்தி இருக்கிறது. கதை சொன்னால் உன்னைப்போன்ற பிள்ளைகளுக்குத்தான் சொல்ல வேண்டும்; சந்திர வம்சத்து அரசர்களைப்பற்றி ஒரு கதை சொல்லுகிறேன் கவனமாகக் கேள்' என்று பாரதக் கதை சொல்ல ஆரம்பித்தார் பாட்டனார்.

சந்திர குலத்து அரசர்களில் பரதன் என்பவன் ஒருவன் இருந்தான். ராமாயணத்தில் சொன்னேனே அந்தப் பரதன் என்று நினைத்துக் கொள்ளாதே. இவன் வேறு பரதன். இவன் வம்சத்தில் பாண்டு என்றும் திருதராஷ்டிரன் என்றும் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குப் பரதவம்சத்தார் என்று பெயர். பரத வம்சத்தார் சரித்திரம் கூறும் நூலுக்குப் பாரதம் என்று பெயர்.

'பாண்டுவுக்கு மைந்தர் ஐந்து பேர். இவர்களுக்குப் பாண்டவர் என்று பெயர். திருதராஷ்டிரனுக்குப் புத்திரர் நூறு பேர். இவர்களுக்குக் கௌரவர் என்று பெயர். பாண்டவரில் பெரியவர் தருமர்; கௌரவரில் பெரியவன் துரியோதனன். தருமர் தம் பெயருக்குத் தக்கபடி தருமமே ஜயம் என்று இருப்பவர். அவரது தம்பியாகிய பீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய நால்வரும் தமையனார் வார்த்தையைத் தட்டாமல் நடந்துவந்தார்கள். துரியோதனன் துஷ்டன், பொறுமையுள்ளவன், பங்காளிக் காய்ச்சல் என்பது அவனிடத்தில் குடிகொண்டு இருந்தது. அதனால், துரியோதனன் பாண்டவர்களை ஏமாற்றி, அவர்கள் ராஜ்யத்தையும் தான் அபகரித்துக்கொள்ள எண்ணி, ஏற்ற சமயம் எதிர் பார்த்திருந்தான்.

'கொஞ்ச காலத்திற்குப் பின்பு துரியோதனன் ஓர் அரண்மனை கட்டினான். அதில் கிருகப் பிரவேசம் செய்யப் பாண்டவரை வரவழைத்தான். பாண்டவர் ஐவரும் வந்தார்கள். அவர்கள் தம் மனைவியாகிய திரௌபதியையும் அழைத்து வந்தார்கள். கிருகப் பிரவேசம் மிகவும் ஆடம்பரமாக நடை பெற்றது. அங்கே அனைவரும் விருந்துண்டு அமர்ந்திருந்தனர். அப்போது துரியோதனன் விளையாட்டாகக் காலம் கழிக்கச் சொக்கட்டான் ஆடலாம் என்று தருமரிடஞ் சொன்னான்; தருமர் அதற்கு உடன்பட்டார்.

'துரியோதனனுக்கு மாமன் ஒருவன் இருந்தான்; அவன் பெயர் சகுனி. அவன் சூதாடுவதில் கை தேர்ந்தவன்; சொன்னது போலவே பந்தயம் போடுவான். அவன் துரியோதனன் பக்கம் உட்கார்ந்தான். தருமர் அவனோடு சொக்கட்டான் ஆடத் தலைப்பட்டார். முன்பு பெருந்தொகையான பொருளைப் பந்தயம் வைத்தார்கள். அதில் தருமர் தோல்வி அடைந்தார். பிறகு நாடுகள், படைகள் எல்லாம் ஒவ்வொன்றாகப் பந்தயத்தில் போயின. பின்பு தருமர், தம்மையும், தம்பியரையும் தமது மனைவியையும் பந்தயமாக வைத்து ஆடினார். அதிலும் தருமர் தோல்வியடைந்தார். சூதில் உட்கார்ந்தால் சும்மா விடுமா — எல்லாவற்றையும் துடைத்துவிடும் அல்லவா — ஐயோ, முடிவில் பஞ்ச பாண்டவர் பஞ்சைகளாக நின்றார்கள். தருமர் தாம் யோசியாமல் செய்த காரியத்தின்பொருட்டுத் துக்கித்தார். தம்பியர் நால்வரும் அவருக்குத் தைரியங் கூறினர். பிறகு துரியோதனன் பாண்டவர்களைப் பார்த்து, "நீங்கள் பன்னிரண்டு வருஷம காட்டில் வசித்து,

ஒரு வருஷம் எவர் கண்ணிலும் படாமல் மறைந்திருந்து, பதினான்காம் வருஷ ஆரம்பத்தில் வந்தால், உங்கள் நாட்டை உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன்'' என்றான். அதைக் கேட்டு, தருமரும் தம்பியர் நால்வரும் திரௌபதியும் காட்டிற்குச் சென்றார்கள்.

"ஆறு பேரும் பன்னிரண்டு வருஷம் காட்டில் கஷ்டகாலம் கழித்தார்கள். அந்தக் காலத்தில் துரியோதனன் அவர்களுக்கு அநேக இடையூறுகள் செய்தான். ஒரு முறை அவர்களைக் கொல்லவும் வழி தேடினான். கடவுள் அருளால் அந்த ஆபத்திற்குப் பாண்டவர்கள் தப்பினார்கள். பிறகு பாண்டவர்களும் திரௌபதியும் வேற்றுருவங் கொண்டு விராட நகரம் என்னும் ஊரில் மறைந்து வசித்திருந்தார்கள். துரியோதனன் அவர்களைக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயன்றான், முடியவில்லை.

'பாண்டவர் பதினான்காம் வருஷத்தின் ஆரம்பத்தில் நிஜரூபங்கொண்டு, கிருஷ்ண பகவானைத் துரியோதனனிடம் அனுப்பித் தமக்குரிய பங்கைக் கேட்டார்கள். துரியோதனன் துரும்பும் கொடுக்க மாட்டேன் என்று சொல்லி மறுத்து விட்டான். பிறகு, இரண்டு திறத்தாருக்கும் சண்டை உண்டாயிற்று. குருக்ஷேத்திரம் என்னும் இடத்தில் பதினெட்டு நாள் அகோரயுத்தம் நடந்தது. கிருஷ்ண பகவான் பாண்டவருக்குத் துணையாக இருந்தார்; முடிவில் பாண்டவரே வெற்றி யடைந்தார்கள். இவர்களைக் கண்டு, 'பொறுத்தவர் பூமியாள்வர்'' என்று பூலோகத்தில் அனைவரும் சொல்ல ஆரம்பித்தனர்

பிறகு, தருமர் முதலானவர்கள் கொஞ்ச காலம் அரசாண்டு, முடிவில் சுவர்க்கம் அடைந்தார்கள்' என்றார் பாட்டனார்

7. கௌதம புத்தர்

'தாதா! இரண்டு நாளாகச் சொன்ன கதைகள் வெகு இன்பமாக இருந்தன. நமது தேசத்தை அந்த இரண்டு வகுப்பார் மாத்திரந்தான் ஆண்டு வந்தார்களோ?' என்று கேட்டான் முத்து.

'முத்து! அந்த இரண்டு வகுப்பாரும் நெடுங்காலம் ஆண்டு வந்தார்கள். அதன் பிறகு வேறு சில வகுப்பாரும் ஆண்டார்கள். அவர்களில் ஒரு வகுப்பாரைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன் கேள்' என்று ஆரம்பித்தார் பாட்டனார்.

'முத்து! உன் இந்தியா படத்தை எடு; நான் சொல்லும் இடத்தைப் பார். இமயமலைக்குக் கீழே நேபாளம் என்று ஒரு தேசம் இருக்கிறது. அதை அடுத்த கபிலவாஸ்து என்னும் நகரம் முற்காலத்தில் இருந்தது. அந்த நாட்டைச் சுத்தோதனர் என்பவர் சுமார் 2500 வருஷங்களுக்கு முன் ஆண்டுவந்தார். சுத்தோதனர் சாக்கிய வம்சத்தைச் சார்ந்தவர். அவருடைய மனைவியின் பெயர் மாயாதேவி; அவர்களுக்கு நெடுங் காலம் பிள்ளை பிறக்கவில்லை. அதனால் அவர்கள் அநேக தானதருமங்கள் செய்தார்கள், விரதங்கள் அனுஷ்டித்தார்கள், கடவுளை வேண்டினார்கள், முடிவில் ஒரு புத்திரன் பிறந்தான், அவனுக்குக் கௌதமன் என்று பெயரிட்டார்கள். கௌதமர்

சிறு வயதிலேயே எதையும் ஆழ்ந்து சிந்திப்பார். ஒருவரையும் கடிந்து சொல்வதில்லை. சிறு ஜந்துக்களுக்கும் தீமை செய்வதில்லை. அவர் வளர வளர அவருக்கு அறிவும் அருளும் அரிய குணங்களும் உடன் வளர்வன ஆயின.

'சுத்தோதனர் சிறந்த போர்வீரர். தம் குமாரரையும் அவ்வாறு செய்விக்க வேண்டும் என்று எண்ணி, யானை ஏற்றம், குதிரை ஏற்றம், படைக்கலப் பயிற்சி முதலியவற்றைச் செவ்வையாகப் பயின்று வரச் செய்தார். கௌதமர், கல்வியிலும் மற்றும் ராஜ காரியங்களிலும் மிகத் தேர்ந்தவராக விளங்கினார். ஆனால், அவருக்கு உலக வாழ்க்கையில் பிடிப்பில்லை. ஏழைகளைக் கண்டால் ஏங்கி நிற்பார். வருந்துவோரைக் கண்டால் தாமும் வருந்துவார். நோயாளிகளைக் கண்டால் தாமும் நோயுறுவார். விருத்தர்களைக் கண்டால் வருத்தமுறுவார். உலகமெல்லாம் அவருக்குத் துக்கமயமாகத் தோன்றிற்று. அவர் எப்போதும் ஓரிடத்தில் மவுனமாக இருந்து, எதையேனும் சிந்தித்த வண்ணமாக இருப்பார். அவரைக் காணுந்தோறும் சுத்தோதனருக்கு வருத்த முண்டாவது வழக்கம். பிறகு சுத்தோதனர் நல்ல அழகுள்ள கன்னிகையைக் கௌதமருக்கு விவாகம் செய்து வைத்தார். நாளடைவில் கௌதமருக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்தது. பெண்டு பிள்ளைகள் ஆகிய பந்தங்கள் ஏற்பட்டும், கௌதமருக்கு மனநிலை மட்டும் சிறிதும் மாறவில்லை.

'ஒரு நாள் இரவு கௌதமர் ஒரு கனவு கண்டார். ஒரு பெரியவர் கனவில் தோன்றி, "நீ சக்கர-

வர்த்தியாக விரும்பினாலும், சந்நியாசியாக விரும்பினாலும் இதுவே ஏற்ற தருணம்'' என்றார். அந்தக் கனவு கண்டு, கௌதமர் திடுக்கிட்டு எழுந்தார். சக்கரவர்த்தி யாவதா — சந்நியாசி யாவதா என்று யோசித்தார். உலகம் துக்க மயமாக இருப்பதை உன்னினார். மன்னராலும் மரணம் விடுவதில்லை என்பதை எண்ணினார். "துறவிக்கு வேந்தன் துரும்பு'' என்னும் உண்மையை உணர்ந்தார். ஆகையால், துறப்பதே நலம் என்று தேர்ந்தார். துக்க நிவர்த்திக்கு வழியைக் கண்டு பிடிக்க வேண்டும் என்று தீர்மானித்தார். எழுந்தார், தம் அருகில் இருந்த மனைவி முகத்தைப் பார்த்தார். திரும்பி இரண்டு அடி எடுத்து வைத்தார்.



கௌதம புத்தர்


பின்பு பிள்ளையின் நினைவு வந்தது. திரும்பிப்போய் பிள்ளையைப் பார்த்தார். பிள்ளையை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. காலும் எழவில்லை. கௌதமர் தம் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, அரண்மனையை விட்டு வெளியே வந்தார்.

'அரண்மனையை விட்ட கௌதமர் ஓர் அரண்யத்தை அடைந்தார்; அங்கே தவஞ்செய்துகொண்டு

இருந்த அநேக முனிவர்களை அடுத்து, "துக்கநிவர்த்திக்கு ஏற்றவழி எது?" என்று கேட்டார். அவர்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொல்லினர். அவர்கள் சொன்னபடியெல்லாம் அநுஷ்டித்துப் பார்த்தார். எதும் பயன்படுவதாக ஏற்படவில்லை. அதனால், கௌதமர் மனத்திற்கு நெடுங்காலம் சமாதானம் உண்டாகாமலே இருந்தது.

'ஒருநாள் இடையர் சிலர் ஆடுகளை மந்தையாக ஓட்டிக்கொண்டு போவதைக் கௌதமர் கண்டார். கண்டதும், அந்த இடையர்களில் ஒருவனை நோக்கி, "ஐயா! இந்த ஆடுகளை எங்கே ஓட்டிக்கொண்டு போகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்த இடையன், 'சுவாமி! மகத தேசத்து மன்னராகிய பிந்துசாரர் ஒரு யாகம் செய்கிறார்; அதற்கு நூறு ஆடுகளும் நூறு ஆட்டுக் குட்டிகளும் வேண்டும்; அதற்காக இவைகளை ஓட்டிக்கொண்டு போகிறோம்' என்றான். அதைக் கேட்டதும் கௌதமருக்கு மனம் திடுக்கிட்டது. ஐயோ, இத்தனை ஆடுகளும் அநியாயமாகச் சாகப் போகின்றனவே! என்ன செய்வது, இவைகளை எப்படியாவது காக்கவேண்டும் என்று தீர்மானித்து, தாமும் அந்த இடையரோடு போனார்.

'ஆடுகள் போய் யாககுண்டத்தை அடைந்தன. அங்கு வேதசாஸ்திரிகள் பலர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களைக் கண்டதும் கௌதமருக்கு அடக்க முடியாத ஆக்ருஷைம் உண்டாயிற்று; பிந்துசார மகாராஜா வருமட்டும் அதை அடக்கிக்கொண் டிருந்தார். அவர் வந்ததும் கௌதமர் ஜீவகாருண்யத்தைப் பற்றிப் பிரசங்கித்தார். அதைக் கேட்டதும் அனைவருக்கும் இரக்கம் உண்டாயிற்று. அந்த சாஸ்திரி-



புத்த கயை

களும் மிருகபலி இடுவது தகாதென்று தேர்ந்தனர். அரசருக்கும் நல்லறிவு உண்டாயிற்று. அன்று முதல் மிருகபலி இடுதல் முதலிய காரியங்கள் தம் ராஜ்யத்தில் நடவாதபடி பிந்துசாரர் ஏற்பாடுகள் செய்தார். பின்பு, ஆயிரக் கணக்கான மனிதர்கள் கௌதமருடைய போதனையை மேற்கொண்டார்கள்.

'கௌதமர், பிறகு அவ்விடத்தை விட்டு அகன்று, அருகில் இருந்த ஒரு சிறு ஊரில் தங்கி துக்க நிவர்த்திக்கு ஏற்றவழியைக் கண்டுபிடிக்கச் சதா சிந்தித்துக்கொண்டு இருந்தார். சில சமயங்களில் உணவும் கொள்ளாமல் ஊகித்துக்கொண்டிருந்தார்; சிறிதும் சித்த சமாதானம் ஏற்படவில்லை. கடைசியில் கயா என்னும் நகரத்தை அடைந்து அங்கே இருந்த ஒரு போதி விருக்ஷத்தின் கீழே உட்கார்ந்து யோகம் செய்துகொண் டிருந்தார். அப்போது அவருக்கு ஞானம் உதயமாயிற்று. துக்க நிவர்த்திக்கு மார்க்கம் ஏற்பட்டது. அது முதல் தம் பெயரை புத்தர் என்று மாற்றி வைத்துக்கொண்டார். அதனால், இவரைக் கௌதம புத்தர் என்று சொல்லுவது வழக்கம்.

'பின்பு, புத்தர் தமது நூதன மதத்தைப் பரவச்செய்ய விரும்பி, பலருக்கும் போதிக்கலானார். "சகலரும் சமானர். தன்னைப்போல் பிறரையும் நேசிக்கவேண்டும். ஜீவ வதை செய்யக் கூடாது. பெரியோருக்கு அடங்க வேண்டும். பொய் பேசுதல், மதுபானம் செய்தல் முதலிய துரப்பியாசங்களை முற்றும் நீக்கவேண்டும். சதா சந்தோஷமாக இருக்கவேண்டும்" ஆகிய இவை முதலானவைகளே அவர் போதித்த முக்கிய விஷயங்கள். இதைக் கேட்டு, அநேகர் அவர்

மதத்திற் சேர்ந்தார்கள். அநேகர் குடும்பங்களோடு பௌத்த மதத்தை அநுசரித்தார்கள். புத்தர் தம் மதத்தின் உண்மையைப் போதிக்கும்படி பல இடங்களுக்கும் மத போதகர்களை அனுப்பினார். அதனால், அநேக அரசர்களும் பௌத்தமதத்தைத் தழுவினார்கள். அந்த அரசர்கள் மூலமாகவும் பௌத்த மதம் எங்கெங்கும் பரவலாயிற்று. புத்தருடைய மனைவியும் மைந்தனும் வந்து புத்தரைத் தரிசித்துப் பௌத்தரானார்கள்.

'புத்தர் சுமார் 45 வருஷம் பிக்ஷுவாகவே யிருந்து, தமது மதத்தைப் பரவச் செய்து, எண்பதாவது வயதில் முக்தியடைந்தார். இவர் கிறிஸ்து பிறப்பதற்கு 477 வருஷங்களுக்கு முன் காலமானார் என்று கணித்திருக்கிறார்கள். அவர் காலத்திலேயே அவர் கொண்ட நூதன மதம் இந்தியா முழுவதும் பரவி யிருந்தது' என்றார் பாட்டனார்.

8. அசோக மகாராஜன்

தாதா! கௌதம புத்தர் காலமாய்விட்டார் என்று சொன்னீர்களே, அவர் ஏற்படுத்திய மதம் பின்னால் நிலைத்திருந்ததா? அல்லது, அவரோடு அடங்கிவிட்டதா?' என்று கேட்டான் முத்து.


'முத்து! எது, என்னை விடமாட்டாய்போல் இருக்கிறதே. நான் சொல்ல மறந்தாலும் நீ ஞாபகப்படுத்துகிறாயே, அதுதான் புத்திசாலிக்கு லக்ஷணம். புத்தருக்குப் பின் அவர் போதித்த மதத்தின் தன்மையைச் சொல்லுகிறேன், கேள்:

'புத்தர் காலத்திலேயே அவர் போதித்த புதிய மதம் இந்தியா முழுவதும் வேரூன்றிவிட்டது என்று சொன்னேன் அல்லவா. அது வேரூன்றினாலும், அசோக மகாராஜன் காலம் வரையில் அதிகமும் விளக்கவில்லை. அசோகர் காலத்தில்தான் புத்த மதம் சிறந்து விளங்குவதாயிற்று: இவருக்கு வெற்றியினால் வந்த கீர்த்தி விசேஷமானது அன்று; புத்த மதத்தை எங்கும் பரவச் செய்ததினால் வந்த புகழே சிறந்தது.

'அசோகர் சந்திரகுப்தருடைய பேரன், சந்திர குப்தர் மகா வீரர். இவர்காலத்தில்தான் கிரீஸ் தேச ராஜனாகிய மஹா அலெக்ஜாந்தர் இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தது. சந்திரகுப்தர் பாடலி புத்திரம் என்னும் சிறந்த நகரை ராஜதானியாகக் கொண்டிருந்தார். பாடலிபுத்திரம் கங்கை நதியின் கரைமேல் இருக்கிறது. அதற்கு இப்போது பாட்னா (Patna) என்று பெயர். சந்திரகுப்தர் தம்முடைய ராஜ்யத்தில் நகரவிசாரணை சபைகள் (Municipality) ஏற்படுத்தி தர்ம வைத்தியசாலைகள் வைத்தல், பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பித்தல், விளக்குகள் போடுவித்தல், தண்ணீர் தருவித்தல், துறைமுகங்கள் கட்டுவித்தல், ஜனன மரணங்களைப் பதிவு செய்வித்தல் முதலிய காரியங்களை நடத்திவந்தார்.

'அசோகர் தம் பாட்டனரான சந்திரகுப்தருடைய அரசாட்சியைப் பின்பற்றி, குடிகளை வெகு பக்ஷமாக ஆண்டுவந்தார். இவர், முதலில் இந்து மதத்திலிருந்து, பிறகு பௌத்த மதத்தை அனுசரித்தவர். வரவர அவருக்கு அந்த மதத்தில் இருந்த பற்று அதிகமாக வேரூன்றிவிட்டது. பௌத்த மதத்தை

அந்நிய தேசங்களிலும் பரவும்படி செய்யவேண்டும் என்பது அவருடைய எண்ணம். அந்த எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக, மதபோதகர்களை இந்தியா-வின் பற்பல பாகங்களுக்கும், திபேத் பர்மா சீன



அசோகர் நாட்டிய தூண்

இலங்கைத்தீவு முதலிய நாடுகளுக்கும் அனுப்பினர். பௌத்தமதக் கொள்கைகளைக் கல்லில் செதுக்கி அங்கங்கே நாட்டி வைத்தார். இப்படிப்பட்ட கற்களை மைசூர் முதல் வடஇந்தியா வரையில் இன்றைக்கும் காணலாம். குடிகளை அதிகாரத்தினல் ஆளுவதைக்

காட்டிலும் அன்பினல் ஆளுவதே உத்தமம் என்பது அவருடைய கொள்கை.

'அசோகர் மிகவும் ஜீவகாருண்யம் உள்ளவர். ஜீவகாருண்யம் என்பது பௌத்த மதக் கொள்கைகளில் முதன்மையானது. வழியோரங்களில் நிழல் தரத்தக்க ஆலமரம் முதலியவற்றை அமைத்தார். நல்ல கனிகள் தரத்தக்க மரங்களை வைத்து தோப்புகள் உண்டாக்கினர்; அந்தத் தோப்புகளில் துரவுகள் எடுப்பித்தார். சாவடிகள், சத்திரங்கள் பல கட்டிவைத்தார். மனிதர்களுக்கும் கால் நடைக்கும் அநுகூலமாக இன்னும் பல நன்மைகள் செய்தார். இவருடைய ஜீவகாருண்யத்தைக் காட்ட மற்றொரு சரித்திரம் உண்டு. இவர் பாலியராக இருந்தபோது யுத்தம் செய்வதில் மிகவும் பிரியங்கொண்டு இருந்தவர். அப்போது கலிங்க தேசத்தைக் (ஒரிஸ்ஸா) கைப்பற்ற எண்ணங்கொண்டு, அந்த அரசனோடு மூன்று வருஷம் யுத்தம் செய்து வெற்றிகொண்டார். ஆனல், தம் படையில் அநேக ஆயிரம் போர்வீரர் மாண்டதைக் கண்டு, அசோகர் மனம் வருந்தி இனிச் சண்டை செய்வதில்லை யென்று தீர்மானித்துக் கொண்டார். குழந்தாய்! இது எவ்வளவு சிறந்த குணம்!

'அசோகர் மிகவும் பெரிய அரசர். இதனல் அவருக்கு அசோகமகாராஜன் என்பது பெயராயிற்று. இவர் ராஜ்யத்தில் பலுசிஸ்தானம், ஆப்கானிஸ்தானம் ஆகிய இரண்டு தேசங்களும் சேர்ந்திருந்தன. இவருடைய ராஜ்யம் தெற்கில் நெல்லூரண்டை வட பெண்ணையாறு வரையில் அகன்று இருந்தது. இவ்வளவு விசாலமான பாகத்தை முற்காலத்தில் ஒரு-


இந்தியா
வடபெண்ணையாறு

வரும் ஆண்டதில்லை. இவர் நாற்பது வருஷகாலம் அரசு புரிந்தார். இவர் கிரேக்க அரசர்களோடு அதிக சிநேகம் கொண்டு இருந்ததாகவும் தெரிகிறது' என்றார் பாட்டனார்.

9. விக்ரமார்க்கன்

'தாதா! எனக்கு ஒரு சந்தேகம். அசோகருக்குப் பின்பு இந்தியா முழுதும் பௌத்த மதந்தானே தலையெடுத்திருக்கும், மற்ற மதங்களெல்லாம் மறைந்து போயிருக்கும் அல்லவா?' என்றான் முத்து.

'முத்து! அப்படி யில்லை; எதுவும் ஆதரிப்போர் இருந்தால் ஏற்றம்பெற்று விளங்கும்; இல்லாவிட்டால் இழிவுபடும். அசோகருக்குப் பின்பு அரசர் பலர் அந்த மதத்தை அனுசரித்தனர். அதனால் ஜனங்களும் அந்த மதத்தில் அதிகமும் பற்றுகொண்டிருந்தார்கள். சில அரசர்கள் அந்த மதத்தில் வெறுப்பும் காட்டினார்கள். அதனால், ஜனங்களுக்கும் வெறுப்பு உண்டாயிற்று. வேட்டை யாடுவதில் விருப்பமுள்ள அரசர்களுக்குப் பௌத்த மதத்தில் வெறுப்பு உண்டாகும் அல்லவா, பிராமணரும் தங்கள் மதத்தில் சில சீர்திருத்தங்கள் செய்துகொண்டனர்; புத்தர் போதித்த விஷயங்கள் எல்லாம் தம் மதத்திலுள்ள கொள்கைகளே என்று காட்டினர்; யாகத்தில் மிருகபலி யிடுவதை நீக்கினார்கள்; ஜீவகாருண்யம் சிறந்த தர்மம் என்று தாங்களும் அனுசரிக்கத் தலைப்பட்டார்கள்; கொலை செய்வது கூடாதென்று மறுத்தார்கள். அதனால், ஜனங்கள் பிராமண மதத்தைத் தழுவ ஆரம்பித்தார்கள். இந்த மாறுதல் அடையச் சுமார்

400 வருஷங்கள் ஆயின. அந்தக் காலத்தில் விக்ரமார்க்கன் என்னும் அரசன் ஆண்டுகொண்டு இருந்தான். அவனைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள்:

'விக்ரமார்க்கனைப் பற்றி நான் அடிக்கடி கதை சொல்லியிருக்கிறேன் அல்லவா?' என்று கேட்டார் பாட்டனர்.

'ஆம், தாதா! நன்றாய் ஞாபகம் இருக்கிறது. அவர் மந்திரி பெயர் பட்டி அல்லவா. காடு ஆறு மாதம் நாடு ஆறு மாதம் ஆண்டார்கள் என்று அடிக்கடி சொன்னீர்களே, அந்தக் கதைதானே?' என்றான் முத்து.

'ஆமாம், அந்தக் கதைதான். நீ கெட்டிக்காரன், சொன்னதை அப்படியே ஞாபகத்தில் வைத்திருக்கிறாய். விக்ரமார்க்கன் என்னும் பதத்திற்கு, 'வெற்றியால் சூரியனுக்குச் சமமானவன்' என்று அர்த்தம். விக்ரமம் என்றால் வெற்றி; அர்க்கன் என்றால் சூரியன். விக்ரமாதித்தன் என்றும் பெயர் உண்டு. ஆதித்தன் என்றாலும் சூரியன் என்றே அர்த்தமாகும். விக்ரமார்க்கன் என்பவன் வேறு அரசன் அல்ல, இரண்டாவது சந்திரகுப்தன் என்று ஒருவன் இருந்தான். அவனே தன் பராக்கிரமம் தோன்ற விக்ரமார்க்கன் என்று பட்டம் வைத்துக்கொண்டான் என்று சிலர் சொல்லுகிறார்கள். அப்படியானால் இவனுக்கு 'விக்ரமாதித்திய சந்திரகுப்தன்' என்னும் பெயர் ஏற்றதாகும். இந்தப் பெயரால் சிறிது காலத்திற்கு முன் ஒரு நாணயம் கிடைத்தது. அதிலும் 'விக்ரமாதித்திய சந்திரகுப்தன்' என்னும் பெயர் காணப்படுகின்றது. அந்த நாணயத்தி-

லுள்ள உருவத்தைப் பார். வலது கையில் ஒரு வில்லும், இடது கையில் ஓர் அம்பும் இருக்கின்றன. அந்த வில்லை விக்ரமன் தவிர மற்றவர் வளைக்க முடியாதாம். அதனால் அவனுடைய வல்லமை நன்றாய் விளங்கும் அல்லவா ?



விக்ரமாதித்திய சந்திரகுப்தன் நாணயம்.

விக்ரமார்க்கன் மாளவ தேசத்தில் உள்ள உஜ்ஜினி பட்டணத்தில் அரசாட்சி செய்துகொண்டு இருந்தான். உஜ்ஜினி என்பது விந்திய மலைக்கும் அரவல்லி மலைக்கும் இடையில் இருக்கிறது. இவன் நீதி செலுத்துவதில் நிபுணன் ; ஒரு வழக்கையும் விரோதமாகத் தீர்ப்புச் செய்ததில்லை. வாதிப் பிரதிவாதிகள் அரசன் தீர்ப்பைக் கேட்டு மனவருத்தம் அடைந்ததே இல்லை. அது அவன் ஏறியிருந்த சிங்காதனத்தின் மகிமை என்று சொல்லுகிறார்கள். அது தெய்வத் தன்மையுடைய சிங்காதனமாம். விக்ரமாதித்தன் சக்ரபதியாக இருந்தும் சாமானியரைப் போலவே உண்ணவும் உடுக்கவும் படுக்கவும் பழகிவந்தான். அவன் பாயில் படுப்பதே வழக்கம். மாறு வேஷம் பூண்டு, நகரி சோதனை செய்து வருவான். இப்படிப்பட்ட அரசன் காலத்தில் குடிகளுக்கு என்ன குறை நேரிடும். கொற்றவன் குடிகளோடு கலந்து உறவாடினால், அந்த நாட்டில் தீமையும் அணுகுமோ ?

'விக்ரமன் அநேக வித்வான்களை ஆதரித்து சம்ஸ்கிருத பாஷையை விருத்தி செய்தான். அவன் சம்ஸ்தானத்தில் கவி நவரத்னங்கள் என்று ஒன்பது வித்வச் சிரோமணிகள் இருந்தார்கள். சம்ஸ்கிருதத்தில் மகா கவியாகிய காளிதாசர் அவர்களில் தலைவராக விளங்கினார். அமர சிம்மர் என்னும் மகா வித்வானும் அவர்களில் ஒருவர். சம்ஸ்கிருதத்தில் நிகண்டு செய்தவர் இவர்தான். மற்ற வித்வான்கள் இலக்கணத்திலும் வான சாஸ்திரத்திலும் வைத்திய சாஸ்திரத்திலும் மற்றும் அரிய சாஸ்திரங்களிலும் பாண்டித்தியம் பெற்று விளங்கினார்கள்.

'விக்ரமார்க்கன் ஆண்ட காலத்தில் பாஹியன் என்னும் சீன சாஸ்திரி ஒருவர் இந்தியாவில் புத்த க்ஷேத்திரங்களைத் தரிசிக்க யாத்திரிகராக வந்தார். அவர் சீனாவிலிருந்து புறப்பட்டு, இமயமலையின் வடக்குப் பக்கமாகச் சுற்றிக்கொண்டு, காபூல் வழியாக இந்தியாவுக்கு வந்தார். வட இந்தியாவிலுள்ள புத்த க்ஷேத்திரங்களைத் தரிசித்தபின், கங்கா நதியின் முகத்துவாரத்தில் கப்பலேறி லங்கைத் தீவுக்குச் சென்றார். தாம் வந்த காலத்தில், "விக்ரமார்க்கனுடைய அரசாட்சி மிகவும் சிறப்பாக இருந்தது ; ஜீவவதை என்பது எங்கும் கிடையாது ; எங்கும் நல்ல சாலைகளும் சோலைகளும் நிறைந்திருந்தன : பிரயாணிகளுக்குச் சகல சவுகரியங்களும் ஏற்பட்டிருந்தன ; சந்நியாசிகளுக்கான மடங்கள் அனேகம் உண்டு. சந்நியாசிகளுக்கு உணவும் உடையும் படுக்கையும் மடங்களில் கிடைத்தன. தரும வைத்தியசாலைகள் எங்கெங்கும் ஏற்பட்டிருந்தன" என்று பாஹியன் எழுதியிருக்கிறார்' என்றார் பாட்டனார்.

4



'தாதா! இந்த விஷயங்களைக் கேட்கக் கேட்க எனக்கு ஆவல் உண்டாகிறது. இருக்கட்டும் விக்ரமார்க்கன் ஏறியிருந்த சிங்காதனம் தெய்வத்தன்மை யுடையது என்று சொன்னீர்களே, அது என்ன?' என்று கேட்டான் முத்து.

'அதுவா, சொல்லுகிறேன். விக்ரமார்க்கனுக்குப் பிறகு அவனுடைய ராஜ்யம் சீர்குலைந்து விட்டது. அவனுடைய சிங்காதனமும் மண்ணின் கீழ் மறைந்து இருந்தது. நெடுங் காலத்திற்குப் பிறகு அந்த அரிய நாட்டை போஜன் என்னும் அரசன் ஆண்டுகொண்டு இருந்தான். அப்போது ஓர் ஆச்சரியகரமான விஷயம் அங்கே நடந்தது. அதைக் கேள்:

'மாட்டுக்காரப் பிள்ளைகள் சிலர் ஓர் இடத்தில் தம் மாட்டை மேய்ப்பது வழக்கம். அங்கே ஒரு மண் மேடு உண்டு. பிள்ளைகள் அந்த மேட்டின்மேல் ஏறி விளையாடுவார்கள். ஒரு நாள் இரண்டு பிள்ளைகள் சண்டை யிட்டுக்கொண்டு தம் ஆண்டையிடம் சொல்ல, அந்த மேட்டின் வழியே வந்தார்கள். மேட்டின்மேல் இருந்த பையன் ஒருவன் அவர்களைக் கூப்பிட்டு, "உங்கள் வழக்கை நான் தீர்க்கிறேன், இங்கு வாருங்கள்" என்று கூறினான். அந்த இருவரும் தம் வழக்கை அந்தப் பையனிடம் சொன்னார்கள். அவர்களில் ஒருவன் பொய் சொன்னான். மேட்டி லிருந்த பையன் பொய் சொன்னவனைப் பார்த்து, "நீ சொல்லுவது பொய்" என்று தடுத்து, அவர்களுக்குள் நடந்த விஷயத்தைத் தான் நேரில் கண்டவன்போல் சொன்னான். பிறகு, பொய் சொன்னவன் உண்-

மையை ஒப்புக்கொண்டான். அதனால் நியாயாதிபதி ஆகிய அப்பையன் அவனுக்குத் தண்டனை விதித்தான். அதுமுதல் பிள்ளைகள் சண்டையிட்டுக் கொண்டால், அந்த மண் மேட்டண்டைப் போய், தம் வழக்கைத் தீர்த்துக் கொள்வது வழக்கம். பொய் சொன்னால், நியாயாதிபதிக்கு விளங்கிவிடும். இந்த விஷயம் அரசன் காதுக்கும் எட்டிற்று. அரசன் அதை பரிசோதிக்க எண்ணி, ஒரு நாள் மந்திரியை அழைத்துக்கொண்டு போய், மறைவில் இருந்து பார்த்தான். மேட்டிலிருந்த பையன் மிகவும் நீதியோடு பேசினான்; கண்டிதமாகத் தீர்மானம் சொன்னான். பையன் கீழே இறங்கி வந்ததும், அரசன் அவனை அழைத்து, "என்ன சங்கதி?" என்று கேட்டான். பையன், "எனக்கு ஒன்றும் தெரியாது" என்றான். அதன்மேல் மந்திரி, "இந்த மேட்டின்கீழ் ஏதோ விசேஷம் இருக்கவேண்டும்" என்றான். அரசன் கட்டளைப்படி, உடனே வேலைக்காரர் அந்த மேட்டை வெட்டிப் பார்த்தார்கள். அங்கே திவ்வியமான சிங்காதனம் ஒன்று தோன்றிற்று. அதை எடுத்துச் சுத்தப்படுத்தி அரண்மனைக்குக் கொண்டுபோனார்கள். பிறகு, போஜன் நல்ல நாள் பார்த்து, அந்தச் சிங்காதனத்தில் உட்காரப் போனான். அப்போது, அந்தச் சிங்காதனத்தில் இருந்த பதுமை ஒன்று வாய் திறந்து, "நீர் இந்தச் சிங்காதனத்தில் ஏறத் தக்கவரா? விக்ரமாதித்தனைப் போல் உமக்கு வீரமுண்டா?" என்று கேட்டது. அதைக் கேட்ட போஜன் மயங்கி நின்றான். உடனே, அந்தச் சிங்காதனம் உயரப் பறந்து சென்று, மறைந்து விட்டது' என்றார் பாட்டனார். அது கேட்டு அதிக ஆச்சரியப்பட்டான் முத்து.

10. ஹர்ஷ மஹாராஜா

'தாதா! விக்ரமார்க்கனைப்போல் அரசாண்டவர்கள் வேறு யாராவது உண்டோ?' என்று கேட்டான் முத்து.

'அவரைப்போல் தெய்வத்தன்மை விளங்க அரசு செய்யாவிட்டாலும், நீதியோடு ஆண்டவர்கள் அநேகர் உண்டு. அவர்களில் ஒருவரைப்பற்றிச் சொல்லுகிறேன் கேள் :

'வட இந்தியாவில் ஹர்ஷ மஹாராஜா என்னும் ஓர் அரசர் இருந்தார். அவர் யமுனா நதிக்கும் சட்லெஜ் நதிக்கும் மத்தியிலுள்ள தனேசுவரம் என்னும் ஒரு சிறு ராஜ்யத்தை ஆண்டுகொண்டு இருந்தார். ஹர்ஷர் அரிய வீரர் ; பெரிய வித்வான். தேகபலத்தோடு புத்தி பலமும் சேர்ந்திருந்தது. ஹர்ஷர் பின்பு ஏறக்குறைய வட இந்தியா முழுதும் ஆண்டார். இவர் சுமார் 42 வருஷம் நல்ல அரசாட்சி செய்தார்.

'ஹர்ஷருக்குச் சேனை பலம் அதிகம். இவர் சேனையில் 50,000 வீரரும், 20,000 குதிரைகளும், 12,000 யானைகளும் இருந்தன. தாம் பட்டத்திற்கு வந்த சில வருஷங்களுக்குள் காஸ்மீரமும் பஞ்சாபும் தவிர வட இந்தியா முழுதும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டார். பிறகு, தக்ஷிணத்தில் ஆண்டுகொண்டு இருந்த புலிகேசன் என்னும் சாளுக்கிய ராஜன்மேல் படையெடுத்து வந்தார் ; அதில் மட்டும் இவருக்கு வெற்றி உண்டாகவில்லை.

'ஹர்ஷ மஹாராஜா காலத்தில் சீனாவிலிருந்து மஹா பண்டிதர் ஒருவர் வந்தார். அவர் பெயர்

ஹிவாங் த்ஸ்வாங். அவர் புத்தமத க்ஷேத்திரங்களைத் தரிசிக்க வேண்டுமென்று இந்தியாவில் யாத்திரை செய்தார். அவர் எழுதியுள்ள புஸ்தகத்தினால் ஹர்ஷ மஹாராஜனுடைய சிறப்புகள் நன்கு விளங்குகின்றன. அதுவுமன்றி ஹர்ஷராஜரிடம் சம்ஸ்தான வித்வானாக இருந்த பாணகவி என்பவரும் ஹர்ஷ சரித்திரம் என்னும் ஒரு நூல் எழுதியிருக்கிறார்.

ஹர்ஷர் மிகவும் நல்லவர்; செங்கோல் அரசர். அவரிடத்தில் மதத்துவேஷம் கிடையாது. எவரும் தமக்கு இஷ்டமான மதத்தை அனுசரிக்கலாம் என்பது அவருடைய கொள்கை; தாம் புத்தமதக் கொள்கைகளை அனுசரிப்பவராக இருந்தும், சூரியனையும் சிவனையும் வழிப்படுவதைத் தம் வழக்கமாகக் கொண்டிருந்தார். இவர் மஹா பண்டிதர் ஆனபடியால் அநேக நூல்களும் செய்திருக்கிறார். அநேக பண்டிதர்களை ஆதரித்து வந்தார்; இவரைப்போல் தான தருமங்கள் செய்தவர் வேறு ஒருவரும் இலர் என்றே சொல்லலாம்.

'ஹர்ஷர் ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை கங்கை நதிக்கரையில் மத சம்பந்தமாக ஜனங்களைக் கூட்டிச் சிறப்புகள் செய்வது வழக்கம். ஆறுவது கூட்டம் பிரயாகை என்னுமிடத்தில் நடந்தது. இது மிகவும் பிரசித்தமானது. அங்கே பல சிற்றரசர்களும் பிரபுக்களும் வித்வான்களும் மத சித்தாந்திகளும் மற்றும் ஜனங்களும் வந்து சேர்ந்தார்கள். முதல் நாள் புத்தரையும், இரண்டாம் நாள் சூரியபகவானையும், மூன்றும் நாள் சிவனையும் விக்கிரக ரூபமாகப் பிரதிஷ்டை செய்து உற்சவம் செய்வது வழக்கம். அந்த முறை 75 நாள் உற்சவம் நடந்தது

என்றும், அதைத் தரிசிக்கச் சுமார் 5,00,000 ஜனங்கள் வந்திருந்தார்கள் என்றும் தாமே நேரில் கண்டதாகச் சீன யாத்திரிகர் எழுதியிருக்கிறார்.



'ஹர்ஷர் தம் ராஜ்யம் முழுவதையும் தாமே நேரில் போய்ப் பார்த்து வருவது வழக்கமாம்.

தேசங்களைச் சுற்றிப் பார்ப்பதில் அவருக்குச் சோர்வு கிடையாது. அவர் ஆளுகையில் வெகுவாகக் குற்றங்கள் நடப்பதே யில்லை. தம் உத்தியோகஸ்தர் லஞ்சம் முதலியவற்றை வாங்கிக் குடிகளை வருத்தாதபடி அவர்களுக்கு அதிக சம்பளம் கொடுத்தும் பரிபாலித்து வந்தார்.

'ஹர்ஷர் தம் ராஜ்யத்தில் நிலையான சமாதானம் ஏற்பட்ட பிறகு, சந்நியாசிபோல் இருக்கத் தலைப்பட்டார். அநேக சத்திரங்கள் கட்டினார்; அன்னதானம் செய்தார். தரும பாடசாலைகள் அமைத்தார், தரும வைத்தியசாலைகள் ஏற்படுத்தினார். இன்னும் அநேக நன்மைகள் செய்தார்' என்றார் பாட்டனார்.

11. தக்ஷிண ராஜ்யங்கள்

'தாதா! நீங்கள் கதை சொல்ல ஆரம்பித்தபோது, சில கதைகள் வட இந்தியாவில் நடந்தவைகளாக இருக்கும்; சில கதைகள் தென் இந்தியாவில் நடந்தவைகளாக இருக்கும் என்றீர்களே, இன்னும் ஒரு கதையும் தென் இந்தியாவைப்பற்றிச் சொல்லவில்லையே. நாம் வசிக்கும் தென் இந்தியாவைப்பற்றி ஏதேனும் சொல்லுங்கள்' என்று கேட்டான் முத்து.

'குழந்தாய்! நமது தேசத்தைப்பற்றி நான் மறந்துவிடவில்லை. தென் இந்தியாவைப் பற்றி பல கதைகள் சொல்லவேண்டும் என்று எனக்கும் இஷ்டந்தான். என்ன செய்வது, நமது நாட்டில் இருந்த அரசர்களாவது, வித்வான்களாவது சரித்திரம் ஒன்றும் எழுதிவைக்கவில்லை. அதனால், இன்ன விஷயம்

இன்ன காலத்தில்தான் நடந்ததென்று திட்டமாகச் சொல்ல முடியவில்லை. ஆயினும், அந்தக் காலத்து வித்வான்கள் செய்த சில நூல்களாலும், வேறு தேசத்தார் நமது நாட்டில் யாத்திரை செய்தபோது பார்த்ததாக எழுதி வைத்திருக்கும் சில நூல்களாலும் நமது நாட்டைப்பற்றிச் சில விஷயங்கள் தெரிகின்றன. கோயில் முதலிய கட்டடங்களில் உள்ள கல்வெட்டுக்களினாலும், செப்பேடு சிலா சாசனங்களினாலும் பின்னும் சில விஷயங்கள் தெரிகின்றன; அவற்றைச் சொல்லுகிறேன் கேள் :

'தென் நாட்டில் மிகப் பழமையாக ஆண்ட அரசர்கள் பாண்டியர், சோழர், சேரர் (அல்லது கேரளர்) என்னும் மூன்று பிரிவினர். இவர்களுக்குத் தமிழ் நாட்டு மூவேந்தர் என்று பெயர். இவர்களே அன்றி ஆந்திரர், சாளுக்கியர், பல்லவர் என்னும் பிரிவாரும் ஆண்டிருந்தார்கள். இன்னும் பல வகுப்பாரும் அவ்வப்போது இங்கு ஆட்சி செய்திருக்கின்றனர். அவர்களைப்பற்றித் திட்டமாக ஒன்றும் தெரியவில்லை. முன்பு ஆந்திர ராஜ்யத்தைப் பற்றியும், சாளுக்கிய ராஜ்யத்தைப் பற்றியும் பல்லவ ராஜ்யத்தைப் பற்றியும் சொல்லுகிறேன், கேள் :

ஆந்திர ராஜ்யம்

'தெலுங்கருக்கு ஆந்திரர் என்று பெயர். தெலுங்கர் திராவிடரில் ஒரு வகுப்பார் என்பது உனக்குத் தெரியுமே. அசோகர் அரசாட்சி செய்துகொண்டிருந்தபொழுது, ஆந்திரர், கோதாவரி நதிக்கும் கிருஷ்ணா நதிக்கும் இடையில் பிரபல ராஜ்யம் ஒன்றை ஸ்தாபித்துக் கொண்டு அரசாண்டனர்.

அவர்களுக்கு முதலில் ஸ்ரீகாகுளம் முக்கிய பட்டணமாக இருந்தது. இவர்கள் அசோகர் இருக்கும் வரையில் அவருடைய ஆளுகைக்கு அடங்கினவர்களாகவே இருந்தார்கள். அவர் இறந்துவிட்ட பிறகு ஆந்திரர் சுவாதீனம் பெற்றார்கள். பிறகு அவர்கள்



மேலும் மேலும் நாடுகளை ஜயித்து அசோகருடைய ராஜ்யத்தில் பெரும்பாலான பாகத்தை ஆளத் தலைப்பட்டார்கள். ஆந்திரரில் அநேக அரசர்கள் தெலுங்கு பாஷையை ஆதரித்து, விருத்தி செய்தார்கள். ஆந்திர ராஜ்யம் நானூற்றைம்பது வருஷகாலம் நீடித்திருந்தது. அந்த ராஜ்யத்தில் 1,00,000

காலாட்களும், 2,000 குதிரை வீரர்களும், 1,000 யானைகளும் இருந்தன. அந்த அரசர்கள் சிறந்த கட்டடங்கள் பல கட்டினார்கள். பிறகு, அது கொஞ்சங் கொஞ்சமாகக் குறையத் தலைப்பட்டு க்ஷீணதசை அடைந்தது.

சாளுக்கிய ராஜ்யம்

'ஆந்திர ராஜ்யத்தை யடுத்து சாளுக்கிய ராஜ்யம் ஒன்று இருந்தது. சாளுக்கியர் சந்திர வம்சத்து ராஜ



பரம்பரையைச் சார்ந்தவர்கள். அவர்கள் விந்திய மலைக்குத் தெற்கில் ஆண்டுகொண்டு இருந்தார்கள். இவர்கள் விஷ்ணு மதஸ்தர்கள். ஆயினும், மற்ற

மதங்களில் விரோதம் பாராட்டுவதில்லை. இவர்கள் மேற்குச் சாளுக்கியர் என்றும் கிழக்குச் சாளுக்கியர் என்றும் இருவகையாகப் பிரிந்திருந்தனர். மேற்குச் சாளுக்கியருக்குப் படமியும், கிழக்குச் சாளுக்கியருக்கு வேங்கியும் முக்கிய பட்டணங்களாக இருந்தன.

'இரண்டாம் புலிகேசன் என்பவன் சாளுக்கியரில் மிகவும் கீர்த்தி பெற்றவன். மிக வல்லவரான ஹர்ஷருக்கும் இவனை வெல்ல முடியவில்லை. புலிகேசன் தனக்குச் சுற்றிலுமுள்ள ஆந்தர ராஜ்யத்தையும் பல்லவ ராஜ்யத்தையும் வென்று தன் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டான். தான் வென்ற இடங்களில் தன் சகோதரர் முதலானவர்களையே ராஜப் பிரதிநிதிகளாக அமர்த்தி அரசாண்டு வந்தான். இவனுடைய குமாரர்களில் ஒருவன் தந்தையைவிட சமர்த்தனாக இருந்தான்; அவன் ஒரு காலத்தில் சேர, சோழ, பாண்டிய ராஜ்யர்களையும் வென்றதாகத் தெரிகிறது. பின்பு, சாளுக்கியரும் சோழரும் கொள்வன கொடுப்பன செய்துகொண்டு உறவாடிக்கொண்டு இருந்தார்கள்.

பல்லவ ராஜ்யம்

'சாளுக்கிய, ஆந்திர ராஜ்யங்களை அடுத்துப் பல்லவ வம்சம் ஆளத் தலைப்பட்டது. பல்லவர்கள் பாலாற்றங் கரையில் தமது ராஜ்யத்தை ஸ்தாபித்துக் கொண்டார்கள். இவர்களுக்குக் காஞ்சீபுரம் ராஜதானியாக இருந்தது. அவர்கள் ஆண்ட பாகத்திற்குத் தொண்டைமண்டலம் என்று பெயர். பல்லவருக்கும் சாளுக்கியருக்கும் சதா சண்டை நடந்துகொண்டு இருந்தது. வெற்றியும் தோல்வியும் இருவருக்குள் மாறி மாறி வந்தன.



மகாபலிபுர (மாமல்லபுரம்) — கோயிலும் தோங்களும்

'காஞ்சீபுரத்திலுள்ள பழமையான கோயில்கள் பல்லவ ராஜாக்கள் கட்டினவைகளே. அவர்கள் சென்னைக்குத் தெற்கில் சுமார் முப்பத்தைந்து மைல் தூரத்தில் மகாபலிபுரத்தில் பல சிறந்த கட்டடங்கள் கட்டி யிருக்கிறார்கள். முன் காலத்தில் அங்கே ஏழு கோயில்கள் இருந்தனவாம். அதனால், அதற்கு ஏழு கோயில் பட்டணம் என்றும் பெயர் உண்டு. இப்போது இருக்கும் இரண்டு கோயில்கள் தவிர மற்ற ஐந்து கோயில்கள் கடலில் முழுகிவிட்டன.

'மற்றொரு புறத்தில் ஐந்து ரதங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ரதமும் ஒரே கல்லைத் தொளைத்து வெகு சிறப்பாகச் செய்யப்பட்டிருக்கின்றது. நான்கு ரதங்கள் ஒரு வரிசையாகவும் ஒன்று தனியாகவும் இருக்கின்றன. இவற்றைப் பஞ்ச பாண்டவர்கள் ரதம் என்று சொல்லுகிறார்கள். அருகில் உள்ள பாறைகளில் பாரதக் கதைகளில் சிலவற்றை விளக்கும் சித்திரப் படங்களும் செதுக்கப்பட் டிருக்கின்றன. பல்லவ ராஜாக்கள் இப்படிப்பட்ட சிறந்த வேலைகள் அநேகம் செய்திருக்கிறார்கள். இதனால் நம்முன்னோர் சிற்பத் தொழிலில் மிகவும் சிறப்படைந்திருந்தார்கள் என்பது தெரியவில்லையா?' என்றார் பாட்டனார். அதைக் கேட்ட முத்து, 'தாதா! நமது முன்னோர்கள் இவ்வளவு சிறப்புடையவர்களா' என்று சொல்லி, மிகவும் ஆச்சரியப்பட்டான்.

12. தமிழும் தமிழரும்

'தாதா! நேற்று மூன்று ராஜ பரம்பரைகளைப்பற்றிப் பிரபலமான கதை சொன்னீர்களே. தமிழ் நாட்டு அரசர்களைப் பற்றி ஏதும் கதை யில்லையோ? தமிழர்களில் யாரும் அரசாட்சி செய்யவில்லையோ?' என்று கேட்டான் முத்து.

'முத்து! தமிழர்களைப் பற்றி நானும் சொல்ல வாயெடுத்தேன், நீயும் கேட்டாய். தமிழர்களைப்பற்றிச் சொல்லாமல் விடுவேனா! அவர்களைப்பற்றிப் பல கதைகள் உண்டு. அவைகளில் இரண்டு மூன்றுவது உனக்குச் சொல்லுகிறேன்; கருத்தோடு கேள்' என்று தமிழின் சிறப்பும் தமிழரின் தன்மையும் சொல்ல ஆரம்பித்தார் பாட்டனார்.

'குழந்தாய்! தெற்கு நோக்கி வந்த திராவிடர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் என்னும் ஐந்து பாஷைகளுக்கு உரியவர்களாகப் பிரிந்திருந்தார்கள் என்று சொன்னேன் அல்லவா? இந்த ஐந்து பாஷைகளுக்கும் உரியவர்களுக்குப் பொதுவில் பஞ்ச திராவிடர் என்று பெயராயிற்று. இந்த ஐந்து பாஷைகளில் தமிழ் ஒரு தனிப்பாஷை. மற்ற நான்கு பாஷைகளும் தமிழின் உதவியைப் பெரும்பாலும் பெற்றிருக்கின்றன. தமிழ் ஒரு காலத்தில் இந்தியாவின் பெரும்பாகத்தில் வழங்கிய ஒரு சிறந்த பாஷையாக இருந்தது. இப்போது அது சென்னை ராஜதானியின் ஒரு பாகத்திலும், லங்கைத் தீவிலும், இந்து மகா சமுத்திரத்தில் உள்ள பல தீவுகளிலும், வழங்குகின்றது. முன் காலத்தில் செய்த மிகப் பழமையான தமிழ் நூல்கள் அநேகம் இப்-

போதும் இருக்கின்றன. அந்தக் காலத்தில் அநேக வித்துவச் சிரோமணிகள் இருந்தார்கள்.

'தோல் காப்பியம் என்னும் இலக்கணம் மிகப் பழமையான தமிழ் நூல். அது தமிழ்ப் பாஷைக்கு உரிய இலக்கணங்களைச் சொல்வதோடு, தமிழர்களுடைய நடையுடை பாவனைகள், நாகரிகம் முதலியவற்றையும் தெரிவிக்கின்றது.

'தமிழர் தொன்றுதொட்டு மிகவும் நாகரிகம் அடைந்தவர்கள். அவர்கள் கோட்டை கொத்தளங்களை அமைத்துக் கொண்டு, சேனைகளை வைத்துக்கொண்டு அரசாட்சி புரிந்தார்கள். சண்டை செய்ய வேண்டிய முறைகளையெல்லாம் நன்றாய் உணர்ந்திருந்தார்கள். ஆயுதப் பயிற்சியும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

'தமிழர் வியாபாரத்தில் மிகவும் அபிவிருத்தி அடைந்திருந்தார்கள். சுமார் 2,500 வருஷங்களுக்கு முன்பே தமிழர் ரோமர்களோடு வியாபாரம் செய்ததாகப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இவர்கள் கப்பலில் கடல் மார்க்கமாக வர்த்தகம் செய்ததாகவும் தெரிகின்றது. கப்பலைக் காப்பதற்குக் கடற்கரையில் விளக்குக்கூடு வைக்கும் வழக்கமும் அக்காலத்தில் இருந்தது. அந்த விளக்கிற்குக் கலங் கரை விளக்கம் என்று பெயரிட்டார்கள். "கலங்கரை விளக்கம்" என்றால் "கப்பலைத் துறைமுகத்திற்கு அழைக்கும் விளக்கு" என்று அர்த்தம். தமிழர் இன்னும் அனேக சிறந்த விஷயங்களிலும் மிகத் திறமை யுற்றவர்களாக இருந்தார்கள்.

'தமிழ் அரசர்கள் புலவர்க ளிடத்தில் அதிக கௌரவமும் பற்றும் கொண்டிருந்தார்கள். அந்த அரசர்கள் புலவர்களை அவ்வளவு சிறப்பாக ஆதரிக்காமல் இருந்தால், இப்போது நமக்குத் தமிழ் நூல்களே இல்லாமல் போயிருக்கும். அந்த அரசர்கள் புலவர்களோடு உண்டு, உடுத்து, கலந்து வாழ்ந்திருந்த விதங்களைப் பழைய தமிழ் நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன.

'தமிழர் சிறந்த வீரராகவும் இருந்தனர். அவர்களுக்குத் தேசாபிமானமும் பாஷாபிமானமும் அதிகம். ஸ்திரீகளும் அதிக வீரத்தன்மைகொண்டு விளங்கினார்கள். அதை விளக்க ஒரு சரித்திரம் சொல்லுகிறேன், கேள்:

'தமிழ் நாட்டில் ஒரு ஸ்திரீக்குத் தந்தையும் புருஷனும் ஒரே குமாரனும் இருந்தார்கள். அந்த நாட்டில் வேற்றரசன் புகுந்து சண்டை செய்தான். அப்போது அந்த ஸ்திரீயின் தந்தை போய் யானைப் படையில் சண்டைசெய்து இறந்துவிட்டான். பின்பு, அவளுடைய புருஷன் போய் சண்டைசெய்து இறந்தான். அதைக் கேட்டதும் அந்த ஸ்திரீ மிகவும் வீரங்கொண்டு, தனக்கு ஒரே புத்திரன் என்பதையும் எண்ணாமல், அவனுக்கு வெண்மையான ஆடைகளைக் கொடுத்து, தலையை எண்ணெயிட்டுச் சீவிமுடித்து, 'சண்டைமேல் சென்று வென்றுவா' என்று வாழ்த்தியனுப்பினாள்' என்றார் பாட்டனார். அதைக் கேட்டமுத்து, 'தாதா, தமிழர்கள் இவ்வளவு நாகரிகமும் வர்த்தக விருத்தியும் வீரமும் கொண்டிருந்தார்கள் என்று கேட்டதும் எனக்கு அடக்க முடியாத மகிழ்ச்சி உண்டாகிறது' என்றான்.

13. பாண்டி ராஜ்யம்

'தாதா! தமிழ் நாட்டில் அநேக அரசர்கள் ஆண்டார்கள் என்றீர்களே, அவர்கள் யார்? அவர்களைப் பற்றி எனக்கு விவரமாகச் சொல்லவேண்டும்' என்று கேட்டான் முத்து.


'அப்பா, முத்து! நான் முன்பே தமிழ் அரசர்களைப் பற்றிச் சொல்லவில்லையா? அவர்கள் யார்? சொல், பார்க்கலாம்' என்று கேட்டார் பாட்டனார்.

'ஆம், தாதா! பாண்டியர், சோழர், சேரர் ஆகிய இந்த மூவரும் தமிழ் அரசர் என்றீர்கள். இவர்களைத் தமிழ்நாட்டு மூவேந்தர் என்று சொல்லுவது வழக்கம் என்றும் சொன்னீர்' என்றான் முத்து.

'சரிதான், நன்றாய்க் கவனித்திருக்கிறாய். இப்பொழுது பாண்டி ராஜ்யத்தைப் பற்றிச் சொல்லுகிறேன், கவனமாகக் கேள் :

'பாண்டிய ராஜாக்கள் ஆண்ட நாட்டுக்குப் பாண்டி ராஜ்யம் என்று பெயர். இப்போது உள்ள மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்களும் ஒன்று சேர்ந்தது முன்பு பாண்டி ராஜ்யமாக இருந்தது. இது விஸ்தீர்ணத்தில் பெருத்ததும் இல்லை, சிறுத்ததும் இல்லை. பாண்டி ராஜ்யத்திற்கு மதுரையே தலை நகராக விளங்கிற்று. அது முன் காலத்தில் மிகவும் சிறப்புற்று விளங்கி யிருந்தது. இப்போதும் மதராசுக்கு இரண்டாவதாக மதுரையைத்தான் சொல்லலாம். மதுரை சிறந்த நகரம். பாண்டி ராஜாக்கள் பரம்பரையாக அங்கே ஆண்டார்கள். அவர்கள் அநேக ஆலயங்கள் கட்டி-

னார்கள். சிறந்த சிற்ப வேலைகள் பல செய்தார்கள். மதுரையில் மீனாக்ஷி சுந்தரேசர் ஆலயம் ஒன்று இருக்கிறது. அதில் உள்ள ஆயிரக்கால் மண்டபத்தைப்போல் சிற்ப வேலை அமைந்த கட்டடம் இந்தியாவில் எங்கும் இல்லை என்று எண்ணுகிறார்கள்.



'பாண்டியர்கள் தமிழ்ப் பாஷையை ஆதரிக்க மதுரையில் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்தியிருந்தார்கள். சுமார் 2,000 வருஷங்களுக்கு முன்பே தமிழ்ச் சங்கம் ஏற்பட்டிருந்தது என்று கல்விமான்கள் கணக்கிட்டு இருக்கிறார்கள். இந்தச் சங்கத்தில் மேதாவிகளான

அநேக புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் அநேக நூல்கள் செய்தார்கள். முன்பு தமிழையுந் தமிழர்களையும் பற்றிச் சொன்னேனே, அந்த விஷயங்கள் எல்லாம் அவர்கள் இயற்றிய நூல்களால் தெரிகின்றன. சங்கப் புலவர்கள் ஜாதி மத வித்தியாசம் இல்லாமல் ஒன்றுகூடித் தமிழ்ப் பாஷையை வளர்த்தார்கள். யார் எந்த நூல் செய்தாலும் சங்கத்தார் அங்கீகரித்தால்தான் சிறப்பு என்று எண்ணினார்கள். அரசர்களும் அந்தப் புலவர்கள் சொல்லில் மிகவும் மதிப்புக் கொண்டு அவர்கள் சொற்போல் நடந்து வந்தார்கள்.


'பாண்டியர்கள் மிகவும் பராக்கிரமசாலிகள். மைசூர் வரையில் அரசுபுரிந்த அசோகரும் பாண்டி நாட்டை ஜயித்ததாக ஏற்படவில்லை. அசோகர் பாண்டியரோடு நட்புக்கொண்டு இருந்ததாகத் தெரிகிறது. பாண்டியர்கள் மிகவும் தெய்வ பக்தி யுடையவர்கள். தமக்குத் தோன்றாத விஷயங்களைச் சங்கப் புலவர்களைக் கேட்டு அறிவார்கள். அவர்களுக்கும் தெரியாவிட்டால், ஆலயத்திற்குச் சென்று, தெய்வ சந்நிதானத்தில் முறையிட்டுக்கொள்வது வழக்கம். அவர்கள் குடிகளிடத்தில் மிகவும் அன்புகொண்டு ஆண்டார்கள். குடிகளும் அரசரிடத்தில் அதிக உரிமையும் நம்பிக்கையும் கொண்டு வாழ்ந்திருந்தார்கள். இதை விளக்க அநேக சரித்திரங்கள் உண்டு. அவற்றில் ஒன்று சொல்லுகிறேன் கேள் :

'பாண்டியன் அரசாட்சி செய்கையில் மதுரையில் ஒரு பிராமணன் இருந்தான். அவனுக்கு ஒரு மனைவி யுண்டு, குழந்தை இல்லை. அந்தப் பிராமணன் விவாகமான கொஞ்ச காலத்திற்குப் பிறகு,

காசி யாத்திரை செய்ய விரும்பினான். அதை அவன் ஒருநாள் இரவு தன் மனைவிக்குச் சொன்னான். அவளும் உடன் வரவேண்டும் என்று புருஷனுக்குச் சொன்னாள். புருஷன், "பெண்ணே! நீ என்னோடு வருவது கூடாது; யாத்திரை யென்றால் சாமானியமா—காசி யென்றால் சமீபத்திலா இருக்கிறது" என்று சொன்னான். அர்த்த ராத்திரியில் பாண்டியன் நகரி சோதனைக்கு வந்துகொண்டு இருந்தான். அப்போது பிராமணன் வீட்டில் ஏதோ சத்தம் கேட்கவும் அரசன் நின்று உற்றுக் கேட்டான். அப்போது பிராமண ஸ்திரீ தன் மணாளனை நோக்கி, "நாயகா! என்னை நீர் இங்கே விட்டுக் காசிக்குப் போய்விட்டால், நான் எப்படித் தனியே இருப்பேன்?" என்றாள். அதற்குப் பிராமணன், "பெண்ணே! நீ ஏன் அஞ்சுகிறாய்? நமது மன்னர் இருக்கும் போது நமக்கு என்ன குறை? இந்த ராஜ்யத்தில் தனியே இருந்தால் என்ன பயம்?" என்றான். அதைக்கேட்டு அவள் தங்கியிருக்கச் சம்மதித்தாள்.

"அவர்கள் இருவரும் பேசிக்கொண்ட விஷயம் மன்னன் காதில் விழுந்தது; தன்னிடத்தில் குடிகள் கொண்டுள்ள நம்பிக்கையை அறிந்து அளவில்லாத ஆனந்தம் அடைந்தான். பிறகு, பிராமணன் காசிக்குப் போய்விட்டான். அதைத் தூதுவர்களால் உணர்ந்து, அன்று முதல், அரசன் நடுராத்திரியில் சென்று, அந்தப் பிராமணன் வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டு காவல் இருந்தான். அதுவும் அன்றி, அந்த ஒரு வீட்டுக்காக அந்த வீதியிலிருந்த மற்ற வீடுகளுக்கும் வேண்டிய உணவுப் பொருள் கொடுத்துக்கொண்டுவந்தான். சில நாட்கள் பொறுத்-

துப் பிராமணன் வீடு வந்து சேர்ந்தான். அவன் வந்த விஷயம் மன்னனுக்குத் தெரியாது. அன்று இரவு பிராமணன் வீட்டில் ஆண் குரல் கேட்கவும், மன்னன் கதவைத் தட்டினான். வேற்றுப் புருஷனா-ல் மௌனமாக இருப்பான், சொந்த புருஷன் ஆனா-தினால், "யார் அது?" என்று அதட்டிக்கொண்டு



மதுரை — திருமலை நாயகர் மஹால்

ஓடி வந்தான். அரசன், வீட்டுக்கு உடையவன்தான் என்று உணர்ந்து, "ஐயோ, பிராமணன் தன் மனைவி மேல் சந்தேகங் கொள்வானே!" என்று அஞ்சி, விரைந்து ஓடி, அண்டையிலிருந்த வீடுகளின் கதவு-களையும் தட்டிக்கொண்டே அரண்மனைக்குப் போய்

விட்டான். அர்த்த ராத்திரியில் யாரோ தம் கதவைத் தட்டவே அந்தணர் அனைவரும் திடுக்கிட்டு எழுந்து அச்சம் அடைந்தார்கள்.

'மறுநாள் காலையில் பிராமணர்கள் எல்லாம் ஒன்றுகூடி, அரசனிடம் வந்து, தங்களுக்கு நேர்ந்த ஆபத்தை வெளியிட்டார்கள். அத்தனை பேருடைய கலக்கத்தைக் கண்ட அரசன், இவ்வளவு துன்பத்திற்கும் நாமே காரணமன்றோ என்று உணர்ந்து, உண்மையை வெளியிட்டு, அவ்வாறு தன்பயம் உண்டாக்கிய கையைத் தன் வாளால் துணித்துக்கொள்ளத் துணிந்தான். கடவுள் அருளால் கை துணிபடவில்லை. பிறகு, அந்தக் கை பொன்போல் விளங்கிற்று. அதனால் அவனுக்குப் பொற்கைப் பாண்டியன் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

'இப்படிப் பாண்டியர் நெடுங்காலம் அரசு புரிந்தார்கள். சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன் மகம்மதியர் பாண்டி நாட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள். கொண்டும், நெடுங்காலம் ஆளவில்லை. பிறகு, விஜயநகர ராஜ்ய பரம்பரையைச் சார்ந்த திருமலை நாயகர் மதுரையை ஆளத் தலைப்பட்டார். அவர் மிகச் சிறந்த கட்டடங்கள் கட்டியிருக்கிறார். ஆலயத்தில் மகம்மதியர் சிதைத்து விட்ட அநேக பாகங்களைப் புதுக்கினார். அதுவும் அன்றி, ஒரு சிறந்த அரண்மனையும் கட்டினார். அது இன்றளவும் இருக்கிறது. அதற்குத் திருமலை நாயகர் மஹால் என்று பெயர். அது இன்றைக்கும் புத்தம் புதிதாக விளங்குகிறது' என்றார் பாட்டனார். அதைக்கேட்டு முத்து மிகவும் சந்தோஷம் அடைந்தான்.

14. சோழ ராஜ்யம்


'தாதா! பாண்டி ராஜ்யத்தைப் பற்றிச் சொன்ன விஷயம் மிகவும் நன்றாய் இருக்கிறது. பாண்டியன் தன் குடிகளிடத்தில் கொண்டிருந்த அன்பை நினைக்க நினைக்க அதிக ஆனந்தம் உண்டாகிறது. தாதா! சோழ ராஜ்யத்தைப் பற்றியும், அதன் அரசர்களைப் பற்றியும் விவரமாகச் சொல்ல வேண்டும்' என்று கேட்டான் முத்து.

'முத்து! சோழ நாட்டைப் பற்றிச் சொல்லாமல் விடுவேனா? "சோழ வளநாடு சோறுடைத்து" என்று ஔவையாரும் அருளிச் செய்திருக்கின்றனர். சோழ நாடு மிகவும் செழிப்புள்ளது; எங்கெங்கும் நீர்ப் பெருக்கை உடையது; அதனால் இதற்குப் புனல் நாடு என்றும் பெயர் உண்டு. எங்கே பார்த்தாலும் பச்சைப் பசேலென்று இருக்கும். சோழ நாட்டில் சுமார் 3000 ஆலயங்கள் இருக்கின்றன.

'இப்போது உள்ள திரிசிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் சேர்ந்தது முற்காலத்தில் சோழ ராஜ்யமாக இருந்தது. இது சில சமயங்களில் காஞ்சீபுரம் உள்ளாகப் பரவி யிருந்ததும் உண்டு. திரிசிராப்பள்ளிக்கு அருகிலுள்ள உறையூர் சோழ ராஜ்யத்திற்குத் தலைநகராக விளங்கிற்று.

'கரிகால் சோழன் என்பவன் சோழ வம்சத்தின் முதல் அரசன் என்று தெரிகிறது. இவனுடைய காலம் இப்பொழுதைக்குச் சுமார் 2000 வருஷம் இருக்கும். இவன் பிறப்பதற்குள் இவன் தந்தை இறந்துபோனான். பிறகு, வேற்றரசன் ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டான். கரிகாற் சோழன் பிறந்து

குழந்தையாக இருக்கும்போது, அந்தக் குழந்தை யிருந்த குடிசைக்கு அந்தப் பகையரசன் தீ வைத்து விட்டான். உடனே, தாதி அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு ஓடிக் காப்பாற்றினாள். ஆயினும் அக்குழந்தையின் காலில் கொஞ்சம் தீப்பட்டுக் கருகி யிருந்தமையால், அவனுக்குக் கரிகாற் சோழன் என்பது பெயர் ஆயிற்று.



'கரிகாலனுக்கு ஏற்ற வயது வந்தபோது அவனுடைய அம்மான் அப் பகை யரசனோடு சண்டை

செய்து வென்று, அந்த ராஜ்யத்தைக் கரிகாலனுக்குக் கொடுத்தான். கரிகாலன் தன் தந்தை ஆண்ட நாட்டுக்கு அரசனானான். உடனே, பாண்டியனும் சேரனும் ஒன்று சேர்ந்து கரிகாலனோடு சண்டைக்கு வந்தார்கள். அந்தச் சண்டையில் கரிகாலனே வெற்றி அடைந்தான். சேரனுக்கு முதுகில் அம்பு பட்டது; முதுகில் அம்பு படுவது பெரிய அவமானம்; அதனால் போர்வீரரும் உயிர்விடத் துணிந்தார்கள்; சேரன் தனக்கு நேர்ந்த அவமானத்தை எண்ணிப் பட்டினியாக இருந்து உயிர்விட்டான். கரிகாலன் பெரிய வெற்றியோடு தன் நகரை அடைந்தான். பிறகு, ஒன்பது சிற்றரசர்கள் ஒன்றுசேர்ந்து, கரிகாலனோடு சண்டைக்கு வந்தார்கள். கரிகாலன் அவர்களை யெல்லாம் துரத்தி யடித்தான். அதன் பிறகு அவனோடு சண்டை செய்ய ஒருவரும் முன் வரவில்லை. அதனால் கரிகாலனுக்கு ராஜ்யம் நிலைத்துவிட்டது. பிறகு கரிகாலன் தன் ராஜ்யத்தைக் காஞ்சீபுரம் வரையில் விசாலப்படுத்தினான்.


'ராஜ்யம் யாதொரு சண்டை சச்சரவும் இன்றிச் சமாதானமாக நிலைத்தபின், கரிகாலன் தன் தேசத்தைச் சீர்படுத்த முயன்றான். காவேரியாறு பெருக்கெடுத்து வரும்போது கரை புரண்டு ஓடி, அருகில் உள்ள ஊர்களை யெல்லாம் நாசமாக்குவது வழக்கம். அதனால், சுமார் 100 மைல் நீளத்திற்கு காவேரியின் இரு கரைகளையும் உயர்த்தி, வெள்ளம் வீண் போகாமல், அநேக கால்வாய்கள் வெட்டி, வயல்களுக்குப் பாயும்படி செய்தான். அதன் பிறகு சோழநாட்டில் ஒன்றுக்கு ஆயிரமான விளைவு அதிகமாகப் பெருகிற்று. நிலவளம் அதிகமானபின், குடிவளம் குறைந்தது.

அதனால் கரிகாலன் லங்கைமேல் படை யெடுத்து ஜயம் பெற்று, ஆயிரக்கணக்கான மனிதர்களை சோழ நாட்டில் குடியேற்றினான்.

'பிறகு கரிகாலனுக்கு வர்த்தகத்தின்மேல் மனம் சென்றது. தன் ராஜதானி கடற்கரையில் இல்லாமை-யால் வர்த்தகம் விருத்தியாகவில்லை என்பதை உணர்ந்-தான். அதனால், காவேரியின் முகத்துவாரத்திலுள்ள காவிரிப் பட்டினம் என்னும் நகரைத் தன் ராஜ்யத்திற்-குத் துறைமுக மாக்கினான். அதன் பிறகு வர்த்தகம் விருத்தியடைந்தது. இவ்வளவு செல்வம் பெருகிய நாட்டை ஆண்டபடியால் இவனுக்குக் கரிகாற் பெரு-வளத்தன் என்னும் சிறப்புப் பெயரும் உண்டாயிற்று.

'பிற்காலத்தில் அநேக சோழர்கள் ஆண்டார்-கள். அவர்களில் ராஜ ராஜ தேவன் என்பவன் சிறந்தவன். அவன் மகா வீரன். சோழ ராஜ்யத்தை மிகவும் விசாலப்படுத்தி அரசாண்டவன் ராஜ ராஜ தேவனே. இவன் 27 வருஷம் அரசு புரிந்தான். முத-லில் சேரனை வென்று சேர ராஜ்யத்தைக் கைப்-பற்றினான். பிறகு வடக்கில் கலிங்கதேசம் வரையில் வென்றான். அதன் பின் மேற்கில் குடகு நாட்டை-யும், தெற்கில் பாண்டி நாட்டையும் வென்று ஏறக் குறைய தென் இந்தியா முழுதும் சோழ ராஜ்யத்தில் சேர்த்துக்கொண்டான். முடிவில் லங்கைமேல் படை யெடுத்து வென்று, அதையும் தன் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டான்.

'ராஜ ராஜ தேவன் தஞ்சாவூரைத் தனக்குத் தலைநகராகக் கொண்டிருந்தான். தஞ்சாவூரில் உள்ள பெரிய சிவாலயம் இவனால் கட்டப்பட்டதே. இந்தச்



தஞ்சாவூர் — பெரிய கோயில்

சோழனுடைய ராஜ்யவிசாலமும், அவன் ஆளுகையின் சிறப்பும் அந்தக் கோயிலின் மதிற்சுவரில் செதுக்கியுள்ள கல் வெட்டுக்களால் தெரிகின்றன. சோழர்கள் மிகவும் நீதியோடு அரசு புரிந்தவர்கள். அதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன்.

'தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாரூர் என்னும் சிறந்த நகரம் ஒன்று இருக்கிறது. அங்கே நெடுங் காலத்திற்கு முன் மனுநீதிச் சோழன் என்னும் ஒரு மன்னன் இருந்தான். அவனுக்கு நெடுநாள் பிள்ளை இல்லாமல் இருந்தது. பின்பு, கடவுள் அருளால் ஆண் குழந்தை பிறந்தது. அதைப் பெற்றோர் மிகவும் அருமையாக வளர்த்தனர். பிள்ளைக்கு உரிய பருவம் வந்தது; இளவரசு பட்டம் கட்டினார்கள்.

'ஒருநாள் அந்த ராஜகுமாரன் ஆலயத்திற்குப் போகப் புறப்பட்டான். அப்போது தான் ஒரு தேரில் ஏறி, ராஜவீதியில் போனான். போகையில் ஒரு பசுவின் கன்று வழி தப்பி ஓடிவந்து, தேர்க் காலில் அகப்பட்டுக்கொண்டு இறந்துவிட்டது. அதைக் கண்டதும் பரிவாரங்கள் கூவினார்கள்; ராஜகுமாரன் கண்டு மிகவும் நடுநடுங்கி வருந்தினான். அதற்குள் அந்தக் கன்றின் தாயாகிய பசு ஓடிவந்து, கன்றைச் சுற்றிச்சுற்றி அழுதது. பிறகு, அது அரசன் அரண்மனைக்குப் போய், அங்கே கட்டியிருந்த ஆராய்ச்சி மணியை அடித்தது. அரசன் அதைக் கேட்டு, திடுக்கிட்டு ஓடிவந்தான். பசு கண்ணீர் விட்டுக் கதறி நிற்பதைக் கண்டான்; காரணம் என்ன என்று விசாரித்தான். அங்கிருந்த சிலர் நடந்த விஷயத்தைச் சொன்னார்கள். அதைக்கேட்ட அரசன் ஆருத்துயரம் அடைந்தான்.

'பிறகு, மன்னன், "இதற்கு என்ன செய்யலாம்?" என, மந்திரிகள் "இதற்கு ஏதேனும் பிராயச்சித்தம் செய்தால் போதும்" என்றார்கள். அதற்கு அரசன் சம்மதிக்காமல், "கொலை செய்தவனைக் கொலை செய்வதே தகுதி. இது ஒரு மிருகம் என்று எண்ணலாகாது. எந்தப் பசுவாவது, அரசனிடம் நியாயம் பெறவேண்டுமென்று ஆராய்ச்சி மணியை அடித்தது உண்டோ? அதனால், இந்தப் பசுவின் கன்று எப்படி இறந்ததோ அப்படியே என் குமாரனும் இறக்கவேண்டும். ஆகையால், என் குமாரனை அக் கன்று இறந்த இடத்திலே படுக்கவைத்து இந்தப் பசு தன் கண்ணாரப் பார்க்கும்படி, தேரை அவன்மேல் செலுத்துக" என்று மந்திரிக்குக் கட்டளை யிட்டான். மந்திரி அந்தக் கட்டளையை நிறைவேற்றச் சம்மதிக்கவில்லை. பிறகு மன்னனே மனந் துணிந்து, தன் மைந்தன்மேல் தேரைச் செலுத்தத் தலைப்பட்டான். நகரத்தார் எல்லோரும் நடுக்கங் கொண்டார்கள். அனைவரும் கூடிய அந்த இடத்தில் அரசன் தன் குமாரனைப் படுக்கவைத்து, தேரைச் செலுத்தினான். கடவுள் அருளால் தேர்க்கால் அவன் மேல் செல்லவில்லை. "செங்கோ லரசனே! உன்னுடைய நீதிக்கு மகிழ்ந்தோம்; பசுக்கன்றும் உயிர் பெற்று எழும்" என்று அசரீரிவாக்கு எழுந்தது. உடனே பசுவின் கன்றும் உயிர்பெற்று எழுந்தது. அனைவரும் கண்டு ஆனந்தம் அடைந்தார்கள். அரசனும் தன் குமாரனோடு அரண்மனையை அடைந்தான்' என்று சொன்னார் பாட்டனார். முத்து அதைக் கேட்டு அதிசயமும் ஆனந்தமும் அடைந்தான்.

15. சேர ராஜ்யம்


'தாதா! சோழ ராஜ்யத்தைப்பற்றி நன்றாய்ச் சொன்னீர்கள். மனுநீதிச் சோழருடைய தன்மையைக் கேட்டால் மனம் உருகுகிறது. அப்படியே சேர ராஜ்யத்தின் சிறப்பையும் சொல்லவேண்டும்' என்று கேட்டான் முத்து.

'முத்து! சேரருடைய சிறப்பைச் சொல்கிறேன், கேள். இப்போதுள்ள திருவாங்கூர், கொச்சி ராஜ்யங்களும் மலையாளம் ஜில்லாவும் சேர்ந்தே முன் காலத்தில் சேர ராஜ்யமாக இருந்தது. சேரர்களுக்கு வஞ்சி நகர் தலை நகராக இருந்தது. இப்பொழுது கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள கருவூருக்கு முன்காலத்தில் வஞ்சிநகர் என்னும் பெயர் வழங்கிற்றும். சேர ராஜ்யத்தைக் கேரள ராஜ்யம் என்றும் சொல்வதுண்டு.

'சேரரில் அநேகர் ஆண்டார்கள். சேரருக்கும் சோழருக்கும் கொள்வன, கொடுப்பனவாகிய சம்பந்தமும் நடந்து வந்தது. கரிகாற் சோழன் குமாரத்தியை இரண்டாம் ஆதன் என்னும் சேரன் விவாகம் செய்துகொண்டான். இவனுக்கு இரண்டு குமாரர்கள்: மூத்தவர் பெயர் சேங்குட்டுவேன், இளையவர் பெயர் இளங்கோவடிகள். இளங்கோவடிகள் என்பவர் சிலப்பதிகாரம் என்னும் சிறந்த தமிழ் நூல் செய்திருக்கிறார். இதனால் சேரர்கள் சிறந்த தமிழ்ப் புலவர்களாகவும் இருந்தார்கள் என்பது தெரியவருகிறது.

'தந்தைக்குப் பின் செங்குட்டுவன் அரசனானன். அவன் அரசாட்சி செய்கையில், கரிகாலன் குமார-

ஞன நலங்கிள்ளி காலமாய் விட்டான். அதனால், நலங்கிள்ளியின் குமாரனாகிய கிள்ளிவளவன் பட்டத்திற்கு வந்தான். அவன் சிறுவனாக இருந்தமையால், அநேக சிற்றரசர்கள் சண்டைக்கு வந்தார்கள். அப்போது, செங்குட்டுவன் தன் மாமன் குமாரனாகிய



கிள்ளிவளவனுக்குத் துணையாக இருந்து, பகைவர்களைத் துரத்தியடித்துவிட்டு, ராஜ்யத்தை அவனுக்கு நிலைக்கச் செய்தான்.

செங்குட்டுவன் விதவையான தன் தாயாரைக் கங்கை நதியில் ஸ்நானம் செய்விக்க அழைத்துக்

கொண்டு போனான். அப்போது ஆந்திர ராஜாக்கள் முதலானவர்கள் இவனுக்குச் சிநேகிதராக இருந்தார்கள் என்று தெரிகிறது.

'செங்குட்டுவன் இரண்டாம் முறை திரண்ட சேனைகளோடு கப்பல் மூலமாகக் கலிங்கத்திற்குச் சென்று, வங்காளத்திலிருந்த சில அரசர்களை வென்றான். அவர்கள் தமிழ் அரசர்களை இழிவாகப் பேசினதனால், அவர்களைச் சிறையாகப் பிடித்துக்கொண்டு வந்தான். பிறகு, செங்குட்டுவன் இமயமலை வரையில் சென்று, சுமார் இரண்டரை வருஷங்களுக்குப் பிறகு, தன் ராஜதானியை அடைந்தான்.

'சேரர் மிகவும் தெய்வபக்தி வாய்ந்தவர்கள், நீதி வழுவாதவர்கள் என்பதற்கு ஒரு சரித்திரம் சொல்லுகிறேன், கேள் : சேரமான் பெருமாள் நாயனார் என்னும் அரசர் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த பக்திமான், செங்கோ லரசர், அரிய தமிழ்ப் புலவர், குடிகளின் நன்மைக்காகவே அரசு புரிவதாக எண்ணி, நீதி தவறாமல் ஆண்டுவந்தவர். இப்படி யிருக்கையில் இவருடைய தந்தையார் இறந்துவிட்டார். அதனால், சேரமானுக்குச் சிந்தையில் கலக்கம் உண்டாயிற்று. கலக்கம் உண்டானால் சரியாக நீதி செலுத்த முடியாதென்று எண்ணி, தம் அரசாட்சியை மந்திரியிடம் ஒப்பித்துவிட்டு, தாம் தனியே இருக்க விரும்பினார். மந்திரி அதற்கு உடன்படவில்லை. குடிகளும் தம் ஆருயிர் போன்ற அரசரை விட்டுப் பிரிந்திருக்கச் சம்மதிக்கவில்லை. மந்திரிகளும் குடிகளும் என்ன வேண்டியும் அரசர் உடன்படவில்லை. பின்பு, "உமக்குத் தெரியாத விஷயங்களை யெல்லாம் தெளிவாக உணர்த்துவோம்" என்று ஓர் அசரீரி வாக்கு ஆகா-

யத்தில் உண்டாயிற்று. அதை நம்பிச் சேரமான் செங்கோல் செலுத்த உடன்பட்டார்' என்று சொன்னார் பாட்டனார். அதைக் கேட்ட முத்து, 'தாதா, அவர் அரசாட்சி செய்ய அவ்வளவு அஞ்சினாரா!' என்று ஆச்சரியப்பட்டான்.

16. கஜினி முஹம்மத்

'தாதா! இதுவரையில் வட இந்தியாவைப்பற்றிச் சில கதைகளும் தென் இந்தியாவைப்பற்றிச் சில கதைகளும் சொன்னீர்கள், இனிமேல் என்ன கதை சொல்லப் போகிறீர்கள்?' என்று கேட்டான் முத்து.

'முத்து! கதை இதோடு முடிந்து விட்டதாக எண்ணாதே. இனிமேல்தான் பிரசித்தமான கதைகள் சொல்லப் போகிறேன். இதுவரையில் உள்ளூரில் இருந்த அரசர் கதைகளைச் சொன்னேன்; இனி, வெளியிலிருந்து அநேகர் இந்தியாவுக்கு வந்தார்கள். அவர்களில் பலர் கொள்ளையடித்துப் பொருள்களை வாரிக்கொண்டு போகவேண்டும் என்றே வந்தார்கள். சிலர் ராஜ்யங்களை ஜயித்து ஆளவேண்டும் என்று வந்தார்கள். சிலர் தாங்கள் மேற்கொண்ட மதங்களை இந்தியாவில் எங்கும் பரவச்செய்யவேண்டும் என்று வந்தார்கள். இப்பொழுது ஓர் அரசனைப்பற்றிச் சொல்லுகிறேன், கேள்:

'இந்தியாவின் வடமேற்கில் ஆப்கானிஸ்தானம் என்று ஒரு தேசம் இருக்கிறது. முன் காலத்தில் மேல்நாடுகளி லிருந்து இந்தியாவில் வர்த்தகம் செய்ய வருவோர் அந்தத் தேசத்தின் வழியாகத்தான் வரவேண்டும். ஐரோப்பா கண்டத்து வர்த்தகர்களும்

ஒட்டைகளின்மேல் தம் சரக்குகளை ஏற்றிக்கொண்டு ஆப்கானி ஸ்தானத்தின் வழியாகவே இந்தியாவுக்கு வருவது வழக்கம்.

'ஆப்கானி ஸ்தானத்திற்குக் கஜினி என்னும் பட்டணம் தலைநகராக இருந்தது. அங்கே முஹம்மது என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் மகம்மது மதத்தைச் சார்ந்தவன். அந்த மதத்தில் அதிகம் பற்றுள்ளவன். மகம்மது மதமே உண்மையான மதம் என்றும், மற்ற மதங்களெல்லாம் பொய்யான மதங்கள் என்றும் எண்ணியிருந்தான். மகம்மது கஜினியில் மலை யடர்ந்த இடத்தில் அழகான அரண்மனை அமைத்துக்கொண்டு அரசு புரிந்து வந்தான். அவன் கல்வியில் மிகவும் விருப்பம் உடையவன். அநேக வித்வான்களை ஆதரித்தான். தன் தேசத்தில் ஒரு சர்வகலாசாலை ஸ்தாபித்தான். பள்ளிவாசல்கள் பற்பல கட்டினான். அவன் சம்ஸ்தானத்தில் சிறந்த சிற்பசாஸ்திரிகள் பலர் இருந்தனர். ஜனங்களின் நன்மைக்காகச் சாலைகளும் சத்திரங்களும் அமைத்தான். அவன் மனத்தில் இரண்டு எண்ணங்கள் குடிகொண்டு இருந்தன. முதலாவது—மகம்மது மதத்தை எங்கும் பரவச்செய்யவேண்டும், இரண்டாவது—திரண்ட செல்வம் சேர்க்கவேண்டும் என்பவைகளே.

'தன் எண்ணத்தை முடிக்க ஏற்ற இடத்தைத் தேடினான். இந்தியா மிகவும் செழுமையான தேசம் என்பது அவனுக்குச் சிறு வயதிலேயே தெரியும். இந்தியாவில் பொன்னும் வெள்ளியும் மலிந்திருப்பதையும், ஆலயங்கள் அமிதமாக விளங்குவதையும் வர்த்தகர் மூலமாக அறிந்திருந்தான். அதனால், இந்தியாவில் புகுந்து கொள்ளையிடுவதே சரி என்று

தீர்மானித்தான். பொன்னையும் வாரிக்கொண்டு வரலாம், மகம்மது மதத்தையும் பரவச் செய்யலாம் என்று எண்ணினான்.


'இவ்விதத் தீர்மானத்துடன், மகம்மது இந்தியாவின்மேல் சுமார் பதினேழு முறைகள் படை எடுத்தான். முதலில் வட இந்தியாவிலுள்ள அநேக ராஜாக்களை எதிர்த்தான். அவர்கள் எல்லாம் ஒன்றுகூடி எதிர்க்காமல், தனித்தனியே நின்று அவனோடு சண்டை செய்ய ஆரம்பித்தார்கள். அதனால் ஒருவனும் மூஹம்மதுவை ஜயிக்க முடியவில்லை. மூஹம்மதுவுக்குச் சேனைகள் அதிகம். போர்வீரரும் அதிக பலசாலிகள். தோல்வி யடைந்த இந்து ராஜாக்கள் பலர் தாமே தற்கொலை செய்துகொண்டனர். அது கண்டு அவர்களுடைய தேவிமார் தம் கற்பைக் காத்துக்கொள்ளத் தீயில் பாய்ந்துவிட்டனர். மூஹம்மது திரண்ட செல்வங்களைச் சேகரித்துக்கொண்டு தன் தேசத்திற்குத் திரும்பினான்.

'அந்தக் காலத்தில் இந்துக்கள் ஆலயங்களை வெகு சிறப்பாக வைத்திருந்தார்கள். தூண்கள் எல்லாம் பொன்; கூரை யெல்லாம் பொன்; தரையில் தளவரிசை செய்வதும் பொன். கோயில் கட்டடமே இவ்வாறு இருந்தால், விக்கிரகங்கள் எவ்வாறு இருந்திருக்கும். தங்கத்தையே உருக்கி விக்கிரகங்கள் வார்த்தார்கள். கண், கை முதலிய உறுப்புக்களுக்கு இரத்தினங்களை இழைத்தார்கள். இரத்தினாபரணங்களை உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பூட்டிவைத்தார்கள். இவற்றை யெல்லாம் கண்ணாரக் கண்டான் மூஹம்மது. தான் கொண்டிருந்த கருத்துப் பலித்தது என்று சந்தோஷங்கொண்டு, அந்த

ஆலயங்களை யெல்லாம் இடித்தான். விக்கிரகங்களை யெல்லாம் உடைத்தான். பொன்னையும் மணியையும் போர் போராகக் குவித்தான். ஒட்டைகளின் மீதும் குதிரைகளின் மீதும் ஏற்றினான். ஒரு பட்டணத்தில் மாத்திரம் 350 யானைகளும், ஆயிரக்கணக்கான ஒட்டைகளும் சுமக்கக்கூடிய பொருள்கள் கிடைத்தனவாம். முஹம்மது இவ்வளவு திரண்ட செல்வங்களைச் சேர்த்துக்கொண்டு போனபோது 50,000 இந்துக்களையும் சிறையாகப் பிடித்துக் கொண்டுபோய், பலவந்தப்படுத்தி மகம்மதியராகச் செய்தான். அரசன் செய்தது ஒரு பாடானால், அவனுடைய போர்வீரர் செய்தது பெரும்பாடு. வீரர்கள் ஊர்களிலும் நகரங்களிலும் புகுந்து கொள்ளையிட்டு நாட்டை நாசப்படுத்தி, அநியாயமாக ஆயிரக்கணக்கான மனிதர்களை வாளுக்கு இரையாக்கினார்கள். மகம்மதியர் அல்லாதவரை இப்படிச் செய்வது ஏற்ற காரியமே என்று அவர்கள் எண்ணினார்கள்.

'கடைசி முறையாக முஹம்மது சோமநாத புரத்தைத் தாக்கப் படை யெடுத்தான் சோமநாதபுரம் கூர்ஜர தேசத்தில் இருக்கிறது. அங்கு ஒரு புராதனமான ஆலயம் இருந்தது. அது செல்வத்தால் சிறந்தது. திரளான ஜனங்கள் அவ்விடத்திற்கு யாத்திரை செய்வது வழக்கம். அது வெகுதூரத்தில் இருந்தமையால், முஹம்மது அங்கே வரமாட்டான் என்று இந்துக்கள் எண்ணினார்கள். பணம் வருவதானால் பிரயாணம் செய்வது கஷ்டமா—முஹம்மது சுமார் 350 மைல் தன் சேனைகளோடு கஷ்டப்பட்டு சோமநாத புரத்தை யடைந்தான். இந்துக்கள் எல்லோரும் ஒன்றுகூடி முஹம்மதுவை எதிர்த்தார்கள். என்ன

பலன், ஒன்றும் முடியவில்லை. முஹம்மதிய சேனை கோயிலில் புகுந்துவிட்டது. அப்போது அர்ச்சகர் முதலானவர்கள் முஹம்மதுவை யணுகி, ஆலயத்தை ஒன்றும் செய்யாமல் விட்டால், திரண்ட செல்வம்



சோமநாதபுரம் கோயிலின் கதவு

கொடுப்பதாகச் சொல்லி வேண்டினார்கள்; முஹம்மது அதற்குச் சம்மதிக்கவில்லை. பிறகு, அவன் 15 அடி உயரமுள்ள அந்த விக்கிரகத்தை சின்னபின்னமாக

உடைத்து அதி லிருந்த இரத்தினங்களை யெல்லாம் வாரிக்கொண்டு, அதிக சந்தோஷத்துடன் திரும்பிக் கஜினிக்குப் போனான்.

'கொஞ்ச காலத்திற்குப் பின் முஹம்மது வியாதி அடைந்தான்; அது குணப்படவே யில்லை. அவன் சாவதற்கு முன், தான் தேடிய பொருள்களை யெல்லாம் தன் முன்னே கொண்டுவந்து குவிக்கச் சொன்னான்; குவித்தார்கள். பொன்னும் மணியும் குவியல் குவியல்களாக இருந்தன. அவற்றைக் கண்டு முஹம்மது கண்ணீர் விட்டான். இவற்றையெல்லாம் விட்டுப் போகிறோமே என்று ஏங்கினான். என்ன ஏங்கினாலும் எமன் விடுவானா! பிறகு அவன் மரணம் அடைந்தான்' என்றார் பாட்டனார்.

17. பிருதிவி ராஜன்

'தாதா! கஜினி முஹம்மது செய்த காரியங்களை நினைத்தால் எனக்குக் குலை நடுங்குகிறது. அவன் மிகவும் கொடியவன்; ஆனால், அவன் தன் ராஜ்யத்தில் செய்த நன்மைகளைப் பார்த்தால் மிகவும் நல்லவன் என்றே தோன்றுகிறது. ஆயினும், அவனுக்கு இஸ்லாம் மதத்தில் இருந்த பற்றும், அவன் பொருளின்மேல் வைத்திருந்த பேராசையும் அவ்வாறு செய்யும்படி தூண்டிவிட்டன என்று எண்ணுகிறேன்' என்றான் முத்து.

'ஆமாம், வெகு நன்றாய்ச் சொன்னாய்; அந்த இரண்டுந்தான் காரணம்' என்றார் பாட்டனார்.

'தாதா! பின்பு நமது தேசம் என்ன கதியை அடைந்தது?' என்று கேட்டான் முத்து.

'குழந்தாய் ! அதைச் சொல்லுகிறேன், கேள் : வட இந்தியாவில் டெல்லி, அஜ்மீர், கன்னோசி என்று மூன்று பெரிய ராஜ்யங்கள் இருந்தன. அந்த ராஜ்யங்களை மூன்று ராஜபுத்திர அரசர்கள் ஆண்டனர் ; ராஜ புத்திரரும் க்ஷத்திரியர்களே. அனங்கபாலன் டெல்லி ராஜ்யத்தையும், பிருதிவி அஜ்மீர ராஜ்யத்தையும், ஜயசந்திரன் கன்னோசி ராஜ்யத்தையும் ஆண்டு வந்தார்கள். அனங்கபாலனுக்கு இரண்டு பெண்கள். அவர்களில் பெரிய பெண் வயிற்றுப் பிள்ளை ஜயசந்திரன், சிறிய பெண் வயிற்றிற் பிறந்தவன் பிருதிவி. பிருதிவி அந்தக் காலத்தில் இருந்த அரசர்களில் சிறந்தவன். ராஜ லக்ஷணங்கள் எல்லாம் அவனுக்குப் பொருந்தி யிருந்தன. அதனால், அனங்கபாலர் தம் ராஜ்யத்தைப் பிருதிவிக்குக் கொடுத்துவிட்டு இறந்துவிட்டார். பிருதிவிக்கு மற்றொரு பாகம் கிடைக்கவே, ஜயசந்திரனுக்குப் பிருதிவிமேல் பொறாமையும் பகையும் உண்டாயின. அந்தப் பகை நாளுக்கு நாள் முதிர்ந்துவிட்டது.

'வட இந்தியா இப்படி யிருக்க, ஆப்கானிஸ்தானத்தில் கஜினி வம்சத்து அரசர் போய், கோரி என்னும் வமிசத்து அரசர் ஆளத் தொடங்கினர். அவர்களில் முஹம்மது கோரி சிறந்தவன். அவன் பல முறை இந்தியாவின்மேல் படையெடுத்து வந்தான். பிருதிவி அவனை அத்தனை முறையும் தோற்கடித்தான். சில சமயங்களில் கோரியைக் கைதியாகப் பிடித்தும், தயாள குணத்தினால் விடுதலை செய்தான். ஒரு முறை கோரி படுகாயம் பட்டுத் தப்பித்துக்கொண்டு ஓடினான். அதனால், கோரி பிருதிவியை வெல்ல ஏற்ற சமயம் எதிர்பார்த்திருந்தான்.

'பிருதிவி அடைந்த வெற்றிகளைக் கேட்கும்போதெல்லாம் ஜயசந்திரன் வயிறெரிவது வழக்கம். பின்பு, அவன் ஓர் அசுவமேத யாகம் செய்யத் தீர்மானித்தான். அசுவமேத யாகம் செய்யும் அரசன் மற்ற அரசர்களைவிடச் சிறந்தவன் என்பது கொள்கை. யாகம் செய்யும் அரசன் அரண்மனைக்கு மற்ற அரசர்கள் அனைவரும் வருவார்கள். அங்கே செய்யவேண்டிய பணிவிடைகளை யெல்லாம் வந்த அரசர்களே செய்யவேண்டும். அதனால், ஜயசந்திரன் மற்ற அரசர்களுக்குத் தெரிவித்தான். ஜயசந்திரனுக்கு ஒரு குமாரத்தி உண்டு. அவள் அந்தக்காலத்தில் இருந்த கன்னிகைகளில் மிகவும் அழகு வாய்ந்தவள். அவள் பெயர் சம்யுக்தை. அசுவமேதம் முடிந்த பிறகு அந்தக் கன்னிகையின் சுயம்வரமும் நடக்கும் என்று தெரிவித் திருந்தான். அதனால் அரசர் அனைவரும் வந்திருந்தார்கள். பிருதிவி மாத்திரம் வரவில்லை; ஜயசந்திரனைத் தனக்கு மேலான அரசனாகக் கொள்வது பிருதிவிக்கு இஷ்டமில்லை.

'பிருதிவியோடு சந்தர் என்னும் கவிராயர் ஒருவர் இருந்தார். அவர் சம்யுக்தையின் அழகையும் நற்குணங்களையும் பிருதிவிக்குச் சொன்னார். அதைக் கேட்டுப் பிருதிவி சம்யுக்தையை விவாகம் செய்ய விருப்பங் கொண்டான். அது எப்படி முடிவது? பிருதிவிக்குச் செவிலித்தாய் ஒருத்தி இருந்தாள். அவளே சம்யுக்தையின் தாய்க்கும் செவிலியாக இருந்தவள். பிருதிவி அவளிடம் தன் கருத்தை வெளியிட்டான். அவள் அதிக சந்தோஷங்கொண்டு கன்னோசிக்குப் போய் ஜயசந்திரன் அரண்மனையில் தாதியாக அமர்ந்தாள். அப்போது, அவள் பிருதிவியைப்



பிருதிவி சம்யுக்தையைக் கொண்டு போகிறான்

பற்றிச் சம்யுக்தைக்குச் சொன்னாள். பிருதிவியினுடைய ஜயப்பிரதாபங்களை யெல்லாம் சம்யுக்தையும் கேள்விப்பட் டிருந்தாள். அதனால், பிருதிவியையே விவாகம் செய்துகொள்ள சம்யுக்தை நிச்சயித் திருந்தாள். இந்த விஷயம் பிருதிவிக்கும் தெரிந்தது.

'பிறகு, ஜயசந்திரன் அசுவமேதம் செய்தான். அப்போது அரசர்கள் தமக்கு ஏற்பட்ட வேலையைச் செய்தார்கள். பிருதிவி வரவில்லை. அதனால் ஜயசந்திரன், பிருதிவியைப்போல் பொன்னால் ஓர் உருவம் செய்து, வாசற்படியில் காவலனாக வைத்தான். யாகம் முடிந்தது. பிறகு சுயம்வரம் நடக்கவேண்டும். சுயம்வர மண்டபத்தில் அநேக ராஜகுமாரர்கள் வீற்றிருந்தார்கள். சம்யுக்தை தோழிகள் சூழச் சுயம்வர மண்டபத்திற்கு வந்தாள்; வந்து தகப்பனாரை வணங்கிய பின்பு, சுயம்வர மண்டபத்தைச் சுற்றி வந்தாள். தோழி, அங்கிருந்த அரசர்களுடைய நாடு, பெயர், குலமுறை முதலியவற்றைச் சொல்லிக்கொண்டே வந்தாள். சம்யுக்தை ஒருவருக்கும் மாலை சூட்டவில்லை. அரசர் அனைவரும் திகைத்து இருந்தார்கள். அப்போது சம்யுக்தை அங்கிருந்த பிருதிவியின் உருவத்திற்கு மாலையிட்டாள். வெளியே மாறு வேஷங் கொண்டு மறைந்திருந்த பிருதிவி, உடனே உள்ளே புகுந்து, சம்யுக்தையை யெடுத்து, தன் குதிரையின்மேல் உட்கார வைத்துக்கொண்டு விரைந்து போய்விட்டான்.

'ஜயசந்திரனுக்குக் கடுங் கோபம் மூண்டுவிட்டது. சபையில் இருந்த அரசருக்கும் ஆக்ருஷம் உண்டாயிற்று. அனைவரும் கூடிப் பின் தொடர்ந்தார்கள். பிச்சைக்கார ரெல்லாம் எழுந்து வாள்களைக் கையிற்

கொண்டு சண்டை யிட்டார்கள். பிருதிவியின் போர் வீரர் பிச்சைக்காரர்போல் வேஷங்கொண்டு இருந்தார்கள்; சமயம் வரவே சண்டைக்கு ஆரம்பித்துவிட்டார்கள். ஐந்து நாள் சண்டை நடந்தும், ஜயசந்திரனே அபஜயம் அடைந்தான். பிருதிவி சம்யுக்தையைக் கொண்டுபோய் டெல்லியில் விவாகம் செய்து கொண்டான்.

'தோல்வி அடைந்து அவமானப்பட்ட ஜயசந்திரன், பிருதிவியை அடக்க எண்ணி, முகம்மதுகோரிக்குத் தெரிவித்து, தானும் அவனுக்கு உதவிபுரிவதாகச் சொன்னான். கோரிக்கும் மனம் பதைத்துக் கொண்டு இருந்தது. உடனே, அவன் டெல்லியின்மேல் படையெடுத்தான். ஜயசந்திரனும் கோரியோடு கூடிக்கொண்டான். அது கண்டு, பிருதிவி சண்டைக்குப் புறப்பட்டான். இருதிறத்தாருக்கும் தனேசுவரம் என்னுமிடத்தில் கொடிய யுத்தம் நடந்தது. அப்போது சம்யுக்தை மனம் தாளாமல், யுத்தகளத்தில் தன் தகப்பனுரைச் சந்தித்து, "ஐயோ இது தகுமா! உமது செய்கையால் தேசம் நாசமாகுமே! நமது மதத்திற்கும் ஈனம் வருமே!" என்று சொன்னாள். என்ன சொல்லியும் அவன் மனம் இரும்பாகவே யிருந்துவிட்டது.

'கோரி யரசன் பிருதிவியைச் சூதுமார்க்கமாகக் கொலை செய்துவிட்டான். தமது மன்னன் இறக்கவும் மற்றச் சேனைகள் முனைந்து சண்டை செய்தும் முடியவில்லை. இதைக் கேள்விப்பட்டாள் சம்யுக்தை. உடனே தீ வளர்க்கச் சொல்லித் தன் கணவனோடு மடிந்து சாம்பலாயினாள். கோரி தான் நெடுநாளாகக் கோரிய வண்ணம், டெல்லியைக் கைப்-

பற்றிக் கொண்டான். பிறகு, கோரி ஜயசந்திரன் மேலும் படை யெடுத்துப்போய் சண்டை செய்து, அவனைச் சிறைப் பிடித்துக் கொன்றுவிட்டான். அதன் பிறகு வட இந்தியாவில் கோரியின் அரசாட்சி நிலைத்துவிட்டது' என்றார் பாட்டனார்.

18. சுல்தானா ரிஸியா

'தாதா! ஜயசந்திரன் செய்ததை நினைத்தால் என் மனம் பதைக்கிறது; குலத்துக்குக் கோடாலிக் காம்பாக ஏற்பட்டான். பாவி, தன் புத்திரி சொன்னதையாவது யோசித்தானா? "ஒற்றுமை யில்லாத குடும்பம் ஒருமிக்கக் கெடும்" அதற்கு இதைவிட என்ன திருஷ்டாந்தம் வேண்டும்? தாதா! பிறகு கோரிதான் ஆண்டானோ?' என்றான் முத்து.

'குழந்தாய்! கோரி வட இந்தியாவை ஜயித்த பிறகு, குதுப் உதீன் என்னும் தன் அடிமை ஒருவனை தனக்குப் பதிலாக ஆளும்படி வைத்துவிட்டு, தான் தன் நாட்டுக்குத் திரும்பி விட்டான். கோரி இறந்து விட்ட பிறகு குதுப் உதீன் என்பவனே வட இந்தியாவுக்கு அரசனானான். குதுப் உதீன் டில்லியைத் தனக்குத் தலைநகராகச் செய்து




குதுப் உதீன்.

கொண்டு அரசாண்டான். டில்லி புராதன நகரம். பாண்டவர்களும் டில்லியைத்தான் நகராகக் கொண்டு

இருந்தனர். அதற்கு அப்போது இந்திரப்பிரஸ்தம் என்று பெயர்.

'குதுப் உதீன் தான் ஆண்டகாலத்தில் ஒருதூண் கட்டியிருக்கிறான். அதற்கு குதுப்மினார் என்று



குதுப்மினார்.

பெயர். அதன் உயரம் சுமார் 240 அடி. அது உலகத்தில் உள்ள உயரமான தூண்களில் இரண்டாவது ஆனது. குதுப் உதீன் ஓர் அடிமையை வாங்கி வளர்த்தான். அவன் பெயர் அல்டாமிஷ். பிறகு குதுப்

உதீன் குமாரத்தியை அல்டாமிஷ் விவாகம் செய்துகொண்டான். அதனால் குதுப் உதீனுக்குப் பிறகு அல்டாமிஷ் பட்டத்திற்கு உரியவன் ஆனான். அல்டாமிஷுக்குப் பல குமாரரும் ஒரு குமாரத்தியும் இருந்தனர். அந்தக் குமாரர்கள் குமாரத்தியளவு குணசாலிகள் அல்லர். அரசு புரியுந் தன்மை அவர்களுக்குக் கொஞ்சமும் இல்லை. சுல்தானா ரிஸியா என்னும் அப் பெண்ணே மிகவும் புத்திசாலி. குணத்தோடு அழகும் அமைந்தவள்.


அல்டாமிஷ்

அல்டாமிஷ் அவளுக்கு ராஜாங்கத்திற்கு வேண்டிய காரியங்களை யெல்லாம் நன்கு கற்பித்து வைத்தான். அவள் நல்ல பாண்டித்தியம் உள்ளவள். எந்நேரமும் வாசித்த வண்ணமாக இருப்பாள். தன் தந்தை நாட்டை யாண்டால் தான் வீட்டை ஆண்டுகொண்டு, தன் தந்தைக்கு உதவியாக இருந்தாள்.


சுல்தானா ரிஸியா

'அல்டாமிஷ் மற்ற அரசர்களோடு சண்டை செய்யப் போகும்போது, தன் குமாரத்தியைத் தனக்குப் பதிலாக அரசாட்சி செய்யும்படி நியமித்துவிட்டுப் போவது வழக்கம். பிள்ளையை நியமிக்காமல் பெண்ணை நியமிப்பதைப் பற்றிப் பிரபுக்களில் பலர் வெறுப்புக் கொண்டனர். ஒரு முறை பிரபு ஒருவன் அரசனை நேரிற் கண்டு,

இதைப்பற்றிக் கேட்டான். அப்போது அல்டாமிஷ், "என் குமாரர்கள் அரசுபுரிய ஏற்றவர்கள் அல்லர், ரிஸியா பெண் ஆனாலும் ஆண்பிள்ளைக்குரிய அறிவும் ஆற்றலும் அமையப் பெற்றவள்" என்று விடை கூறினான். அவளது அரசாட்சியின் சிறப்பைக் கண்டு பிரபுக்களும் பின்பு சம்மதித்து இருந்தார்கள். ஒருமுறை சுமார் ஆறுவருஷ காலம் ரிஸியா தன் தந்தைக்குப் பதிலாக அரசு புரிந்தாள்.

'அல்டாமிஷுக்குப் பிறகு ரிஸியா பட்டத்திற்கு வந்தாள்; வெகு திறமையாக ஆண்டாள். பிரபுக்களேயன்றி அவளுடைய சகோதரரும் அவளுடைய திறமையை மெச்சினார்கள். அவள் ஆண்பிள்ளைபோல் உடை தரித்துச் சிங்காதனத்தில் அமர்ந்து, வெகு திறமையாக நீதி செலுத்தினாள். ஒவ்வொருவர் குறையையும் காதாரக் கேட்டு கருத்தாரச் சிந்தித்துத் தீர்மானம் செய்தாள். அநேக சட்டங்கள் ஏற்படுத்தினாள். இப்படி இரண்டரை வருஷ காலம் சிறப்பாக ஆட்சி புரிந்தாள்.

'பிறகு, ரிஸியா தன் சேனையில் உள்ள யாகுத் என்னும் சேனாதிபதி ஒருவனை விவாகம் செய்து கொள்ள எண்ணங் கொண்டாள். அவன் தங்கள் ஜாதியான் அல்லாமையால், பிரபுக்கள் எல்லாரும் ரிஸியாவுக்கு விரோதமாகக் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்களில் அல்தூனியா என்பவன் தலைமையானவன். ரிஸியா அல்தூனியாவின்மேல் படையெடுத்தாள். அந்தச் சண்டையில், யாகுத் என்பவன் கொலையுண்டான். ரிஸியாவும் சிறையில் அகப்பட்டுக்கொண்டாள். ஆயினும் அல்தூனியா

இரக்கங்கொண்டு ரிஸியாவை விடுதலை செய்தான். பிறகு, ரிஸியா அல்தூனியாவை விவாகம் செய்து கொண்டாள். அதன்மேல், மற்றப் பிரபுக்களும் ரிஸியாவின் சகோதரரில் ஒருவனும் அவளுக்கு விரோதமாகக் கலகம் செய்து, அவள்மேல் படை யெடுத்து வந்து, சண்டை செய்து, அவளையும் அவளுடைய புருஷனையும் சிறைப்பிடித்துக் கொன்றுவிட்டார்கள். அவளுக்குப் பிறகு அநேக அரசர்கள் ஆளத் தொடங்கினார்கள்' என்றார் பாட்டனார்.

19. பிரோஸ் ஷா

'தாதா! ரிஸியா பெண்ணாக இருந்தாலும் எவ்வளவு திறமையாக ஆண்டிருக்கிறாள்! அப்படிப்பட்ட அரசியை அந்தப் பிரபுக்கள் கொலை செய்தது மிகவும் கொடுமை. அவளுக்குப் பிறகு நன்றாய் அரசாட்சி செய்தவர் யார்? தாதா' என்று கேட்டான் முத்து.

'முத்து! ரிஸியாவுக்குப் பின் பல அரசர் ஆண்டனர்; அவர்கள் எல்லாம் பிரசித்தி பெற்றவர்கள் அல்லர். ஆனால் பிரோஸ் ஷா என்பவன் மிகவும் பேர் பெற்றவன். நாட்டை நன்றாய் ஆண்டவன்; பலவகையிலும் குடிகளுக்கு நன்மையை நாடினவன். அவனைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள்:

'பிரோஸ் ஷா டெல்லியில் அரசாண்டு கொண்டு இருந்தான். இவன் துக்லக் வம்சத்தைச் சார்ந்த அரசன். இவனை முழுதும் மகம்மதியன் என்று சொல்வதற்கில்லை. இவன் தாய் ராஜபுத்திர வம்சத்துப் பெண்; அதனால் இவனுக்கு இந்து மதத்தின் சம்பந்த-

மும் உண்டென்று சொல்லவேண்டும். பிரோஸ் ஷா சாந்த குணமும் இளகிய மனமும் உடையவன். சண்டை சச்சரவு என்றால் அவனுக்குப் பிடிக்காது.

'பிரோஸ் ஷாவுக்கு இருந்த மந்திரி அதிக புத்திசாலி; மிகவும் நல்லவன்; நாட்டுக்கு நன்மை செய்யவேண்டும் என்னும் நாட்ட முடையவன். பிரோஸ் ஷா அவனுடைய யோசனையைக் கேட்டு அதன்படி நடப்பது வழக்கம். அந்த மந்திரியின் அபிப்பிராயப்படி அரசன், குடிகள் கட்டவேண்டிய வரியைக் குறைத்துவிட்டான். அதனால் குடிகள் மிகவும் செல்வர்களாகிச் சிறப்பாக வாழ்ந்தார்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் பொன்னும் வெள்ளியும் மலிந்திருந்தன; தானியங்கள் குவிந்திருந்தன. அவன் ஆண்டபோது பூணாரம் பூட்டாத பெண்களே இருந்ததில்லை. தன் நாடு செல்வத்தில் சிறந்து விளங்கவே, பிரோஸ் ஷா புதிதாகச் சில நகரங்களையும் ஏற்படுத்தினான். அந்த நகரங்களுக் கெல்லாம் ஜலாதாரம் உண்டாகும்படி யமுனை, ஸட்லெஜ் நதிகளிலிருந்து பல கால்வாய்கள் வெட்டுவித்தான். அவன் வெட்டிய கால்வாயின் மூலமாகத்தான் இப்போதும் டெல்லிக்குத் தண்ணீர் பாய்கின்றது. இதுவும் அன்றி அநேக பாலங்களும் பாதைகளும் பள்ளிவாசல்களும் நிர்மித்தான்; கலாசாலைகள் ஏற்படுத்தினான். வியாதியஸ்தர்களுக்காகத் தரும வைத்தியசாலைகள் ஏற்படுத்தினான். பாழடைந்து இருந்த பழைய கட்டடங்களையும் சீர்ப்படுத்தினான்.

'பிரோஸ் ஷாவுக்கு ஏழைகளிடத்தில் இரக்கம் அதிகம். ஏழைகளைக் காப்பதற்காக வருஷந்தோறும் பெருந் தொகையான திரவியம் செலவழித்தான்.

கிழவர்களையும், வேலை செய்யச் சக்தியற்றவர்களையும் அதிகமாக ஆதரித்தான். நரைத்தன உத்தியோகத்தில் உழைத்து விருத்தாப்பிய மடைந்தவர்களைத் தள்ளிவிடுவதில்லை. அந்த வேலையை அவர்கள் பிள்ளைகளில் ஒருவனுக்குக் கொடுத்துக் காத்துவந்தான். பிரோஸ் ஷா அரசாட்சியில் அனைவரும் நிர்ப்பயமாகச் சந்தோஷம் அடைந்து வாழ்ந்திருந்தார்கள்' என்றார் பாட்டனார்.

20. கிருஷ்ணதேவராயர்

'தாதா! அதென்ன, தென் இந்தியாவை விட்டுவிட்டீர்களே. முன்பு சில கதைகள் சொன்னீர்கள், அதன்பின் ஒன்றும் காணோமே' என்று ஆவலோடு கேட்டான் முத்து.

'ஆமாம், நன்றாய் ஞாபகப்படுத்தினாய்; தென் இந்தியாவைப்பற்றி முக்கியமாக ஒன்று இப்போது உனக்குச் சொல்ல வேண்டும். அதைச் சொல்லுகிறேன், கவனமாகக் கேள்:

'முன்பு சுல்தானா ரிஸியாவை பற்றிக் கதை சொன்னேன் அல்லவா? அந்தப் பாரம்பரைக்குப் பிறகு அல்லா உதீன் என்னும் அரசன் ஒருவன் ஆண்டான். அவன்தான் முதல் முதல் தென் இந்தியாவை ஜயித்த மகம்மதியன். அவனுக்குப் பிறகு முஹம்மத் துக்லக் என்பவன் ஆண்டான். அவன் ஆட்சியின் கடைசிக் காலத்தில் அவனுடைய ராஜ்யம் சீர்குலைந்தபடியால், தென் இந்தியாவில் ஓர் இந்து ராஜ்யமும், ஒரு மகம்மதிய ராஜ்யமும் ஏற்பட்டன. இந்து ராஜ்யத்திற்கு விஜய நகர ராஜ்யம் என்றும், மகம்மதிய

ராஜ்யத்திற்குப் பஹமனீ ராஜ்யம் என்றும் பெயர். இவை இரண்டுக்கும் எந்நேரமும் சண்டை சச்சரவுகள் நடந்துகொண்டு இருந்தன. விஜய நகர ராஜ்யம்



ஒரு காலத்தில் துங்கபத்திரை நதி முதல் கன்னியாகுமரி முனைவரையில் பரவியிருந்தது.

'விஜய நகரத்தை ஆண்ட ராஜ பரம்பரையில் கிருஷ்ணதேவராயர் என்பவர் அதிக பிரசித்தயானவர்.


இவர் கம்பீரமான தோற்றம் உடையவர்; சிறந்த வீரர்: மிகவும் பராக்கிரமசாலி, சிறந்த சேனாதிபதி. படை யெடுத்துப் போகும்போது தாமே தலைவராக நின்று சேனையை நடத்துவார். இவருக்குத் தேக பலத்தோடு புத்திபலமும் அதிகம். தெலுங்கு பாஷையில் தேர்ந்த பண்டிதர்; அநேக பண்டிதர்களை ஆதரித்தவர். அநேக தெலுங்கு நூல்கள் இவர் காலத்தில் செய்யப்பட்டன.



கிருஷ்ணதேவராயர்

'கிருஷ்ணதேவராயருக்குச் சேனாபலமும் அதிகம். பதினொரு லக்ஷம் படைவீரரோடு, ஆயிரத்திற்கு அதிகமான யானைகளும் இருந்தன. விஜயநகர ராஜ்யத்திற்கு விஜய நகரம் என்னும் பட்டணமே

தலைநகராக இருந்தது. அது தெற்கு வடக்கில் 12 மைலும், கிழக்கு மேற்கில் 10 மைலும் பரந்திருந்தது. அங்கே பல சிறந்த கட்டடங்களும் சிங்காரத் தோட்டங்களும் விளங்கியிருந்தன. அன்றி, குடிகளும் சிறந்த செல்வர்களாக வாழ்ந்திருந்தனர்.



விஜய நகரத்திலுள்ள சபாமண்டபம்

'ஒரு முறை கிருஷ்ணதேவராயருக்கும் பஹமனீ ராஜ்யத்தைச் சார்ந்த பீஜப்பூர் சுல்தானுக்கும் சண்டை உண்டாயிற்று. அதில் ராயரே வெற்றி அடைந்தார். பிறகு இருவருக்கும் சமாதான உடன்படிக்கை நடந்தது. அதில் சுல்தான் ராயருக்கு முதலில் சலாம் செய்யவேண்டும் என்னும் நிபந்தனை ஏற்பட்டிருந்தது.

'கிருஷ்ணதேவராயருக்குப் பின் அரசு புரிந்தவர்கள் அவ்வளவு சிறந்தவர்கள் அல்லர். அதனால் அந்த ராஜ்யம் நாளடைவில் நசித்துப் போயிற்று' என்றார் பாட்டனார்.

21. பாபர்

'தாதா! பின்பு வட இந்தியாவின் நிலைமை எப்படி ஆயிற்று? மகம்மதியர்களே ஆண்டுகொண்டு இருந்தார்களோ?' என்று கேட்டான் முத்து.

'முத்து! அந்த விஷயம் சொல்லுகிறேன், கேள்: வட இந்தியாவில் பிரோஸ் ஷா என்னும் செங்கோல் அரசன் ஆண்டுகொண்டு இருந்தான் என்று முன்பு சொன்னேன் அல்லவா? அவனுக்குப் பிறகு அநேகர் ஆண்டார்கள். அவர்கள் நாட்டின் நன்மைக்கென்று ஆளவில்லை; அதிகாரத்தைச் செலுத்துவதற்கே ஆண்டார்கள். அதனால் குடிகள் மிகவும் வருந்தினார்கள். அநேக சிறு ராஜ்யங்கள் ஏற்பட்டுவிட்டன. அந்தக் காலத்தில் இப்ராஹிம் லோடி என்பவன் டெல்லியில் அரசு புரிந்தான். அவன் மிகவும் கொடியவன். அதனால், அந்த ராஜாங்கத்தைச்சார்ந்த பிரபுக்கள் அவனுக்கு விரோதமாகக் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். ராஜபுத்திர அரசர்களும் அவன்மேல் வெறுப்புக் கொண்டார்கள்.

'வட இந்தியா இந்த நிலைமையில் இருக்கும்போது, காபூலில் பாபர் என்பவன் அரசாட்சி செய்துகொண்டு இருந்தான். ராஜபுத்திரர்கள் பாபரை இந்தியாவின்மேல் படையெடுத்து வரும்படி வேண்டினார்கள். பாபர் உடனே படையெடுத்து வந்து,

இப்ராஹிம் லோடியோடு சண்டை செய்து ஜபித்து, டெல்லியைத் தன் வசப்படுத்திக் கொண்டான்.

'முகலாய அரசாட்சியை முதல் முதல் இந்தியாவில் நிலைக்கச் செய்தவன் பாபரே. பாபர் சிறு வயதில் மிகவும் சிரமப்பட்டவன். பாபர் பதின் மூன்றும் வயதில் தன் தந்தையை இழந்தான். அவனுடைய ராஜ்யத்தைச்சிற்றப்பன் பிடுங்கிக் கொண்டான். அதனால், பாபர் இருக்கவும் இடமில்லாமல், எங்கெங்கும் திரிந்து, கடைசியில் ஆப்கானிஸ்தானத்திற்கு வந்து சண்டைசெய்து, ஒருசிறிய ராஜ்யத்தைச் சம்பாதித்து, ஆண்டு கொண்டிருந்தான். பிறகுதான் அவன் இந்தியாவுக்கு வந்தது.



பாபர்

'பாபர் மிகவும் பலசாலி; அதிக தைரியசாலி. பாபர் என்னும் பதத்திற்குச் சிங்கம் என்று அர்த்தம். சிங்கத்திற்குள்ள பலமும் தைரியமும் பாபருக்கு இருந்தன. இரண்டு பக்கங்களில் இரண்டு மனிதர்களை இடுக்கிக்கொண்டு, உயரமான மதிற் சுவரின்மேல் சாயாமல் சருக்காமல் ஓடக்கூடிய சக்தி

பாபருக்கு உண்டு. ஆற்றில் வெள்ளம் போகும்போது குறுக்கே நீந்தி எதிர் கரைக்குச் செல்லுவான்; ஒரே நாளில் நூறு மைல் தூரம் குதிரைச் சவாரி செய்யக்கூடிய வல்லமை உண்டு. இவ்வளவு பலத்தோடு தயாள குணமும் சம்பூர்ணமாக இருந்தது. கொள்ளையிடுவது, கொலை செய்வது முதலிய கொடிய செய்கைகள் பாபரிடம் கிடையா. நீதியோடு அரசு புரியவேண்டும் என்னும் நோக்கமே பாபர் மனத்தில் குடிகொண்டிருந்தது. பாபர் இந்தியாவில் நான்கு வருஷகாலமே அரசாண்டான். பிறகு அவனுக்கு அற்புதமான மரணம் உண்டாயிற்று. அதைச் சொல்லுகிறேன், கேள் :

'பாபருக்கு ஒரு பிள்ளை இருந்தான். அவனுக்கு உமாயூன் என்று பெயர். அவனுக்கு ஒருநாள் வியாதி கண்டது. அது நாளுக்கு நாள் விருத்தி யடைந்ததே யொழிய கொஞ்சமும் குறையவில்லை. பாபர் மிகவும் வருத்தம் அடைந்தான். கடவுளை நோக்கி வேண்டினான். சிறிதும் குணப்படவில்லை. ஒரு பெரியவர் பாபரைப் பார்த்து, "உம்மிடமுள்ள அருமையான பொருளைக் கடவுளுக்குக் கொடுத்துவிட்டால், உமது குமாரனுக்கு நோய் குணமாகும்" என்றார். பாபர் சற்று யோசித்தான். அப்போது பெரியவர், "ஆக்ராவில் உமக்குக் கிடைத்த அருமையான வைரக் கல்லைக் கொடுத்துவிடலாமே" என்றார். அதன்மேல் பாபர் "வைரக்கல் நமக்கு உயர்ந்தது; கடவுளுக்கு உயர்ந்ததாகுமா—ஆகாது. என் உயிரைவிடச் சிறந்த பொருள் எனக்கு வேறு இல்லை. ஆதலால், என் உயிரையே கடவுளுக்கு நான் கொடுக்கிறேன், என் குமாரன் உயிர் பெற்றால் போதும்" என்றான். பிறகு, தன்

குமாரனது படுக்கையை மூன்று முறை சுற்றிவந்து கடவுளை நோக்கி வேண்டினான். அப்படியே உமாயூன் சுகம் அடைந்தான். பாபர் நாளடைவில் பலவீனப்பட்டு இறந்தான்' என்றார் பாட்டனார்.

22. அக்பர்

'தாதா! பாபருடைய குணம் மிகவும் பெருந்தன்மையானது. அவர் குமாரரிடத்தில் கொண்டிருந்த அன்பை என்னவென்று சொல்லலாம் தாதா! பிறகு உமாயூன் எப்படி யிருந்தான்?' என்றான் முத்து.



உமாயூன்

'முத்து! அவனைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள்: உமாயூன் என்றால் "அதிருஷ்டம் உள்ளவன்" என்று அர்த்தம். ஆனால், அவனை துரதிருஷ்டம் துரத்தி அடித்தது. உமாயூன் பட்டத்திற்கு வந்த பிறகு ஷேர்ஷா என்பவன் படை யெடுத்து வந்து டெல்லியைக் கைப்பற்றிக்கொண்டான். உமாயூன் சில நண்பர்களைக் கூட்டிக்கொண்டு தன் மனைவியோடு பாரசிகத்திற்கு ஓடினான். வழியில்

அமரக்கோட்டை என்னும் இடத்தில் ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு அக்பர் என்று பெயரிட்டான். 15 வருஷங்களுக்குப் பிறகு உமாயூன் இந்தியாவுக்கு வந்து ஷெர்ஷாவோடு சண்டை செய்து டெல்லியைக் கைப்பற்றினன்.

'உமாயூனுக்குப் பிறகு அக்பர் பட்டத்திற்கு வந்தான். அக்பர் என்றால் "மிகவும் பெரியவன்" என்று அர்த்தம். அவன் பெயருக்குத் தக்கபடியே இந்தியாவில் மிகவும் பெரிய அரசனாகிச் செங்கோல் செலுத்தினன். தந்தை இறந்த போது அக்பருக்குப் பதின்மூன்று வயது. அதனால் அக்பருக்கு அத்தையின் குமாரனை பெய்ராம்கான் என்பவன் ஐந்து வருஷகாலம் அரசாட்சி செய்து வந்தான். அக்பர் இளமையிலேயே குதிரை ஏற்றம், படைக்கலப் பயிற்சி முதலிய யாவும் நன்றாய்ப் பயின்றான்; படிப்பு மாத்திரம் அவ்வளவாக ஏறவில்லை. அக்பருக்குப் பதினெட்டாம் பிராயம் வந்ததும் அரசாட்சியை ஏற்றுக்கொண்டான். அக்பர் ஐம்பது வருஷகாலம் செங்கோல் செலுத்தினன்.



அக்பர்

'அக்பர் மிகவும் அழகான உருவம் உள்ளவன். கைகள் முழங்கால் அளவு நீண்டும், மார்பு அகன்றும் இருக்கும். அக்பர் அதிக பலசாலி. குதிரைச் சவாரி செய்வதும் கால் நடையாக நடப்பதும் அவனுக்கு வெகு பிரியம். ஒரே முறையில் முப்பது நாற்பது மைல் நடப்பதும் உண்டு. துப்பாக்கி பிடித்துச் சுடு-வதில் மிகவும் வல்லவன்.



[அக்பர் அரசாட்சிக்கு வந்த போது இருந்த ராஜ்யபாகம்]



[அக்பர் இறந்தபோது இருந்த ராஜ்யபாகம்]

'அக்பர் அரசாட்சிக்கு வரும்போது டெல்லியும் பஞ்சாபும் அவனுடைய அரசாட்சியில் அமைந்திருந்-தன. பிறகு, அக்பர் கொஞ்சங் கொஞ்சமாக வட இந்தியா முழுதும் ஜயித்துச் செங்கோல் செலுத்-தினன். அக்பருடைய சம்ஸ்தானத்தில் தேர்ந்த மந்திரிகள் இருந்தார்கள். அவர்களில் தோடர்மல் என்பவன் சிறந்தவன். அக்பர், தோடர்மல் என்ப-வனைக் கொண்டு நிலத்தை அளந்து, பூசாரத்திற்குத்

தக்கபடி வரி வசூல் செய்தான். சுலபமாக ஆளுகை செய்யத் தன் ராஜ்யத்தை 15 மாகாணங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் ஒரு ராஜப் பிரதிநிதியை ஏற்படுத்தினான். அபுல் பாஸல் என்பவன் அக்பருடைய ராஜாங்க முறையைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறான்.

‘அக்பர் மத வித்தியாசம் பாராட்டுவ தில்லை. சம்ஸ்கிருதத்திலிருந்து பாரதம், ராமாயணம் முதலிய நூல்களைப் பாரசீக பாஷையில் மொழிபெயர்க்கச் செய்தான். அந்தந்த மத சித்தாந்தங்களை அததற்கு உரியவர்களைக் கொண்டு கேட்பான். சில சமயங்களில் இந்துவைப்போல் உடுத்திக்கொண்டு, நெற்றியில் பொட்டும் இட்டுக்கொள்வான்.

‘அக்பர் மிகவும் நல்ல அரசன்; அவன் குடிகளிடத்தில் கொண்டிருந்த பக்ஷத்திற்கு அளவில்லை. அக்பர் இந்துக்களை மிகவும் பக்ஷமாக நடத்தினான். நம்மவர்களுக்கு ஒன்றும் இந்துக்களுக்கு ஒன்றும் என்று அவன் எண்ணியதே யில்லை. இந்துக்களோடு கூட்டுறவு செய்யவேண்டும் என்று ராஜபுத்திர கன்னிகை ஒருத்தியை அக்பர் விவாகம் செய்துகொண்டான். இந்துக்களுக்கு ராஜாங்கத்தில் உயர்ந்த உத்தியோகங்கள் கொடுத்தான். தன் குமாரனை ஸலிம் என்பவனுக்கும் ஒரு ராஜபுத்திர கன்னிகையை விவாகம் செய்வித்தான். அக்பர் தைரியசாலிகளை மெச்சிச் சம்மானம் செய்தான். குடிகள் எல்லோரும் அக்பரிடத்தில் ராஜபக்தி கொண்டு, “அக்பரே அரசன்; அக்பர் அரசே அரசு” என்று வாழ்த்தினார்கள்’ என்றார் பாட்டனார்.

23. தாஜ் மஹால்

'தாதா! அக்பர் செய்த அரசாட்சியைக் கேட்க எனக்கு ஆனந்தம் உண்டாகிறது. அக்பருக்குப் பின் யார் ஆண்டார்கள்?' என்றான் முத்து.

குழந்தாய்! அக்பருக்குப் பின் அவன் குமாரனான ஸலீம் என்பவன் ஜஹாங்கீர் என்று பெயர் வைத்துக்கொண்டு பட்டத்திற்கு வந்தான். அவனுடைய ராணிக்கு நூர்ஜஹான் என்று பெயர். ஜஹாங்கீர் தன் ராணியைக் கேட்காமல் எதும் செய்வதில்லை. அவள் சொல்லுக்கு மாறில்லை; அவள் இட்டதே சட்டம். ஆனால் ஜஹாங்கீர் தன் தகப்பனார் செய்த ஏற்பாட்டை அனுசரித்து வந்தமையால், ராஜ்யம் க்ஷேமமாகவே இருந்தது. ஜஹாங்கீர் எந்நேரமும் குடி வெறியில் மூழ்கிக் கிடப்பான். அதனால், அவனுடைய புத்தி சாதுர்யமெல்லாம் பயன்படாமற் போயிற்று.



ஜஹாங்கீர்


'ஜஹாங்கீருக்குப் பின்பு அவன் குமாரனான ஷாஜஹான் பட்டத்திற்கு வந்தான். இவன் மிகவும்

நல்ல அரசன் குடிகளைப் பக்ஷமாக நடத்தினான். குடிகளெல்லாம் அந்த அரசனைத் தம் தந்தையாகப் பாவித்தார்கள். அவன் அரசாட்சி செய்யும்போது தேசத்தில் செல்வம் மலிந்திருந்தது. அதனால் ஷா-ஜஹான் காலத்தில் அநேக சிறந்த கட்டடங்கள் வட இந்தியாவில் ஏற்பட்டன. இவன் பெயர் என்-றென்றும் விளங்கும்படி டெல்லி-யிலும் ஆக்ராவிலும் அநேக சிறந்த கட்டடங்கள் கட்டினான். டெல்-லியில் கட்டின சபாமண்டபம் மிகவும் சிறந்தது. கட்டடம் முழு-வதும் சலவைக் கற்களால முடிந்-திருக்கிறது. அதிலுள்ள சித்திர வேலையின் சிறப்பைச் சொல்ல ஒருவராலும் முடி-யாது. பலவகையான இரத்தினங்கள் பதித்து இரண்டு மயில்கள் செய்து மயிலாசனம் ஒன்று அமைத்-திருந்தான். அந்த மயில் பார்ப்பவர் கண்ணுக்கு உயிருள்ள மயில்போலவே தோன்றும். அந்த மயி-லாசனத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு, ஷாஜஹான் தர்பார் நடத்துவது வழக்கம். ஜும்மா மசூதி என்று ஒரு பள்ளி வாசல் டெல்லியில் கட்டி யிருக்கிறான். அது உலகத்திலுள்ள பள்ளிவாசல்கள் எல்லாவற்றி-லும் பெரியது.



ஷாஜஹான்

‘ஷாஜஹான் மற்றொரு சிறந்த கட்டடம் கட்டி யிருக்கிறான். அதன் பெயர் தாஜ் மஹால். அதன் வரலாற்றைச் சொல்லுகிறேன், கேள் : ஷாஜஹான் ராணியின் பெயர் மும்தாஜ் மஹால்; அவளிடத்தில் ஷாஜஹான் மிகவும் அன்பு கொண்டிருந்தான். புரு-



Agra Jumma Musjid

ஷனும் மனைவியும் நகமும் சதையும்போல் வாழ்ந்திருந்தார்கள். மும்தாஜ் மஹால் எட்டாவது குழந்தை பிரசவித்து இறந்துபோனாள். அவள் இறக்கும் தருணத்தில் தன் நாயகனை அழைத்து, 'நாயக! இனி நான் பிழைக்க மாட்டேன்; நான் இறந்துவிட்டால், நீர் வேறு கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது. என்மேல் வைத்த அன்பை வேறு ஒருத்திமேல் வைக்கக்கூடாது. என் பிரேதத்தை அடக்கம் செய்யுமிடத்தில் பிரசித்தமான கட்டடம் ஒன்று கட்ட வேண்டும்' என்றாள். அரசனும் அவ்வாறே செய்வதாக வாக்களித்தான்.



மும்தாஜ் மஹால்

'ஷாஜஹான் தன் ராணியை ஆக்ராவில் அடக்கஞ் செய்தான். அந்தக் கல்லறையின்மேல் ஒரு சிறந்த கட்டடம் கட்டினான்; அது முழுதும் சலவைக் கற்களால் முடிந்தது. நிலா வெளிச்சத்தில் அந்தக் கட்டடத்தைக் கண்டால், சந்திரனே பூமியில் இறங்கி வந்திருப்பதுபோல் தோன்றும். அதன் சிறப்பை வர்ணித்துச் சொல்ல ஒருவராலும் ஆகாது. பதினெட்டடி உயரம் கடைக்கால் எழுப்பி, அதன்மேல் அதி உன்னதமாகக் கட்டப்பட்டிருக்கிறது. நான்கு மூலையிலும் நான்கு சிகரங்கள் விளங்குகின்றன. கட்டடத்தின் நடுவில் ஒரு சமாதி யிருக்கிறது. அதில்தான் மும்தாஜ் மஹாலை அரசன் அடக்கம் செய்-



தாஜ் மஹால்

தான். ஷாஜஹான் இறந்த பிறகு அவனையும் அவள் பக்கத்திலே அடக்கம் செய்திருக்கிறார்கள். மும்தாஜ் மஹால் என்னும் அவள் பெயரில் முதலைக் குறைத்து அக் கட்டடத்திற்குத் 'தாஜ் மஹால்' என்று பெயரிட்டிருக்கிறார்கள்' என்றார் பாட்டனார்.

24. ஔரங்கஜேப்

'தாதா! ஷாஜஹான் அரசாட்சி செய்ததைக் கேட்கச் சந்தோஷம் உண்டாகிறது. அவன் தன் குடும்பத்தில் கொண்டிருந்த அன்பைக் குடிகளிடத்திலும் கொண்டிருந்தான். அதனால்தான் தேசம் சிறப்படைந்து விளங்கிற்று. தாதா! முகலாய ராஜ்யம் பின்னும் எவ்வளவு காலம் இவ்வளவு சிறப்பாக விளங்கி இருந்தது?' என்று கேட்டான் முத்து.

'முத்து! முகலாய ராஜ்யம் ஷாஜஹானுக்குப் பின்பு க்ஷீணதசை அடையத் தொடங்கிற்று. ஷாஜஹானுக்குப் பல பிள்ளைகள் இருந்தார்கள். அவர்களில் ஔரங்கஜேப் என்பவன் ஒருவன். அவன் மிகவும் வஞ்சகமுள்ளவன். அவன் தன் பிதாவுக்கு விரோதமாகக் கலகம் செய்து ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டான். ஔரங்கஜேப் தன் தந்தையைப் போலவும் பாட்டனைப் போலவும் இல்லாமல், அவர்களுக்கு முற்றும் மாறாக நடக்கத் தலைப்பட்டான். மகம்மது மதத்தில் அவனுக்குப் பற்று அதிகம்; மற்ற மதங்களை இகழவும் ஆரம்பித்தான். இந்து ஆலயங்களை இடித்தான், விக்கிரகங்களை உடைத்தான், அவ்வளவோடு போனால் போறுமே; இந்துக்களுடைய ஆலயங்கள் இருந்த இடத்தில்

பள்ளிவாசல்கள் கட்டினான். விக்கிரகங்களைப் பள்ளி-வாசலுக்குப் படிக்கட்டுகளாக அமைத்தான். காசி-யிலும் மதுரையிலும் இருந்த பெரிய ஆலயங்களை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டான்.



ஔரங்கஜேப்

'அவன் அந்நிய மதத்தில் விரோதங் கொண்டு நடந்தாலும், தன் மதத்தில் ஆழ்ந்த பக்தியுள்ளவன். தன் மதசம்பந்தமான உபவாசங்களை ஒருபோதும் அனுஷ்டியாமல் விடுவதில்லை. தண்ணீர் தவிர மது-பானத்தைக் கனவிலும் நினைப்பதில்லை. எந்நேர-

மும் குரான் என்னும் வேத புஸ்தகத்தை வாசிப்பதில் மிகவும் பிரியமுள்ளவன். அதனால் எல்லோரையும்



மகம்மதிய ராக்கவேண்டும் என்னும் எண்ணம் அவ-
னுக்கு உண்டாயிற்று. இந்துக்களை மகம்மதியர் ஆகும்-

படி கட்டாயப்படுத்தினன். மகம்மதியர் அல்லாதவர்க்குத் தலைவரி ஏற்படுத்தினன்.

'இதனல், ஔரங்கஜேபை அனைவரும் பகைக்க ஆரம்பித்தார்கள். ராஜபுத்திரர்களும் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள். அந்தக் காலத்தில் ஔரங்கஜேப் தக்ஷிணத்தின்மேல் படையெடுத்து, பீஜபூர், கோலகொண்டா முதலிய சில நாடுகளை ஜயித்தான். அதன் பிறகுதான் இவன் ராஜ்யம் க்ஷீணதசை யடைய ஆரம்பித்தது.

'ஔரங்கஜேப் ஆண்ட காலத்தில் தக்ஷிணத்தில் மஹாராஷ்டிரர் என்னும் வகுப்பார் ஆண்டுகொண்டு இருந்தார்கள். அவர்கள் விந்திய மலைக்குத் தெற்கில் உள்ள மலைகளின்மேல் கோட்டைகள் அமைத்துக்கொண்டு ஆண்டுவந்தார்கள். அவர்கள் மகா வீரர்கள். ஔரங்கஜேப் அந்த மகாராஷ்டிரரோடு சண்டை தொடுத்தான். ஒவ்வொரு சண்டையிலும் ஔரங்கஜேப் தோல்வி யடைந்தான். ஒரு நாள் அரசனுடைய கூடாரமே கொள்ளை போயிற்று; சேனைகளும் சிதறி ஓடிப் போயின, இப்படிப்பட்ட கஷ்டத்தில் அவனுடைய குமாரர்களும் அவனுக்கு விரோதம் செய்யத் தலைப்பட்டார்கள். ஒருநாள் ஔரங்கஜேப் ஜபம் செய்துகொண்டு இருக்கும்போது திடீரென்று மரணம் அடைந்தான்' என்றார் பாட்டனர்.

25. சிவஜீ

'தாதா! மஹாராஷ்டிரர் என்று சொன்னீர்களே, அவர்கள் யார்? அவர்களில் மிகவும் சிறந்தவர் யார்?' என்று கேட்டான் முத்து.

'குழந்தாய்! நீ இப்போது கேட்டது மிகவும் முக்கியமான விஷயம். அதை நன்றாய்ச் சொல்லுகிறேன், கேள்:

'விந்திய மலைக்குத் தெற்கில், முன் காலத்தில், பீஜபூர் ராஜ்யம் ஒன்று இருந்தது. அதை முஹம்மதியர் ஆண்டுகொண்டு இருந்தார்கள். மஹாராஷ்டிரர் அந்த ராஜ்யத்தில் வசித்திருந்தார்கள். அவர்கள் ராஜாங்கத்தில் உத்தியோகம் செய்தார்கள்; ராணுவத்திலும் அமர்ந்திருந்தார்கள். அவர்களில் ஷாஜீ என்பவர் சிறந்தவர். அவர் தம் அரசனுக்கு உண்மையாக உழைத்துவந்தார். முகலாயர் அடிக்கடி பீஜபூர் ராஜ்யத்தின்மேல் படையெடுத்து வருவது வழக்கம். அந்தக் காலங்களில் ஷாஜீ தம்முடைய வீரத்தினால் அரசனுக்கு வெற்றி யுண்டாக்கினார். அதனால், பீஜபூர் அரசன் ஷாஜீ என்பவருக்குப் பூனாவையும் அதைச் சார்ந்த இடங்களையும் ஜாகீராகக் கொடுத்தான். பின்பு, பீஜபூர் சுல்தானுக்கு விரோதமாகக் கர்நாடகத்தில் ஒரு கலகம் உண்டாயிற்று. ஷாஜீ அதையும் அடக்கினார்; அதனால் அந்த சுல்தான் தஞ்சாவூரையும் செஞ்சிக் கோட்டையையும் ஜாகீராகக் கொடுத்தான். அதன் பின், மஹாராஷ்டிரர் தஞ்சாவூரிலும் அரசாள நேரிட்டது. பிறகு, ஷாஜீ என்பவர் ஜீஜீபாய் என்னும் ஒரு கன்னிகையைக் கல்யாணம் செய்துகொண்டார். அவள்

வயிற்றில் ஓர் ஆண்பிள்ளை பிறந்தது. அதற்குச் சிவஜீ என்று பெயரிட்டார். இந்த சிவஜீயே பின்பு மஹாராஷ்டிரர்களுக்குள் சிறந்த அரசராக விளங்கினுர்.

ஷாஜீ அடிக்கடி சண்டைமேல் போகவேண்டியிருந்ததனுல், சிவஜீயைத் தம் ஆதரவில் வைத்துக்கொள்ள முடிவதில்லை. அதனுல், அவர் சிவஜீயை தமது மந்திரியாகிய தாதாஜீ காண்டதேவ் என்னும் பிராமணரிடம் ஒப்பித்துப்போவது வழக்கம். அந்தப் பிராமணர் சிவஜீக்குக் கல்வி கற்பிப்பதில்லை. ஆனுல், சிவஜீ வாள் வித்தை, வில் வித்தை, குதிரை யேற்றம் முதலிய வீரச் செய்கைகளில் மிகவும் திறமை பெற்று இருந்தார். அந்தப் பிராமணர் சிவஜீயைச் சிறந்த வீரனுக்கினுர்; படிக்கக் கற்றுக் கொடுக்கா விட்டாலும், பாரதம் ராமாயணம் முதலிய நூல்களிலிருந்து அரிய வீரர்களுடைய கதைகளை அப்போதைக்கப்போது சொல்லுவார். அவைகளைக் கேட்கும்போதே சிவஜீக்கு வீராவேசம் உண்டாவது வழக்கம். அவர்களைப்போல் தாமும் பிரசித்தி பெறவேண்டும் என்று எண்ணினுர். இவ்வளவு வீரங் கொண்டிருந்தும் சிவஜீ தம் மாதா வாக்கியத்தை வேத வாக்கியமாக மதித்திருந்தார். இது மிகவும் சிறந்த குணம் அல்லவா.

'இது இப்படியிருக்க, மகம்மதிய மன்னர் தென் இந்தியாவில் புகுந்து, இந்து மதங்களை இகழ்ந்தும், இந்துக்கள் ஆலயங்களை இடித்தும் துன்பம் செய்துகொண்டிருந்தார்கள். முகலாயரும் தென் இந்தியாவைக் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணங் கொண்டிருந்தனர். அதைக் கண்டு மஹாராஷ்டிரர் தம் மதத்தையும் நாட்டையும் காத்துக்கொள்ளுவது அவசியம் என்று கண்டார்கள். அதனுல், மஹா-

ராஷ்டிரர் அனைவரும் ஒருமனங்கொண்டு ஒன்று-சேர்ந்து உழைக்கவேண்டும் என்று தீர்மானித்தனர். தாங்கள் வசிக்கும் நாட்டில் குன்றுகள் மிகுந்து இருந்தமையால், அவற்றின்மேல் மலைக்கோட்டைகள் கட்டிக்கொண்டு அவற்றில் வசித்திருந்தார்கள். அந்தக் கோட்டைகளிற் பல மகம்மதியர் வசமாகி விட்டன.



சிவஜீயின் மலைக்கோட்டை

பின்பு, சிவஜீ தலையெடுத்தார். சிவஜீக்கு இருபது வயது இருக்கும். அப்போது அவர் தம்மையொத்த சிலவீரரைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குத் தலைவராகவிளங்கினார். அதன்பின்பு புராண்டர் மலைக்கோட்டையை ஒரு மஹாராஷ்டிர வீரனிட மிருந்து கைப்பற்றிக்கொண்டார். இன்னும் பல கோட்டைகளைக் கைப்பற்ற ஆரம்பித்தார். ஒரு முறை பீஜபூர் ராஜ்யத்தைச் சார்ந்த சில கிராமங்களைக் கொள்ளையிட்டு ஒரு மலைக் கோட்டையையும் பிடித்துக்கொண்டார். பீஜபூர் சுல்தான் அதனால் கோபங்கொண்டு, அவரை அடக்க வேண்டுமென்று அப்ஸல்-

கான் வசத்தில் ஒரு பெரிய சேனையைக்கூட்டி அனுப்பினான். சிவஜீ அவர்களோடு சண்டை செய்யத் தம் வீரரால் முடியாதென்று கண்டு, அப்ஸல்கானைத் தாம் தனியே காண விரும்புவதாகச் சொல்லி அனுப்பினார். அப்ஸல்கானும் அதற்கு உடன்பட்டான். சிவஜீ அவனைச் சந்திக்கப் போகுமுன் தன் தாயாரைக் கண்டு வணங்கி, "அம்மா! நான் விரோதியைச் சந்திக்கப் போகிறேன்; மறுபடியும் உன் முகத்தில் விழிப்பேனோ இல்லையோ; என்னை ஆசீர்வதித்து விடை கொடு" என்று வேண்டினார். தாயாரும், "உனக்கு ஜயம் உண்டாக" என்று வாழ்த்தினாள். பிறகு, சிவஜீ அப்ஸல்கானைத் தனியான இடத்தில் சந்தித்தார். அப்ஸல்கான் சிவஜீயைத் தழுவிக்கொண்டான். சிவஜீ தம் விரல்களில் தொடுத்துக் கொண்டிருந்த புலிநகம் என்னும் ஆயுதத்தால் அவனைக் குத்திக் கொன்றார். அதுகண்டு அப்ஸல்கான் படைகள் பறந்து ஓடின.

'அதன் பிறகு சிவஜீயின் கீர்த்தி எங்கெங்கும் பரவுவதாயிற்று. மற்ற மஹாராஷ்டிரத் தலைவரும் சிவஜீயோடு சேர்ந்துகொண்டார்கள். மகம்மதிய அரசர்களுக்குச் சிவஜீயை அடக்க முடியவில்லை. அதனால் மகம்மதியர் தென் இந்தியாவில் செய்த கொடுமைகள் கொஞ்சங் கொஞ்சமாகக் குறையத் தலைப்பட்டன. அதனால், மஹாராஷ்டிரர் தமக்கு நன்மைசெய்ய வந்திருப்பதாகத் தென் இந்தியாவிலுள்ள குடிகள் எண்ணத் தொடங்கினார்கள். முடிவில் பீஜபூர் சுல்தானும் சிவஜீயோடு சமாதானம் செய்துகொண்டான்.

'சிவஜீ இந்த நிலையில் இருக்க, ஒளரங்கஜேப் சிவஜீயை அடக்க எண்ணங்கொண்டு, ஷெயிஷ்ட்டகான் என்பவனை அனுப்பினான்; அவன் திரண்ட

படையோடு தக்ஷிணத்தின்மேல் வந்தான். சிவஜீ அவனை எதிர்த்துச் சண்டைசெய்ய முடியாதென்று உணர்ந்து, ஒரு பிச்சைக்காரன் போல் வேஷங்-



சிவஜீ

கொண்டு, ஷெயிஷ்ட்டகான் இருந்த வீட்டை இரவில் தாக்கி அவனை ஓடச் செய்தார். பிறகு முகலாய ராஜ்யத்தைச் சார்ந்த சூரத் என்னும் பட்டணத்தை சிவஜீ பிடித்துக்கொண்டார்.

'அதன்மேல் ஔரங்கஜேப் மற்றொரு பலத்த சேனையை சிவஜியின்மேல் அனுப்பினான். அப்போது சிவஜி அந்தப் படையை எதிர்க்க முடியாமல் முகலாய சக்ரவர்த்தியோடு சமாதானம் செய்துகொண்டு, முகலாய சேனையில் ஒரு தளகர்த்தனாக அமர்ந்திருந்தார். ஒரு முறை சிவஜி ஔரங்கஜேப்பின் அரண்மனைக்குப் போக நேர்ந்தது. ஔரங்கஜேப் சிவஜிக்குச் சரியான மரியாதை செய்யாமையால், சிவஜி கோபங்கொண்டு, டெல்லியை விட்டு வெளிப்பட்டு வர முயன்றார். ஔரங்கஜேப் அதைக்கண்டு சிவஜியைச் சிறையில் வைத்தான்.

'சிவஜி சிறையில் இருக்கும்போது, தாம் வியாதியாய் இருப்பதாகக் காட்டி, அன்னதானம் செய்தால் அது தீரும் என்று சொன்னார். ஔரங்கஜேப் அன்னதானம் செய்ய உத்தரவு அளித்தான். அன்னதானத்திற்காகப் பக்ஷணங்களைக் கூடையில் அடுக்கி, வேலைக்காரர்கள் வெளியே கொண்டுபோனார்கள். சிவஜி ஒரு வேலைக்காரனைத் தன் வசப்படுத்திக்கொண்டார். அந்த வேலைக்காரன் ஒரு பக்ஷணக் கூடையில் சிவஜியை உட்காரவைத்து, துணியால் நன்றாய் மறைத்து, வெளியே கொண்டுவந்து விட்டு விட்டான்.

'சிவஜி வெளியே வந்து, தாடி மீசை முதலியவற்றை மழுங்க மொட்டை யடித்துக்கொண்டு ஒரு பிச்சைக்காரனைப்போல் வேஷங்கொண்டு, தப்பித்துக்கொண்டு வந்து தமது நாட்டை யடைந்தார். பிறகு, சிவஜி பட்டம் சூட்டிக்கொண்டு, மஹாராஷ்டிர ராஜ்யத்திற்கு மன்னராக விளங்கினார். மற்றத் தலைவர்களும் அவருக்கு அடங்கி அவருக்கு வரி

செலுத்திக்கொண்டு வந்தார்கள். சிவஜீ தம் 52 ஆம் வயதில் மரணம் அடைந்தார். அவருக்குப் பிறகு, மஹாராஷ்டிர ராஜ்யம் ஐந்து பிரிவாகப் பிரிந்திருந்தது. அவற்றுள், பேஷ்வா, பான்ஸ்லே என்னும்



இரண்டு பிரிவுகள் அழிந்து போயின ; ஹோல்கார், சிந்தியா, கைக்வார் என்னும் மூன்று பிரிவுகள் இன்னும் விளங்குகின்றன' என்றார் பாட்டனார்.

26. இங்கிலிஷ்காரர் இந்தியாவுக்கு வந்த விதம்

தாதா! இத்தனை கதைகள் சொன்னீர்களே, இன்னும் இங்கிலிஷ்காரரைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே, அதென்ன?' என்று கேட்டான்.

'முத்து, நீ சமயத்திற்கு ஏற்றபடி கேட்கிறாய். அவர்களைப்பற்றிச் சொல்லவேண்டிய சமயம் இதுதான். நான் சொல்வதற்குள் நீயும் கேட்டாய்; நல்லதுதான், சொல்லுகிறேன், கேள் :

'கஜினி முஹம்மதுவைப் பற்றிக் கதை சொன்னேனே, அப்போது, வர்த்தகர்கள் எல்லாம் காபூல் வழியாகத்தான் இந்தியாவுக்கு வருவது வழக்கம் என்று சொன்னேன் அல்லவா. ஐரோப்பாக் கண்டத்து வியாபாரிகளும் அந்த வழியாகவே வந்துகொண்டு இருந்தார்கள். அது மிகவும் கஷ்டமான வழி. பிரயாணம் அதிக நாள் செல்லும். அதனால் கடல் மார்க்கமாக இந்தியாவுக்கு வர வழி கண்டுபிடிக்க முயன்றார்கள். ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கு வர முதல் முதல் போர்த்துக்கேசியர் வழி கண்டுபிடித்தார்கள். கண்டுபிடித்த பின் அவர்கள் இந்தியாவில் வர்த்தகம் செய்து திரளான பணம் சம்பாதித்தார்கள். அதைக்கண்டு ஹாலண்டு தேசத்தாராகிய டச்சுக்காரர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள். மூன்றாவதாகப் பிரெஞ்சுக்காரர் வந்தனர். பிறகு இங்கிலிஷ்காரருக்கும் இந்தியாவுக்கு வரவேண்டும் என்னும் எண்ணம் உதித்தது.


'இந்தியாவில் அக்பர் அரசாண்ட காலத்தில் இங்கிலந்தில் எலிஸபெத் ராணியார் ஆண்டுகொண்டு

இருந்தார்கள். அப்போது சுமார் 100 ஆங்கிலேயர் ஒன்றுகூடி இந்தியாவுக்கு வந்து வியாபாரம் செய்யத் தலைப்பட்டார்கள். அதற்கு எலிஸபெத் ராணியார் 1600 ௵ ஜனுவரிமீ 1௳ அனுமதி கொடுத்தார்கள். அந்த அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஆங்கிலேய வர்த்தகக் கூட்டத்தார் இந்தியாவுக்கு வந்தார்கள். அந்தக் கூட்டத்திற்கு "ஈஸ்டு இந்தியா கம்பெனி" என்று பெயர். இங்கிலிஷ்காரர் இந்தியாவுக்கு வர எவ்வளவோ கஷ்டங்கள் உண்டாயின. போர்த்துக்கேசியர் ஆங்கிலேயரோடு போர் புரிந்து, அவர்களைத் துரத்த முயன்றார்கள். இங்கிலிஷ்காரர் கப்பற் சண்டையில் போர்த்துக்கேசியரை வென்று இந்தியாவில் வர்த்தகம் செய்ய இடம் பெற்றார்கள்.

'இங்கிலிஷ்காரர் முதலில் சென்னைராஜதானியின் வடக்கிலுள்ள மசிலிப் பட்டணத்தில் தங்கினார்கள். மசிலிப் பட்டணம் அந்தக் காலத்தில் கோலகொண்ட ராஜ்யத்தைச் சார்ந்த சிறந்த துறைமுகம். அந்த சுல்தான் இங்கிலிஷ்காரர் அங்கே தங்க இடம் கொடுக்கவில்லை. அதனால், இங்கிலிஷ்காரர் மிகவும் முயன்று சென்னபட்டணத்தைத் துறைமுகமாகச் செய்தார்கள். அதற்காகச் சந்திரகிரியின் அரசனை ஸ்ரீரங்கராஜருக்கு வருஷந்தோறும் பன்னிரண்டாயிரம் வராகன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். ஸ்ரீரங்கராயர் விஜயநகர ராஜ்ய பரம்பரையைச் சார்ந்தவர். அவர் அதிகாரத்தின் கீழ் சென்னப்பன் என்னும் ஒரு சிற்றரசன் செங்கற்பட்டில் அரசு புரிந்துகொண்டு இருந்தான். இங்கிலிஷ்காரர் புதிதாக ஏற்படுத்திய துறைமுகப் பட்டணத்தைத் தன் பெயரால் வழங்கவேண்டும் என்று வற்புறுத்தினான். அதனால் இந்தப்

பட்டணத்திற்குச் சென்னபட்டணம் என்பது பெயர் ஆயிற்று. ஆங்கில வர்த்தக சங்கத்தார் இங்கே கோட்டை கட்டி வர்த்தகசாலை ஏற்படுத்தினார்கள். அதற்கு ஸெண்ட் ஜார்ஜ் கோட்டை என்று பெயர். நாளடைவில் கோட்டையைச் சுற்றிக் குடிகள் வந்து கூடுவாராயினர். கைத்தொழிலும் வர்த்தகமும் விருத்தி யடைந்தன. பட்டணமும் பலத்தது.

'இப்படி யிருக்கச் சுமார் 150 வருஷங்களுக்கு முன் ஐரோப்பாவில் இங்கிலிஷ்காரருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சண்டை உண்டாயிற்று. அதனால் உலகத்தில் இங்கிலிஷ்காரரும் பிரெஞ்சுக்காரரும் சேர்ந்திருந்த இடங்களில் எல்லாம் இருதிறத்தாருக்குஞ் சண்டைமூண்டு கொண்டது. அப்போது இந்தியாவில் பிரெஞ்சுக்காரர் புதுச்சேரியில் ஒரு சிறு கோட்டைகட்டிக்கொண்டு சைனியங்களை வைத்திருந்தார்கள். இங்கேயும் இருவருக்கும் சண்டைஏற்பட்டது. பிரெஞ்சுக்காரருக்கு



டூப்ளே

டூப்ளே என்பவர் தலைவராக இருந்தார். அவருக்கு இங்கிலிஷ்காரரை எப்படியும் இந்தியாவை விட்டுத் துரத்திவிடவேண்டும் என்பது எண்ணம். சண்டை ஒரு வருஷம் இரண்டு வருஷமல்ல, இருபது வருஷம் நடந்தது. இங்கிலிஷ்காரரில் லாரேன்ஸ் என்பவரும் ராபர்ட்டு க்ளைவ் என்பவரும் பிரெஞ்சுக்காரரோடு

மூணைந்து சண்டைசெய்து ஜயம் பெற்றனர். இதற்குள் ஐரோப்பாவிலும் அந்த இருதிறத்தாருக்கும் சமாதானம் ஏற்பட்டுவிட்டது. இப்போது பிரெஞ்சுக்காரருக்கு இந்தியாவிலுள்ள முக்கியமான இடம் புதுச்சேரியே. இன்னும் அங்கங்கே சிற்சில சிறிய இடங்களும் பிரெஞ்சுக்காரருக்கு உண்டு' என்றார் பாட்டனார்.

27. ராபர்ட்டு க்ளைவ்

'தாதா! க்ளைவ் என்பவரைப்பற்றி அடிக்கடி பலரும் சொல்லுகிறார்கள்; நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். தாங்களும் இப்போது சொன்னீர்கள், அவர் யார்? தாதா' என்று கேட்டான் முத்து.

'குழந்தாய்! நீ சொல்வது உண்மைதான். க்ளைவ் ஓர் அங்கிலேயர், அதிக தைர்யசாலி, சமயோசித புத்தியுள்ளவர். ஆங்கில அரசாட்சி இந்தியாவில் நிலைப்பதற்கு அடிகோலினவர் அவர்தான். அவர் இல்லாவிட்டால் இங்கிலிஷ்காரர் இந்தியாவில் நிலைத்திருக்கமாட்டார்கள். அவர் முதலில் எப்படி யிருந்தார், பிறகு எப்படி விருத்தியானார் என்பதைப்பற்றிச் கொஞ்சம் சொல்லுகிறேன், கேள்:

'ராபர்ட்டு க்ளைவ் என்பவர் சிறு வயதில் தம் பெற்றோருக்கு அடங்காதவர். அச்சம் என்பது இன்னதென்று அவருக்கு அணுவளவும் தெரியாது. சண்டை யென்றால் முன்நிற்பார். வெட்டு, குத்து என்றால் வெகு பிரியம். இவரை இன்னது செய்வது என்று அவருடைய தகப்பனாருக்குத் தோன்ற-

வில்லை. பாடசாலையில் விட்டுப் பார்த்தார்; உபாத்தியாயரில் ஒருவருக்காவது இவரிடத்தில் நல்ல எண்ணம் கிடையாது. ஒருவர் மாத்திரம் "இவன் உத்தம வீரனுவான்" என்று சொல்வது வழக்கம்.

'ராபர்ட்டு எவரும் அஞ்சத்தக்க காரியத்தை அலக்ஷியமாகச் செய்வார். எவரும் ஏறக்கூடாத மரத்தில் எளிதாக ஏறுவார். உன்னதமான கோபுரங்களில் ஏறுவதென்ருல் ஒரு நொடி. இவர் பல சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்குத் தலைவராக இருந்து நடத்துவார். இவரைக் கண்டால் எப்படிப்பட்டவருக்கும் கொஞ்சம் அச்சந்தான்; இவர் வருகிருர் என்ருல் கடைக்காரர்கள் கலங்குவார்கள். இவர் கடையண்டை வந்தவுடனே கடைக்காரன் ஏதாவது கொடுத்துவிட வேண்டும்; இல்லாவிட்டால் ஆபத்துதான்; ஜன்னல்களெல்லாம் உடைந்துவிடும்; சாக்கடை ஜலம் முழுதும் கடைக்குள் பாய்ந்துவிடும். ஒருமுறை கடைக்காரன் ஒருவன் இவருக்கு ஒன்றும் கொடுக்கவில்லை. சாக்கடைத் தண்ணீரைக் கடைக்குள் பாய்ச்ச அணை போடுவதற்கு அண்டையில் ஒன்றுமில்லை. ராபர்ட்டு என்ன செய்தார் தெரியுமா—சாக்கடைக்குக் குறுக்காகத் தாமே படுத்துக்கொண்டார். ஒரு துளி தண்ணீர் அந்தண்டை போகுமா—எல்லாம் கடைக்குள் ஏறிவிட்டது. கடைக்காரன் என்ன செய்வான், அவருக்குச் செலுத்தவேண்டிய கட்டணத்தை உடனே செலுத்திவிட்டான்.

'ராபர்ட்டு இப்படியெல்லாம் கண்டோர் நடுங்கும்படி பல காரியங்கள் செய்து வந்தார். அப்போது தமது ஊரில்மட்டும் ஏற்பட்ட பிரசித்தம் நாளடைவில் உலக முழுதும் ஏற்படத் தலைப்பட்டது.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்கிறார்களே அது வீண்போகுமா.

'இந்தப் பிள்ளையை ஊரை விட்டுத் தொலைத்து விடுவது உத்தமம் என்று ராபர்ட்டு தகப்பனுருக்குப் புலப்பட்டது. அப்போது ஈஸ்ட்டு இந்தியா கம்பெனியார் இந்தியாவில் வர்த்தகம் செய்கிறார்கள். அந்தக் கம்பெனியில் ஒரு குமஸ்தா வேலை சம்பாதித்து, ராபர்ட்டை இந்தியாவுக்கு அனுப்பிவிட்டார். அப்பொழுது இங்கிலந்திலிருந்து இந்தியாவுக்கு வருவதென்றால் ஒரு வருஷம் செல்லும். க்ளைவ் சென்னைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு இந்த ஊரும், குமஸ்தா வேலையும் சரிப்படவில்லை. க்ளைவுக்கு நண்பர் ஒருவர் இங்கே வேலையில் இருந்தார்; அவரோடு சந்தோஷமாக இருக்கலாம் என்று க்ளைவ் எண்ணினார். இவர் இங்கு வருவதற்கு முன்னமே அவர் இங்கிலந்துக்குப் போய்விட்டார். அதனால் க்ளைவுக்கு மனம் சலித்துவிட்டது. க்ளைவ் தற்கொலை செய்துகொள்ள எண்ணித் துப்பாக்கியால் இரண்டு முறை தம்மைச் சுட்டுக்கொண்டார்; இரண்டு முறையும் வேட்டுத் தவறிப் போய்விட்டது. அது கண்ட க்ளைவ், "இது ஏதோ ஒரு நன்மைக்குத்தான் இப்படித் தவறிற்று" என்று எண்ணினார். அது உண்மையில் பெரிய நன்மையாகவே முடிந்தது.

'இது இப்படியிருக்க, பிரெஞ்சுக்காரருக்கும் இங்கிலிஷ்காரருக்கும் சண்டை யுண்டாயிற்று என்று நேற்றுக் கதையில் சொன்னேன் அல்லவா. அந்தச் சண்டையில் ஒரு முறை பிரெஞ்சுக்காரர் சென்னையைப் பிடித்துக்கொண்டார்கள். டேப்ளே என்பவர் அவர்களுக்குத் தளகர்த்தர். ஸெண்ட்டு ஜார்ஜ் கோட்-

டையில் இருந்த ஆங்கிலேயர் எல்லாம் சிறையில் அகப்பட்டுக் கொண்டார்கள். க்ளைவும் அவர்களில் ஒருவராக இருந்தார். பிரெஞ்சுக்காரர் தம் ஜயப் பிரதாபத்தைக்காட்ட இங்கிலிஷ்காரரை அழைத்துக்கொண்டு போய் புதுச்சேரியில் தெருத் தெருவாக



ராபர்ட்டு க்ளைவ்

வலம் வந்தார்கள். க்ளைவ் மாத்திரம் சென்னையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிச் சென்று, கூடலூரிலிருந்த இங்கிலிஷ் படையோடு சேர்ந்துகொண்டார்; உடனே, வாளைக் கையிலேந்தி வலிய போர்வீரராகத்

திரும்பிவிட்டார். அப்போது இங்கிலிஷ்காரர் பலம் ஒடுங்கியிருந்தது. பிரெஞ்சுக்காரர் பலம் உச்ச நிலையில் இருந்தது. டூப்ளே மிகவும் பிரசித்தம் பெற்றிருந்தார்.

'அப்போது தென் இந்தியாவில் சில முஹம்மதியர் அங்கங்கே ஆண்டுகொண் டிருந்தனர். கர்நாடக ராஜ்யத்தை முகம்மத் அலி என்பவர் ஆளுகை செய்திருந்தார். ஆறுகாட்டு நவாபாகிய சண்டா ஸாஹெப் பிரெஞ்சுக்காரர் பலத்தினால் முஹம்மத் அலியை எதிர்த்துத் திரிசிராப்பள்ளிக் கோட்டையை முற்றுகை செய்தார். சண்டா ஸாஹெப் ஜயங் கொண்டால் இங்கிலிஷ்காரர் இந்தியாவை விட்டு ஓடவேண்டியதே. அதனால் இங்கிலிஷ்காரர் இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்து இருந்தார்கள். அப்போது க்ளைவ் ஒரு யுக்தி செய்தார். அதாவது, "சண்டா ஸாஹெப் தன் படைகளையெல்லாம் கூட்டிக்கொண்டு திரிசிராப்பள்ளிக்குப் போய்விட்டபடியால் ஆற்காடு அநாதரவாக இருக்கிறது. அதனால், ஆறுகாட்டுக் கோட்டையை நாம் பிடித்துக்கொண்டால் சண்டா ஸாஹெப் திரிசிராப்பள்ளியை விட்டு வந்துவிடுவான்" என்றார். அதுவே உத்தமம் என்று மற்றவர்களுக்கும் தோன்றிற்று. உடனே க்ளைவ், இருநூறு இங்கிலிஷ் வீரரும் முந்நூறு சிப்பாய்களும் கொண்ட ஒரு சேனையை நடத்திக் கொண்டுபோய் ஆறுகாட்டிலுள்ள சண்டா ஸாஹெப்பினுடைய கோட்டையை எதிர்த்துச் சண்டை செய்தார். அங்கிருந்த முகம்மதிய வீரர் இங்கிலிஷ்காரரை எதிர்க்க முடியாமல் ஓட்டம் பிடித்தனர். அந்தக் கோட்டையைக் க்ளைவ் கைப்பற்றிக் கொண்டார். இதை

யறிந்த சண்டா ஸாஹெப் பதினாயிரம் போர் வீரர் கூடிய ஒரு சேனையை ஆறுகாட்டுக்கு அனுப்பினார். அவர்கள் வந்து ஆறுகாட்டுக் கோட்டையை முற்றுகை செய்து கொண்டார்கள். அங்கு இரண்டு மாதம் சண்டை நடந்தது. இங்கிலிஷ்காரருக்கு உணவுப் பொருள்கள் எல்லாம் செலவாய்விட்டன. சிப்பாய்கள் கஞ்சித் தண்ணீரைக் குடித்துக்கொண்டு, சாதத்தை இங்கிலிஷ் வீரருக்குக் கொடுத்து வந்தார்கள். இங்கிலிஷ் படையில் பாதிக்கு மேல் மாண்டு போயிற்று. பிறகு, இங்கிலிஷ்காரர் லாரேன்ஸ் என்னும் தளகர்த்தரோடு பின்னும் சில வீரரை க்ளைவுக்குத் துணையாக அனுப்பினர். அவர்களும் சேர்ந்து சண்டை செய்யவே இங்கிலிஷ்காரருக்குப் பூர்ண ஜயம் உண்டாயிற்று. அதன் பிறகு க்ளைவும் லாரென்ஸும் சேர்ந்து திரிசிராப்பள்ளியில் சண்டா ஸாஹெப்பை எதிர்த்து வென்று, அந்த ராஜ்யத்தை முஹம்மது அலிக்குப் பட்டம் கட்டினார்கள். சண்டா ஸாஹெப் தப்பியோடித் தஞ்சாவூரில் கொலையுண்டு மரண மடைந்தார்.

சிறிது காலத்திற்குப் பிறகு, க்ளைவ் சவுக்கியத்திற்காக லண்டன் நகரத்திற்குத் திரும்பி விட்டார். இரண்டு வருஷம் கழித்து அவர் இந்தியாவுக்கு வந்தார். அப்போது வங்காளத்தில் பெரிய குழப்பம் உண்டாயிற்று. ஸிராஜ் உத்தௌலா என்பவன் வங்காளத்தில் இருந்த இங்கிலிஷ் வர்த்தகக் கோட்டையைப் பிடித்துக்கொண்டு, அங்கிருந்த 146 இங்கிலிஷ்காரரை ஒரு சிறிய இருட்டறையில் அடைத்து வைத்தான்: கொஞ்சமும் காற்று இல்லாமையால் மறுநாள் விடிவதற்குள் 123 பேர் உயிர் துறந்தார்.

கள். இதைக் கேட்டதும் க்ளைவ் கடுங்கோபங்கொண்டு படையெடுத்துப்போய்ச் சண்டை செய்து கோட்டையை மீட்டுக் கொண்டார். அது கண்டு ஸிராஜ் உத்தெளலா இங்கிலிஷ்காரருக்கு உரிய வர்த்தக ஸ்தலங்களை யெல்லாம் அவர்களுக்கு ஒப்பித்து விட்டான். பிறகு க்ளைவ், பிரெஞ்சுக்காரருக்கு உரிய சந்திரநாகூர் என்னும் பட்டணத்தைப் பிடித்துக்கொண்டார். அப்பொழுது ஸிராஜ் உத்தெளலா பிரெஞ்சுக்காரர் பக்கம் சேர்ந்துகொள்ளவே, க்ளைவ் அவன்மேல் படையெடுத்துப்போய் பிளாஸி என்னும் இடத்தில் அவனை எதிர்த்தார். நபாபுவும் அவன் படைவீரரும் உயிர் தப்பினால் போதும் என்று ஓடிவிட்டார்கள். இந்தச் சண்டையே இங்கிலிஷ்காரர் இந்தியாவில் நிலையாக அரசாட்சி செய்ய ஆதாரம் ஆயிற்று. அதன்பிறகு, தென் இந்தியாவில் பிரெஞ்சுக்காரர் சண்டை ஆரம்பித்தார்கள். க்ளைவ் அவர்களை எதிர்க்க ஒரு பெரும் படையை அனுப்பினார். அந்தப் படைவீரர் வந்து பிரெஞ்சுக்காரரை வென்று வட சர்க்கார் என்னும் பாகத்தைப் பற்றிக்கொண்டார்கள். அதன் பிறகுதான் இங்கிலிஷ்காரருக்கு ஏற்றம் உண்டாயிற்று. இங்கிலிஷ்காரர் இந்த நிலையில் இருக்கும்போது க்ளைவ் இரண்டாம் முறை தன் தேசத்திற்குப் போனார். அங்கு எல்லோரும் அவரை எதிர்கொண்டு புகழ்ந்தார்கள்; அதிக கௌரவமாக வரவேற்றார்கள். இங்கிலந்து அரசர் க்ளைவுக்கு லார்ட் என்னும் பட்டம் கொடுத்தார்.

'க்ளைவ் போனபிறகு கம்பெனிக் காரியங்களைச் சரிவரக் கவனிப்பார் இந்தியாவில் ஒருவரும் இல்லை. அதனால், க்ளைவ் மறுபடியும் இந்தியாவுக்கு வருவது

அவசியமாயிற்று. கம்பெனியார் க்ளைவை வங்காளத்துக்குக் கவர்னராக நியமித்து அனுப்பினார்கள். அப்போது ஔரங்கஜேபின் சந்ததியானாகிய மியர் காஸிம் வங்காளத்தை ஆண்டுகொண்டு இருந்தான். க்ளைவ் அவனுக்கு வருஷவாரி இவ்வளவு தொகை செலுத்துவது என்று ஓர் உடன்படிக்கை செய்துகொண்டு, வங்காளத்தை இங்கிலிஷ் அரசாட்சிக்கு உள்ளாக்கினார். இதுவே பிறகு வங்காள ராஜதானி ஆயிற்று. பின்பு க்ளைவ், கம்பெனி உத்தியோகஸ்தர் விஷயமாக அநேக சீர்திருத்தங்கள் செய்தார். இப்படியெல்லாம் இங்கிலிஷ் ஆட்சியை இந்தியாவில் நிலைக்கச் செய்துவிட்டு, அவர் இங்கிலந்துக்குப் போய்விட்டார்' என்றார் பாட்டனார்.

28. டிப்பு சுல்தான்

'தாதா! க்ளைவுக்குப் பிறகு இங்கிலிஷ்காரரே ஆளத் தொடங்கினார்களோ?' என்று கேட்டான் முத்து.

'ஆளுகை என்றால் அவ்வளவு சுலபத்தில் ஆகிற காரியமா?—இங்கிலிஷ்காரர் இந்தியாவில் ராஜ்யங்களை ஜயிக்க மிகவும் சிரமப்பட்டார்கள். சமயத்திற்கு எற்றபடி அநேக தந்திரங்களும் செய்ய நேர்ந்தது. இங்கிருந்த அரசர்கள் ஒருவர்க் கொருவர் அடிக்கடி சண்டை செய்துகொண் டிருந்ததால் குடிகளுக்குப் பலவகையிலும் சங்கடங்கள் நேர்ந்தன. அதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்லுகிறேன், கேள்:

"ஆருக்கென்று ஆடுவேன் ஐதர் சாயபு" என்று உன் பாட்டியார் அடிக்கடி சொல்வதை நீ கேட்-

டிருப்பா யல்லவா? அந்த ஹைதரையும் அவன் குமாரனான டிப்புவையும் பற்றிய சரித்திரங்கள் பல உண்டு; கேட்டால் வெகு விந்தையாக இருக்கும்.



ஹைதர்

'ஹைதர் மைசூர் நாட்டை யடுத்த மலைநாட்டில் வசித்திருந்த மகம்மதியன். இவனுக்கு எழுத்துக் கூட்டிப் படிக்கவும் தெரியாது. ஹைதர் பல துஷ்டர்களைக் கூட்டிக்கொண்டு, கிராமங்களில் புகுந்து கொள்ளை யாடுவது வழக்கம். ஆடுமாடுகளை மந்தை மந்தையாக ஓட்டிக்கொண்டு போய்விடுவான். ஹைதர்

என்றால் அழுகிற பிள்ளையும் வாயை மூடிக்கொள்ளும். நாளடைவில் அநேக துஷ்டர்கள் ஹைதரோடு கூடினார்கள். அதனால் ஹைதருக்குச் சேனாபலம் அதிகமாயிற்று. அதைக் கண்ட மைசூர் அரசர் தம் படையில் ஹைதருக்கு ஓர் உயர்ந்த உத்தியோகம் கொடுத்தார்.

'இப்படியிருக்க, மைசூர் அரசர் இறந்துவிட்டார். அவர் புத்திரர் சிறுவராக இருந்தமையால், இளவரசருடைய சிறிய தந்தை ஆளுகை செய்ய நேர்ந்தது. அப்போது ராஜாங்கத்தில் கொஞ்சம் சச்சரவு நேரிட, ஹைதர் இதுவே சமயம் என்று எண்ணி, இளவரசருக்குப் பதிலாகத் தான் ஆளுவதாகச் சொல்லி, ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டு, இளவரசருடைய சிற்றப்பனைச் சிறையில் வைத்துவிட்டான். பிறகு, இளவரசரையும் சிறையில் வைத்துவிட்டு, தானே அரசன் எனச் சிங்காதனம் ஏறினான். அதன் பிறகு, ஹைதர் தென் இந்தியா முழுவதும் தன் ஆளுகைக்கு உள்ளாக்க வேண்டும் என்று கருதி, தென் இந்தியாவில் இருந்த மற்ற அரசர்களோடு சண்டை தொடுக்க ஆரம்பித்தான்.

'ஒரு முறை சென்னைக்கு அருகில் வந்து, இங்கிலிஷ்காரரையும் எதிர்க்க எண்ணங் கொண்டான். ஹைதர் இவ்வளவு தூரம் தைரியங்கொண்டு வருவான் என்று இங்கிலிஷ்காரர் எதிர்பார்க்கவில்லை. அதனால், இங்கிலிஷ்காரர் ஹைதரை உடனே எதிர்க்க முடியாமல், கல்கத்தாவுக்குத் தெரிவித்தார்கள். அப்போது, வாரேன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் கவர்னர் ஜனரலாக இருந்தார். இவரும் க்ளைவைப் போலவே

முதலில் குமஸ்தா வேலையிலிருந்து, பிறகு உயர்ந்த பதவியை அடைந்தவர். வாரென் ஹேஸ்டிங்ஸ் பிரபுவே முதல் கவர்னர் ஜனரல் உத்தியோகம் பெற்றனர். அவர் தென் இந்தியாவில் ஹைதர் கலகம்



வாரென் ஹேஸ்டிங்ஸ்

செய்வதைக் கேட்டவுடனே ஒரு பெரும்படையை ஸர் அயர் கூட் என்னும் தளகர்த்தரோடு அனுப்பினார். அந்தத் தளகர்த்தர் வந்து போர் புரிந்து ஹைதரைத் துரத்திவிட்டார்.

'ஹைதருக்குப் பின்பு அவன் குமாரன் டிப்பு சுல்தான் பட்டத்திற்கு வந்தான். அவன் சுமார் 25 வருஷம் ஆண்டான். அவன் ஆளுகை மிகவும் கொடூரமானது. டிப்பு இந்துக்களை மகம்மதிய ராகும்படி நிர்ப்பந்தப் படுத்தினான். மகம்மதியர் ஆகாதவரைக் கொலையும் செய்ய ஆரம்பித்தான்.


'இதுவும் அன்றி, டிப்பு இங்கிலிஷ்காரருக்கு விரோதமாகவும் நடக்கத் தலைப்பட்டான். அவர்களை நேராக எதிர்க்காமல், மற்ற அரசர்களை முதலில் எதிர்ப்பதென்று தீர்மானித்துக் கொண்டு, முதலில் குடகு நாட்டின் மேல் படையெடுத்து அதைப் பிடித்துக் கொண்டான். அதன் பிறகு கன்னட தேசத்தையும் மலையாளத்தையும் கைப்பற்றிக்கொண்டான். டிப்பு இந்துக்களைக் கொலை செய்வதும், சிறைபிடிப்பதுமே தன் தொழிலாகக் கொண்டிருந்தான். ஒருமுறை கள்ளிக்கோட்டையி லிருந்த வியாபாரிகளை எதிர்த்து, பெருந் தொகையான பொருள் தனக்குக் கொடுக்கும்படி கேட்டான். அவர்கள் கொடுக்காமையால் அவர்களை யெல்லாம் பிடித்து மனித சஞ்சார மில்லாத ஒரு தீவுக்கு அனுப்பிவிட்-


டிப்பு

டான். அவர்கள் அங்கே ஆகாரமில்லாமல் மாண்டார்கள். இவனுடைய கொடூரச் செய்கையைச் சொல்லி முடியாது.

'வரவர, டிப்புவுக்குச் சேனைபலம் அதிகரித்தது. அதனால், தன்னை எதிர்க்க ஒருவராலும் முடியாது என்று கர்வங்கொண்டான். பின்பு திருவாங்கூரை எதிர்க்கத் தலைப்பட்டான். திருவாங்கூர் அரசர் இவனுடைய கொடூரச் செய்கைகளைக் கேள்விப்பட்டுப் பயந்து, தமக்கு உதவிசெய்யும்படி இங்கிலீஷ்காரரை வேண்டிக்கொண்டார். அப்போது கார்ன் வாலிஸ் பிரபு கவர்னர் ஜனரலாக இருந்தார். அவர் திருவாங்கூர் அரசர் வேண்டுகோளுக்கு உடன்பட்டு, "திருவாங்கூரை எதிர்க்கவேண்டாம்" என்று டிப்புவுக்குக் கடிதம் எழுதினார். டிப்பு அந்தக் கடிதத்தை அசட்டை செய்தான்; அதுவும் அன்றி டிப்பு இங்கிலீஷ்காரரை இந்தியாவை விட்டுத் துரத்திவிட வேண்டும் என்று எண்ணங் கொண்டு கடித மூலமாகப் பிரெஞ்சுக்காரரோடு சதியாலோசனை செய்துகொண்டிருந்தான். அதுவும் இங்கிலீஷ்காரருக்குத் தெரிந்தது. அதனால், இங்கிலீஷ்காரர் டிப்புவை எதிர்த்தார்கள். அப்போது, மஹாராட்டியரும் ஹைதராபாத் நபாபும் இங்கிலீஷ்காரரோடு சேர்ந்துகொண்டார்கள். மூவரும் சேர்ந்து டிப்புவை எதிர்த்து, பெங்களூரைப் பிடித்துக்கொண்டனர். பின்பு அவன் ராஜதானியாகிய ஸ்ரீரங்கபட்டணத்திலுள்ள கோட்டையை முற்றுகை போட்டுக்கொண்டார்கள். இனித் தப்பித்துக்கொள்ள வழியில்லை என்று, டிப்பு சமாதானத்திற்கு வந்தான். அந்த உடன்படிக்கையின்-

படி, சண்டையில் நேர்ந்த செலவை டிப்பு கொடுப்பதும் தவிர, டிப்புவின் ராஜ்யத்தில் பாதி கொடுத்துவிட வேண்டுமென்றும் ஏற்பட்டது. டிப்பு கொடுத்த பாதி ராஜ்யத்தை இங்கிலிஷ்காரரும் மஹாராட்டியரும் நபாபுவும் பங்கிட்டுக்கொண்டார்கள். அந்தப் பங்கில் இங்கிலிஷ்காரருக்கு மதுரை, மலையாளம், சேலம் ஆகிய மூன்று ஜில்லாக்கள் கிடைத்தன.



'டிப்பு அதன் பிறகு சில வருஷங்கள் சமாதானமாக இருந்தான். பின்பு இங்கிலிஷ்காரரை இந்தியாவிலிருந்து துரத்திவிடவேண்டும் என்று சதியாலோசனைகள் செய்ய ஆரம்பித்தான். அந்தக் காலத்தில் கவர்னர் ஜனரலாக இருந்த வெல்லஸ்லி பிரபு சென்னைக்கு வந்து, இங்கிலிஷ் சேனையை மைசூரின் மேல் படை யெடுக்கச் செய்தார். இங்கிலிஷ்காரர் ஸ்ரீரங்கபட்டணத்தை யடைந்து, டிப்புவின் கோட்டையை இரண்டாம் முறை முற்றுகை செய்தார்கள். டிப்பு கோட்டைக்குள் அகப்பட்டுக்கொண்டு தவித்தான்; பிறகு சண்டை செய்து மரண மடைந்தான்.

'ஹைதர் காலத்திற்குமுன் மைசூர் இந்து ராஜ்யமாக இருந்த விஷயம் இங்கிலிஷ்காரருக்குத் தெரியும். அதனால், அந்த ராஜ்யத்திற்கு உரியவர் யார் என்று பார்த்தபோது, ஓர் இளவரசர் சிறையில் இருப்பதை உணர்ந்தார்கள். இங்கிலிஷ்காரர், அந்த இளவரசரை மைசூர் ராஜ்யத்திற்கு மன்னராக ஏற்படுத்தி மகுடம் சூட்டினார்கள். அவர்தாம் கிருஷ்ணராஜ உடையார். அவருடைய பேரப்பிள்ளைக்கும் கிருஷ்ணராஜ உடையார் என்றே பெயர். அவரே இப்போது மைசூர் ராஜ்யத்திற்கு மன்னராக விளங்குகிறார்' என்றார் பாட்டனார்.

29. இங்கிலிஷ் அரசாட்சி இந்தியாவில் பரவின விதம்

'தாதா! இங்கிலிஷ்காரர் முதலில் கொஞ்ச பாகத்தை ஆண்டுகொண்டிருந்தார்களே, பிறகு எப்படி இந்தியா முழுவதையும் அரசாளத் தொடங்கினார்கள்?' என்று கேட்டான் முத்து.

'முத்து! அதைத்தான் நானும் சொல்லப்போகிறேன். இங்கிலிஷ்காரர் முதலில் வர்த்தகம் செய்ய இங்கே வந்தார்கள். பிறகு நாடுகளையும் சம்பாதிக்க வேண்டும் என்னும் நோக்கம் உண்டாயிற்று. முடிவில் இந்தியா முழுமையும் அவர்கள் ஆளுகைக்குள் வர நேர்ந்தது. அதைச் சொல்லுகிறேன், கேள் :

'கார்ன்வாலிஸ் பிரபுவின் காலத்தில் இங்கிலிஷ்காரருக்கு இருந்த பாகங்களை நேற்றுப் படத்தில் காட்டினேன் அல்லவா. அவருக்குப் பின் வெல்-


லஸ்லிப் பிரபு கவர்னர் ஜனரலாக வந்ததும் உனக்குத் தெரியுமே. அவர் இந்தியா இருக்கும் நிலையைப்



கார்ன்வாலிஸ் பிரபு
வெல்லெஸ்லி பிரபு
ஹேஸ்டிங்ஸ் பிரபு
வில்லியம் பென்டிங் பிரபு
டல்ஹௌசி பிரபு

பார்த்து ஓர் ஏற்பாடு செய்தார். அதாவது, இந்தியாவில் உள்ள அரசர்கள் இங்கிலிஷ்காரரைத் தமக்-


குத் தலைவர்களாக ஏற்றுக்கொண்டால், ஒவ்வொரு- வருக்கும் ஒரு பெரிய சேனையை யனுப்பி, அவர்களை ஆதரிப்பதாகச் சொன்னார். அதற்குப் பதிலாக அந்- தந்த அரசர், இங்கிலிஷ்காரர் தமக்கு அனுப்பிய சேனைக்கு ஏற்படும் செலவை ஒப்புக்கொள்ள வேண்- டும். இங்கிலிஷ்காரர் அநுமதியின்றிச் சுதேச அரசர்- களோடாவது, அந்நிய தேசத்து அரசர்களோடாவது



யாதொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளக் கூடாது. அன்றி, நீதியோடு ஆளுகை செய்யவேண்டும் என்று தெரிவித்தார். இந்த ஏற்பாட்டுக்கு ஹைதராபாத் நபாப் மாத்திரம் ஒப்புக்கொண்டார். பிறகு வெல்- லஸ்லிப் பிரபு ஒரு பெரிய சேனையை ஹைதராபாத்- துக்கு அனுப்பித் தக்க ஏற்பாடுகள் செய்தார். அது முதற்கொண்டு அந்த நபாபுவின் சந்ததியார் ஹைத ராபாத்தை க்ஷேமமாக ஆண்டு வருகிறார்கள்.

மஹாராஷ்டிரரும் வெல்லஸ்லிப் பிரபுவின் ஏற்- பாட்டுக்கு முதலில் இணங்கி யிருந்து, பிறகு இஷ்ட- மில்லை என்று நீங்கிவிட்டார்கள். அதனால் இங்கி- லிஷ்காரருக்கும் மஹாராஷ்டிரருக்கும் பலத்த சண்-

டைகள் நடந்தன. அப்போது வெல்லஸ்லிப் பிரபு மஹாராஷ்டிர ராஜ்யங்களில் சிலவற்றை ஜயித்தார். அவருக்குப் பின் கவர்னர் ஜனரலாக வந்த ஹேஸ்டிங்ஸ் பிரபு மஹாராஷ்டிர ராஜ்யங்களில் மற்றும் சிலவற்றை ஜயித்து, பம்பாய் ராஜதானியாகவும், மத்திய மாகாணங்களாகவும் ஏற்படுத்தினர். டில்லி, ஆக்ரா முதலிய நாடுகளைச் சுற்றி வடமேற்கு மாகாணங்களை ஸ்தாபித்தார்.




'இவருக்குப் பின் வில்லியம் பேண்டிக் பிரபு கவர்னர் ஜனரலாக வந்தார். அவர் காலத்தில் உள்ளூர்க் கலகங்கள் அவ்வளவாக இருந்ததில்லை. அதனால், அவர் ஜனங்களுக்கு நன்மையான காரியங்களை நாடுவதில் ஊக்கங்கொண்டார். அவர் காலத்திற்கு முன்பு ஜனங்கள் பிரயாணம் செய்வதென்றால் பெருங் கஷ்டம். கூட்டமாகச் சேர்ந்தாலல்லது ஒருவர் இருவராகப் பிரயாணம் செய்ய முடியாது. அக்காலத்தில் தக்கர் என்னும் ஒரு கூட்டத்தார் இருந்தார்கள். அவர்கள் நாற்பது ஐம்பது பேர் சேர்ந்து ஒழுங்காக உடுத்திக்கொண்டு வழியில் கொள்ளை யடிப்பது வழக்-

கம்; கொலையும் செய்வார்கள். இவர்கள் இப்படியிருக்க, தீவர்த்திக் கொள்ளைக்காரர் கூட்டமாக வந்து வீட்டில்புகுந்து தாராளமாகத் திருடிக்கொண்டு போவார்கள். வில்லியம் பெண்டிக் பிரபு ராணுவ வீரர்களை அனுப்பி அந்தப் பாதகர்களை யெல்லாம் பிடித்துச் சிறையிலிட்டார். ஏழு எட்டு வருஷ காலத்திற்குள் அந்தத் துஷ்டர்கள் எல்லாம் பூண்டற்றுப் போனார்கள். குடிகள் சுகமாக வாழ்ந்திருந்தார்கள்.

'இது இப்படி யிருக்க, அந்தக் காலத்தில் பஞ்சாப் நாட்டை சீக்கியர்கள் ஆண்டுகொண் டிருந்தார்கள். அந்த அரசர்களில் ரஞ்சிட்சிங் என்பவர் சிறந்தவர். அவர் அங்கிலேயரோடு நட்புக்கொண்டு, அவர்களுக்கு உதவி செய்துவந்தார். அவர் இறந்த பிறகு சீக்கியர்கள் இங்கிலிஷ்காரரோடு சண்டை தொடுத்தார்கள். அப்போது கவர்னர் ஜனரலாக இருந்த ஹார்டிங் பிரபு அவர்களை எதிர்த்து வென்றார். அவருடைய பௌத்திரர்தான் முன்பு நமக்குக் கவர்னர் ஜெனரலாக இருந்தார். கொஞ்ச காலம் பொறுத்துச் சீக்கியர்கள் மறுபடியும் இங்கிலிஷ்காரரோடு சண்டை தொடுத்தார்கள். அப்போது கவர்னர் ஜெனரலாக இருந்த டலௌஸிப் பிரபு சீக்கியரை வென்று, அந்த நாட்டை இங்கிலிஷ் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். சீக்கியர் சிறந்த வீரர். இங்கிலிஷ் பட்டாளத்தில் சீக்கியரே இப்போது சிறந்து விளங்குகிறார்கள். பின்பு மஹாராஷ்டிர அரசர் சந்ததி யின்றி இறந்துவிட்டபடியால், அந்த நாட்டை ஆங்கில ராஜ்யத்தில் சேர்த்து, அதற்கு மத்திய மாகாணம் என்று பெயரிட்டார். பிறகு, அயோத்தியை ஆண்ட நபாபு கொடுங்கோல் செலுத்தியபடியால்,

டல்ஹௌஸிப் பிரபு அதையும் ஆங்கில அரசாட்சியில் சேர்த்துக்கொண்டு, அந்த நபாபுவுக்கு உபகாரச் சம்பளம் ஏற்பாடுசெய்தார். பிறகு, பர்மா தேசத்தை ஆண்ட அரசன் இங்கிலிஷ்காரரோடு யுத்தம் தொடுத்-



தான்; இங்கிலிஷ்காரர் அவனை வென்று அவன் ராஜ்யத்தையும் இங்கிலிஷ் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார்கள். அப்போதுதான் ரங்கோனும் இங்கிலிஷ் ராஜ்யத்தோடு சேர்ந்தது' என்றார் பாட்டனார்.

30. ஐரோப்பிய யுத்தம்

'தாதா! இப்போது எங்கும் யுத்தம் யுத்தம் என்று பலரும் பேசிக்கொள்ளுகிறார்களே, அதென்ன?' என்று கேட்டான் பேரன்.

'குழந்தாய்! சுமார் 4½ வருஷங்களாக ஐரோப்பாக் கண்டத்தில் நடந்த பெரிய யுத்தத்தைப்பற்றிச் சொல்லுகிறேன், கேள்' என்றார் பாட்டனார்.

'ஆஸ்டிரியாவுக்கும், ஸேர்வியாவுக்கும் மனவருத்தம் உண்டாயிற்று. இதனால் இருவரும் வாக்குவாதம் செய்துகொண்டிருந்தார்கள். ஆஸ்டிரியாவுக்கு மனக்கொதிப்புண்டாய் ஸெர்வியாவை அடக்கவேண்டுமென்று அக் கவர்ன்மெண்டைச் சமாதானமாயிருக்க விருப்பமாவெனக் கேட்டது. யோசனை செய்யக்கூட சாவகாசமில்லை. அப்படியிருந்தும் ஸெர்வியா நியாய விரோத மின்றிப் பதில் அனுப்பிற்று.

'ஆஸ்டிரியா யுத்தம்செய்ய ஆரம்பித்தது. ருஷியாவுக்கு மிகுந்த விசனமுண்டாயிற்று. ஏனெனில் ருஷியரும், ஸெர்வியரும் ஒரே ஜாதியார். இருவருக்-

கும் சிநேகமுண்டு. ஆகையால் ருஷியா ஸெர்வியா-வுக்கு உதவி செய்ய வந்தது. ஜெர்மனி ஆஸ்டிரியா-வுடன் சேர்ந்தது. பிரஞ்சு ருஷியாவுடன் சேர்ந்தது. ஜெர்மானியர்களுக்கு அந்நிய தேசங்களைப் பிடிக்க-வேண்டுமென்ற துராசை அதிகம். அவர்கள் நியாயம் சத்தியம் இவைகளைச் சிறிதும் கைக்கொண்டு நடப்-பவரல்லர். ஆகையால், ஜெர்மானியர் பெல்ஜியம் என்ற சிறிய நாட்டின் வழியாகப் போய் பிரஞ்சுக்-காரர்களை எதிர்க்கப் புறப்பட்டார்கள்.

'நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியும் பிரிடிஷ் மந்திரி-மார்களும் ஜர்மானியர்கள் பெல்ஜியம் வழியாகப் போகக்கூடாது, அது நியாயத்திற்கு விரோதமென்று சொன்னார்கள். ஜெர்மானியர்கள் "நாங்கள் பெல்ஜியம் மார்க்கமாகத்தான் போவோம், பெல்ஜியம் வழிவிடா விட்டால் அதைக் கைவசப் படுத்திக்கொள்வோம்" என்று கர்வத்துடன் சொல்லிக்கொண்டு பெல்ஜியம் வழியாகப் போகவும் யுத்தம் செய்யவும் ஆரம்பித்தார்கள்.

'இங்கிலாந்துக்குக் கோபமுண்டாய்விட்டது, ஜர்-மானியர்கள் நியாயத்திற்கு விரோதமாய் நடந்துவரு-வதைக் கண்டு நியாயத்திற்காக யுத்தம் செய்யத் தீர்-மானித்தது. நமது பிரிடிஷாருக்கு ஜப்பானியர்கள் சிநேகிதர்கள். இவர்கள் பிரிடிஷ் பக்கம் சேர்ந்தார் கள். சிறிதுகாலஞ் சென்றபின் துருக்கி ஜெர்மனி-யுடன் சேர்ந்தது. அமெரிக்கா பிரிடிஷாருடன் சேர்ந்தது. யுத்தமோ வெகு கடுமையாக நடந்து வந்தது. ஜெர்மானியர் ஸ்திரீகள், குழந்தைகள், கிழ-வர்கள் முதலியவர்களைக் கொன்றார்கள். அநேக

கப்பல்களை முழுத்திவிட்டார்கள். தர்மமாக யுத்தம் புரியவேயில்லை. அதர்மமே அவர்களிடத்தில் குடி-கொண்டிருந்தது.

'இங்கிலாந்துக்கு அமெரிக்காவிலுள்ளவர்கள் ஏராளமான திரவியசகாயம் செய்துவந்தார்கள். இந்-தியா தேசத்தார் பண உதவிசெய்ததுடன் போர்க்-களத்திற்குச் சென்று ஜெர்மானியர்களை எதிர்த்து வீராவேசத்துடன் யுத்தம்புரிந்தார்கள். ஹைதராபா-த்திலுள்ள நைஜாம், பிகனீர் மகாராஜா, மைசூர் மகா-ராஜா முதலியவர்கள் தங்கள் சேனைகளை அனுப்பினார்-கள். மேலும் மேலும் திரவிய உதவியும் புரிந்தார்கள்.

'பிரிடிஷாருடைய கப்பற்படை பலமுள்ளது. இது உலகத்தாருக்குத் தெரிந்த விஷயம். ஆகையால் ஜெர்மானியர்கள் கப்பற் சண்டை செய்ய முன்வரவே யில்லை.

'ஜெர்மானியர்கள் ஜயிப்போம் என்ற எண்ணத்-துடன் போராடினபோதிலும் ஓர் இடத்திலாவது ஜயமடையவில்லை. பல கஷ்டங்களை யனுபவித்தார்கள். கடைசியாகத் தோல்விவரும்போல் தோன்றிற்று. உடனே பிரிடிஷ் இராணுவவதிகாரிக்கு, "ஐயா, யுத்-தத்தை நிறுத்திவிட நாங்கள் விரும்புகிறோம். சரண் அடைகிறோம்" என்று தெரிவித்தார்கள். தயாள-குணமுள்ள இராணுவ அதிகாரத்தலைவர் உடனே யுத்தத்தை நிறுத்தும்படி எல்லாருக்கும் கட்டளை யிட்-டார்; யுத்தம் நின்றுவிட்டது. தோல்விவரும் சம-யத்தில் ஜெர்மன் சக்கரவர்த்தி ஹாலண்டு தேசத்திற்கு ஓடிப்போய்விட்டார்.

'சமாதானமும் ஏற்பட்டுவிட்டது. ஜெர்மானியர் ஆணவமும் அடங்கிவிட்டது. இந்தியாவுக்கும் நல்ல காலம் உதித்திருக்கிறது. பிரிடிஷ் கவர்ன்மெண்டார் நமக்கு அநேக நன்மைகளைச் செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்கள். பிரிடிஷ் ஆளுகை ஓங்கி வளரவேண்டுமெனக் கடவுளைத் துதிசெய்வோம்' என்றார் பாட்டனார்.

31. ஆங்கில அரசாட்சியின் சிறப்பு

யதுகுலகாம்போஜி — ஆதி

(1)

இந்த பிரிட்டிஷ் ஆளுகையில் இந்தியாவில் நேசரே
வந்தபல நன்மைகளை வகுத்துரையும் நேசரே
முந்தைநாளின் துன்பங்களை முற்றுங்கூறும் நேசரே
இந்தநாளின் இன்பங்களை எடுத்துரைப்பேன் நேசரே

(2)

கொள்ளையிடும் கள்வர்களின் கொடுமைகளை நேசரே
கூறினாலும் கேட்பவர்க்குக் குலைநடுங்கும் நேசரே
கொள்ளையிடும் கள்வர்களின் கொடுமைகளை நேசரே
குறைக்கப்போலீஸ் காவலரின் கூட்டமுண்டு நேசரே

(3)

உள்ளூரிற் கலகங்களே உற்றதனால் நேசரே
உற்றதுன்பம் சிறிதென்று உரைக்கலாமோ நேசரே
கலகங்களை அடக்கிடக் காவலுண்டு நேசரே
கண்டித்தே யடக்க அதி காரியுண்டு நேசரே

(4)

மாறிமாறி வேற்றரசர் வந்துவந்து நேசரே
மாந்தரை அழித்தவகை மறந்திடுமோ நேசரே
வேற்றரசர் வந்துசெய்யும் வேதனையை நேசரே
விலக்கிடப் படைகளுண்டு விசனமேனோ நேசரே

(5)

நம்மதமும் நம்பொருளும் நம்மதென நேசரே
நம்பி இருக்கவழி நமக்குண்டோ நேசரே
நம்மதமும் நம்பொருளும் நம்மதென நேசரே
நாமடையச் சட்டமுண்டு நாசமில்லை நேசரே

(6)

சீர்த்திருத்த மின்மையினால் சிற்றரசர் நேசரே
செய்தசண்டை யாலேயுயிர்ச் சேதமன்றோ நேசரே
சிறந்தபிரிடிஷ் ஆளுகையில் சேர்ந்தபின்பு நேசரே
சிற்றரச ராலேஉயிர்ச் சேதமுண்டோ நேசரே

(7)

அந்தநாளில் நமக்கில்லா ஆதரவு நேசரே
இந்தநாளில் என்னவுண்டு எடுத்துரையும் நேசரே
தந்தியுண்டு தபாலுண்டு சங்கதிகள் நேசரே
தக்ஷணம் போய்ச் சேரரெயில் சார்புமுண்டு நேசரே

(8)

இன்னுமிந்த ஆளுகையில் இன்பமாக நேசரே
என்னநலம் ஏற்பட்டதோ எடுத்துரையும் நேசரே
பட்டிக்காட் டினுமேகல்வி பரவியது நேசரே
பாதைகளும் பாலங்களும் பார்க்கிறீரே நேசரே

(9)

வைத்திய சாலைகளும் வைத்தனரே நேசரே
வாய்க்காலும் ஏரிகளும் வழங்கினரே நேசரே
வங்கமுடன் கப்பல்களும் வந்தனவே நேசரே
வர்த்தக விருத்தியுமே வாய்த்ததன்றோ நேசரே

(10)

பறவையைப் போல்மனிதர் பறக்கின்றாரே நேசரே
பாராத காட்சியெல்லாம் பார்க்கிறோமே நேசரே
நாமடையும் நன்மைகளை நவின்றிடவே நேசரே
நாளும்போ தாதுநீரே நாடிப்பாரும் நேசரே

32. பட்டாபிஷேக வைபவம்

தன்யாசி — ஆதி

பல்லவி.

பட்டாபி ஷேகங் கொண்ட விபவங்களைப்
பாடுவோம் மகிழ்வாக.

அநுபல்லவி.

கட்டழகியாம் மேரி யன்னை மணாளர்
காசினி புகழ் ஐந்தாம் ஜார்ஜ குணாளர்
(பட்டாபி)

சரணங்கள்.

1. ஆதி காலமுதல் புகழ் பெறும் இந்தியா
ஆகும் நாட்டில் யாரும் — தினம்
ஓது சூர்யசந் திரர் அக் கினிவழி
உதித்தவ ரனை வோரும்
ஆதரத்துடன் வந்த அரசரும் முன்னாள்
தீதிலாது கொண்ட டெல்லியில் இந்நாள்
(பட்டாபி)

2. மகுட வர்த்தனரொடு பட்டவர்த் தனரும்
மண்டலிகரும் சேர — பல
வகைபெறு ராஜப் பிரதிநிதி களுடன்
மாந்தரும் களிகூர
தொகைபெறு புலவர்கள் மங்களம் கூட்ட
தூய மகாகுரு மணிமுடி சூட்ட
(பட்டாபி)

3. கொடிகளும் ஆட வெடிகளும் போடக்
கோலங்கள் கொண்டாட — பல
வடிவமுள்ள பாண்டுகளுடன் இந்திய
வாத்திய ஒலி நீட
குடிகளெல்லாம்மன மகிழ்வுடன் வாழ்த்த
குலவு சேனைவீரர்கள்முடி தாழ்த்த
(பட்டாபி)

4. ஜகத்தினி னுள்ளோர் அனைவரும் கூடி
ஜய ஜய ஜய வென்ன — இனி
இகத்தினில் இதைவிட ஏற்றமும் பதவியும்
ஏதேனவே பன்ன
சுகத்துடன் இந்திய மாதுடல் குளிர
சூரிய னெனச்செங் கோலெங்கும் ஒளிர
(பட்டாபி)

5. ஆனைப்பாக ரொடு குதிரை வீரர்களும்
அணியணியாய் நடத்த — செந்
தேனினும் இனித்திடும் ராக தாளங்களைச்
செவ்வையாகத் தொடுத்த
பாடலைச் சிறுவர்கள் பணிவுடன் பாட
பக்தி யோடுபர மன் துதி நீட
(பட்டாபி)

Printed at the 'Caxton Press,' Madras, E. — 1920.

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

பாட புத்தகங்கள்

	ரூ.	அ.	பை.
முதல் பாட புத்தகம்	0	2	6
இரண்டாம் பாட புத்தகம்	0	3	0
மூன்றாம் பாட புத்தகம்	0	4	0
நான்காம் பாட புத்தகம்	0	5	0
ஐந்தாம் பாட புத்தகம்	0	7	0
ஆறாம் பாட புத்தகம்	0	7	0
ஏழாம் பாட புத்தகம்	0	8	0
எட்டாம் பாட புத்தகம்	0	9	0
ஒன்பதாம் பாட புத்தகம்	0	9	0

திராவிட வாசகங்கள்

திராவிட பால பாடம்	0	2	6
முதல் திராவிட வாசகம்	0	2	6
இரண்டாம் திராவிட வாசகம்	0	3	0
மூன்றாம் திராவிட வாசகம்	0	4	0
நான்காம் திராவிட வாசகம்	0	5	0

நூதன வாசக புஸ்தகங்கள்

நூதன முதல் வாசக புஸ்தகம்	0	2	6
நூதன இரண்டாம் வாசக புஸ்தகம் ...	0	3	0
நூதன மூன்றாம் வாசக புஸ்தகம்... ...	0	4	0
நூதன நான்காம் வாசக புஸ்தகம் ...	0	5	0

கணித புத்தகங்கள்

புதுச் சட்டக் கணிதம் 4-ஆம் வகுப்பு ...	0	7	0
புதுச் சட்டக் கணிதம் 3-ஆம் வகுப்பு ...	0	5	0
புதுச் சட்டக் கணிதம் 1·2-ஆம் வகுப்பு ...	0	2	6